கல்கி

KALKI 24-3.91 ரூ. 2.50



ஜெயலலிதா முதல்வரானால் எப்படி நடந்துகொள்வார்?

நோன்பின் மகத்துவம்

விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது; (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.

2:183

''ரமலான் மாதம்: எத்தகைய (மகத்துவமுடைய) தென்றால், அதில்தான், மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும், உள்ள திருக்குர் ஆன் (என்னும் இவ்வேதம்) அருளப்பெற்றது. ஆகவே, உங்களில் எவன் அம்மாதத்தை அடைகிறானோ அவன், அதில் நோன்பு நோற்கவும்.

2:185







நஷ்டத்திற்கென்றே மேலும் ஒரு கார்ப்பரேஷன்!

இதுவரை சுமார் 680 லட்ச ரூபாய் நஷ்டம். எதில் என்கிறீர்களா? எல்லாம் நமது தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கார்ப்பரேஷனில்தான்! மீன் வளத்தில் மேம்பாடு காணா விட்டாலும் இத்தனை பெரிய நஷ்டம் அடைவதில் எப்படி மேம்பாடு ஏற்பட்டது?

''ஆழ்கடலில் மீன் பிடித்தலை விரிவாக்கி வளர்க்கவில்லை; கிடைத்த மீன்களை விற்பனை செய்வதற்கும் போதிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை; மீன்களைப் பதப்படுத்திப் பக்குவப்படுத்துவதற்கான முயற்சிகளிலும் அக்கறை காட்டவில்லை; மீன் வளத்துறைக்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள் தயாரிப்பதிலும் குறித்த திறனை எட்டவில்லை; மீன் வலைத் தயாரிப்பிலும் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இரண்டு மீன்பிடி விசைப்படகுகள் மூலமும் கிடைத்த சிறிதளவு லாபத்தையும் மற்ற நடவடிக்கைகள் மூலம் கோட்டை விட்டு விட்டது...'' என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகிறது மார்ச் 31, 1989 வரையிலான சி. ஏ. ஜி. யின் அறிக்கை. (கன்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல்.)

கடந்த 74 லிருந்து இன்று வரை வியாபார உத்திகள் அடிப்படையிலான கொள்கைகள் எதையும் உருவாக்கி, எதெதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செயல்படாததுதான் கார்ப்பரேஷனின் இத்தனை நஷ்டங்களுக்கும் காரணம் என்று சாடிக் கொண்டே போகிறது அறிக்கை.

தமிழகம் முழுவதும் விற்பனையாகிக் கொண்டிருக்கிற மொத்த மீன்களில், மீன்வள மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் வெறும் 0.22 சதவிகித மீன்களைத்தான் விற்பனை செய்து கொண்டிருக்கிறது. காரணம், ஐம்பதாயிரம் மக்கள் தொகையுள்ள நகரங்களிலும் ஊர்களிலும் விற்பனை நிலையங்களைத் துவக்குவதற்கான நடவடிக்கைகள் எதையுமே எடுக்காமல், வெறுமனே ஏழே ஏழு மாவட்டங்களில் மட்டுமே தனது விற்பனையைக் கட்டுப்படுத்திக் கொண்டதுதான்!

இதே மெத்தனம்தான் மீன்களைப் பதப்படுத்துவதிலும் காட்டியிருக்கிறது கார்ப்பரேஷன். அதற்கென்று புதிய திட்டங்கள் தீட்டினால் தனது 'மூளை' செலவழிந்து போகும் என்கிற அச்சத்தாலோ என்னவோ, வெறுமனே மீன்வளத் துறையிடமிருந்து மூன்று பதப்படுத்தும் நிலையங்களையும் நான்கு ஐஸ் பிளாண்ட்களையும் சிரமமில்லாமல் எடுத்துக் கொண்டதோடு, விட்டுவிட்டது கார்ப்பரேஷன்.

இதுமட்டுமா? தான் எதையோ சாதிக்கப் போவதாக ஆரம்பத்தில் மீன் வளத்துறையிடமிருந்து படகு கட்டும் தளங்கள் நான்கையும் முல்லை, மருதம், என்ற இரண்டு மீன்பிடி விசைப்படகுகளையும் எடுத்துக் கொண்டது கார்ப்பரேஷன். நடந்தது என்ன தெரியுமா? படகு கட்டும் தளங்களைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தால் அதில் மட்டும் 330 லட்சம் ரூபாய் நஷ்டம். விசைப்படகுகள் விஷயத்திலும் இருபது லட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டதால் கடைசியில் அவற்றை விற்றும் விட்டது.

சி. ஏ. ஜி. யின் இந்த அறிக்கை 89 மார்ச் வரைக்கான அறிக்கைதான். அதற்குப் பிறகு, நமது மீன்வள மேம்பாட் கார்ப்பரேஷன் இன்னும் எத்தனை சுறு சுறுப்பாக நஷ்டமடைந்து கொண்டிருக்கிறதோ, யார் கண்டது!

— நமது நிருபர்



ஜெயலலிதா முதல்வரானால் எப்படி நடந்துகொள்வார்?

"நீங்கள் தவறு செய்து விட்டீர்கள்; ஜெயலலிதாதான் அடுத்த முதல்வர் என்கிற கருத்து மக்களிடையே உருவாவதற்கு, நமது தோழமைக் கட்சிகளே காரணமாகி விட்டன. இந்தத் தேர்தலில் நமக்கிருக்கிற மிகப் பெரிய ஆபத்தே இதுதான்!" என்று அண்மையில் சென்னைக்கு வந்திருந்த ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான ஜெய்பால் ரெட்டி, தோழமைக் கட்சித் தலைவர்களிடம் பேசும் போது குறிப்பிட்டாராம்.

"ஜெய்பால் ரெட்டி குறிப்பிட்டதில் உண்மையிருக்கிறது" என்கிறார் ஜெ. கட்சியின் தோழமைக் கட்சிப் பிரமுகர் ஒருவர். "நமது நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலோர் கட்சி சார்பில்லாத மக்கள்தான். அவர்கள் பெரும்பாலும் ஜெயிக்கிற மாதிரி தோன்றுகிற கட்சிகளுக்கே வோட்டுப் போட்டுப் பழக்கப்பட்டவர்கள். அந்த வகையில் பார்த்தால் அவர்கள் வரப் போகிற தேர்தலில் ஜெ. கட்சிக் கூட்டணிகளுக்குத்தான் வோட்டுப் போடுவார்கள்!" என்று அடித்துச் சொல்கிறார் அவர்.

"தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதில் நிலவும் அதிருப்தி, தி.மு.க. கூட்டணிக்குச் சாதகமாகத் திரும்பாதா?" என்று கேட்ட போது, "தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது அநியாயம் என்று பேசுபவர்களெல்லாம் யார்? பெட் காப்பியும் கையுமாகப் பேப்பர் படித்துக் கொண்டிருப்பவர்கள்தான்! அவர்களில் பெரும்பாலோர், கியூவில் நின்று வோட்டுப் போடவே வரமாட்டார்கள் என்பதால், அந்த அனுதாபமெல்லாம் வெறும் விமர்சனங்களுடனேயே நின்று விடும்!" என்கிறார் அவர்.

அவர் சொல்வதை நம்மால் முழுமையாக ஒப்புக் கொள்ள முடியாது என்றாலும், தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது அக்கிரமம்தான் என்று அடித்துச் சொல்பவர்களெல்லாம், மீண்டும் தி.மு.க. ஆட்சி வருவதைத்தான் விரும்புகிறார்கள் என்றும் சொல்ல முடியாது. இதோடு, ஜெய்பால் ரெட்டி குறிப்பிட்ட மாதிரி, 'ஜெயலலிதாதான் அடுத்த முதல்வர்' என்று பரவலாகப் பரவி விட்ட கருத்தும் வோட்டுப் போடுகிற மக்களின் மனநிலையை ஜெயலலிதாவுக்கே சாதகமாக்கும் என்பதால், அவருடைய வெற்றி பிரகாசமாகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில், யாருக்கும் தேர்தலில் வெற்றி பெற்று, முதல்வராகும் உரிமை இருக்கிறது; அது ஜெயலலிதாவுக்கும் இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனாலும் பதவியில் இல்லாத போதே ஒரு பட்டத்து ராணியின் தோரணையோடு நடந்து கொள்கிற ஜெயலலிதா —

தமது கட்சியிலுள்ள மூத்த தலைவர்களையெல்லாம் கூட சமயம் கிடைக்கிறபோதெல்லாம் அவமானப்படுத்தத் தயங்காத ஜெயலலிதா — எம். ஜி. ஆர். காலத்தில் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தபோதே, பெரிய பெரிய அரசு அதிகாரிகளெல்லாம் வந்து, தமது கார்க் கதவுகளைத் திறந்து விடுவதைக் கண்டு பழகிப் போன ஜெயலலிதா — முதல்வர் ஆசனத்தில் அமருகிற போது, இன்னும் எப்படியெப்படியெல்லாம் நடந்து கொள்வாரோ என்னவெல்லாம் எதிர்பார்ப்பாரோ என்கிற சந்தேகமும் அச்சமும் சிந்திக்கத் தெரிந்த பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதுதான் பிரச்னை.

ஆனால், ''இதுவொரு பிரச்னையே இல்லை. அவர் பதவிக்கு வந்த பிறகு, இந்தச் சந்தேகமும் அச்சமும் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். அந்த அளவுக்கு அவர் திறமையாகவும் கண்ணியமாகவும் செயல்படுவார்!'' என்கிறார் இ. காங்கிரஸைச் சேர்ந்த ஒரு முக்கிய பிரமுகர். ''உதாரணத்திற்கு, ராஜ்ய சபையின் துணைத் தலைவராக ஜெயலலிதா நியமிக்கப்பட்ட போது, அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதைப் பாரபட்சமில்லாமல் யோசித்துப் பாருங்கள்...'' என்று விளக்குகிறார் அந்தப் பிரமுகர்.

''ராஜ்ய சபையில் ஒரு பொறுப்புள்ள எம். பி. யாகவே ஜெயலலிதா செயல்பட்டார். குறிப்புகள் எடுத்துக் கொள்ளாமல், அவர் சபைக்கே சென்றதில்லை. இதன் காரணமாக, மாற்றுக் கட்சி எம்.பிக்களெல்லாம் கூட, அவருடன் பழகுவதை ஒரு மரியாதைக்குரிய விஷயமாகக் கருதினார்கள் என்பது எனக்கே தெரியும்!'' என்கிறார் அவர்.

''இதே கண்ணியத்தைத்தான் அவர் அரசு அதிகாரிகள் விஷயத்திலும் கடைப்பிடித்தார். எந்த அதிகாரியும் வந்து, தமது கார்க் கதவுகளைத் திறந்து விட வேண்டுமென்று அவர் எதிர்பார்த்ததேயில்லை. அதெல்லாம் எம். ஜி. ஆர். செய்த வேலை. அதற்கு ஒரு பின்னணி இருக்கிறது!

எம். ஜி. ஆர். உள்பட எந்த அரசியல் கட்சித் தலைவருமே, கட்சியில் தமக்குப் போட்டியாக ஒருவருக்குக் கூட்டம் கூடுவதையோ, செல்வாக்கு வளருவதையோ விரும்பியதாகச் சரித்திரமே கிடையாது. அந்த வகையில், ஜெயலலிதா தமக்குப் போட்டியாகவோ அல்லது அடுத்தபடியாகவோ வளருவதை எம். ஜி. ஆரும் விரும்பவில்லை. அதனால்தான் ஜெயலலிதாவுக்கு ராஜ்யசபையின் தலைவர் பதவியைக் கொடுக்காமல் துணைத் தலைவர் பதவியைக் கொடுத்தார் அவர். அதே போல் கட்சிக்குள்ளும் எந்தவிதமான அதிகாரமுமில்லாத கொ. ப. செ. பதவியைக் கொடுத்தார்.

''ஆனாலும் தம்முடைய இந்த அணுகுமுறை ஜெயலலிதாவுக்குத் தெரிந்து விடக் கூடாது — இந்தப் பதவிகளிலேயே தமக்கு எக்கச்சக்கமான அதிகாரங்கள் இருப்பதைப் போன்றதொரு பிரமை ஜெயலலிதாவுக்கு ஏற்பட வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் எம். ஜி. ஆர் அதிகாரிகளை அப்படி நடந்து கொள்ளச் செய்தார். கட்சிக் கூட்டங்களில் கூட ஜெயலலிதாவைக் கண்டால் மற்றவர்கள் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென்ற ஏற்பாட்டையும் செய்தார்.

''இருப்பினும் இதெல்லாம் ஒரு கால கட்டத்தில் ஜெயலலிதாவுக்குத் தெரிந்து போய் விட்டது. விரக்தியும், கட்சியிலுள்ள மற்றவர்கள் மேல் வெறுப்பும் சந்தேகமும் வந்து விட்டன. அதன் பிறகுதான், அவர், அரசியல்வாதியல்லாத — அரசு அதிகாரியான நடராஜனைத் தமது அரசியல் ஆலோசகராக வைத்துக் கொண்டார்.

''இன்றைக்கும் தமது கட்சியிலுள்ள சக தலைவர்களை ஜெயலலிதா நம்பவில்லை என்பது உண்மைதான். காரணம், அவர்களில் யாருமே தமக்கு விசுவாசமானவர்கள் அல்ல — அனைவருமே தங்களது அரசியல் வாழ்வுக்கு, ஜெயலலிதாவின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் அவருடைய கட்சியில் இருக்கிறார்கள் என்பது அவருக்கு மிக நன்றாகத் தெரியும்.



''ராஜ்ய சபையில் திட்டமிட்டுச் செயல்பட்ட ஜெயலலிதாவால், தமிழக சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராகச் செயல்பட்டிருக்க முடியாதா? நிச்சயமாக முடிந்திருக்கும். ஆனால், கண்ணியம் காக்கப்பட வேண்டிய சட்டசபைக்குள்ளேயே அவர் அவமானப்படுத்தப்பட்ட போது, வெளியில் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ என்கிற பயம் அவரைப் பிடித்துக் கொண்டு

விட்டது.

"ஆரம்பத்திலேயே எம். ஜி. ஆரால் ஏமாற்றப்பட்டது; அதன் பிறகு தமது கட்சியின் சக தலைவர்களே தம்மையொரு கருவியாக மட்டுமே பயன்படுத்திக் கொண்டு செயல்படத் திட்டமிட்டது; அடுத்ததாகச் சட்டமன்றத்தில் அவமானப்படுத்தப் பட்டது; அது போதாதென்று, தைரியமாக வெளியில் சென்று மக்களைச் சந்திக்க முடியாதபடி ஒருவித பயத்தைத் தி.மு.க.வினர் ஏற்படுத்தியது என்று ஒவ்வொரு கட்டத்திலும் அவர் அரசியல் ரீதியாகத் தோல்விகளையே சந்தித்துக் கொண்டிருந்தார். இவை அத்தனையும் ஒன்று சேர்ந்த விரக்தியில்தான் அவர் அடிக்கடி தலைமறைவானார். அரசியலிலிருந்தே கூட விலகி விடுவதென்று முடிவெடுத்தார். அது நாடகமல்ல; நிஜமான முடிவுதான். ஆனால் அந்த விஷயத்தில் கூட அவர் சுதந்திரமாகச் செயல்பட தி.மு.க.வினர் விடவில்லை. அவசரப்பட்டு அவரது ராஜினாமாக் கடிதத்தைக் கைப்பற்றி வெளியிட்டு விட்டார்கள். அதனால், அவரது விரக்தி கடைசியில் ஒருவித மூர்க்கத்தனமான போராட்ட உணர்வாகவே மாறி விட்டது.

"தாம் இனி சுதந்திரமாக இருக்க வேண்டுமானால் முதலில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டே ஆக வேண்டும் என்று கருதினார். அதற்குத் தகுந்தாற்போல் மத்தியில் சந்திரசேகர் பிரதமரானார். அவருக்கு ஜெயலலிதா கட்சியின் தயவு தேவைப்பட்டது. காரியம் சுலபமாகக் கை கூடி விட்டது! இப்போதுதான் ஜெயலலிதாவுக்குச் சுதந்திர உணர்வே வந்திருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

"இத்தனை போராட்டங்களுக்குப் பிறகு, இப்போது சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கப் போகிற அவர், வெற்றி பெற்று, முதல்வர் ஆசனத்தில் அமருகிற போது, நிச்சயம் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் தமது முழுத் திறமையையும் பயன்படுத்தித் திறம்பட நிறைவேற்றுவார் என்பதில் என் போன்றவர்களுக்குச் சந்தேகமேயில்லை!"

அந்த இ. காங்கிரஸ் பிரமுகர் மட்டுமல்ல; நாம் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசிய வேறு சில அரசியல் பிரமுகர்களும் ஏறத்தாழ இதே கருத்தைத்தான் சொன்னார்கள் என்பது நமக்கு ஆச்சரியமாக இருந்தது! ஆயினும் அவரது உடல் நிலை அவரது சுறுசுறுப்பான செயல்களுக்கு இடங்கொடுக்குமா? இந்தக் கேள்வியை அவர்களிடம் கேட்ட போது, "ஏன், சென்ற தேர்தலுக்கு முன்பு, கலைஞர் கூடத்தான் உடல்நலம் குன்றியிருந்தார். வெற்றி பெற்று முதல்வரானதும் அந்தச் சந்தோஷமே அவரது ஆரோக்கியத்தைப் பலப்படுத்தவில்லையா? அது போல், பதவி வந்தால் கூடவே ஒரு புதிய பலமும் வந்து விடும் பாருங்கள்!" என்கிறார்கள்.

ஆனால் அத்தனை சுலபமாக ஒதுக்கி விட்டுப் போகக் கூடிய பிரச்னையாக அது நமக்குத் தோன்றவில்லை. நமது நாட்டில் பொதுவாக எந்தக் கட்சியிலுமே தனிநபர் வழிபாடும், தனிநபர் செல்வாக்கும்தான் அதிகம். கட்சியின் முக்கிய தலைவர்கள், கூட்டுப் பொறுப்பு ஏற்று, கட்சியையோ ஆட்சியையோ நடத்திச் செல்வது என்பது அநேகமாக இல்லை. மந்திரி சபை என்று இருந்தாலும் பெரும்பாலும் முதல்வர்தான் எல்லா முக்கிய முடிவுகளையும் எடுக்கிறார். தமது இலாக்காக்களை கவனிப்பதுடன், பிற இலாக்காக்கள் விஷயத்திலும் வழிகாட்டுகிறார்; முடிவுகள் எடுக்கிறார்.



"ஏன் தாத்தா, டி. வி. வர்றதுக்கு முன்னாலே, தாத்தா பாட்டிங்களுக்கெல்லாம் சாயந்திரம் எப்படிப் பொழுது போச்சு?"



"செலவழிச்சு டிக்கெட் வாங்கி என்னாங்க பிரயோஜனம்? பிளாக் மார்க்கெட்லே விக்க முடியாதாமே...!"

— ரசனா.

ருசித்துப் பாருங்கள்



பொடி வகைகள்

1. இட்லி மிளகாய்ப் பொடி
2. கறிவேப்பிலைப் பொடி
3. ஊறுகாய்ப் பொடி
4. பருப்புப் பொடி
5. ரசப் பொடி
6. சாம்பார்ப் பொடி
7. தேங்காய்ப் பொடி
8. வெத்தகுழம்புப் பொடி
9. எள்ளுப் பொடி
10. கொத்தமல்லிப் பொடி
11. பூண்டுப் பொடி
12. கரமதுப் பொடி
13. அடைமாவு

காரவகைகள்

1. சீடை
2. சீப்புச்சீடை
3. செய்க்கோட்டி
4. புளிக்காச்சல்
5. மிளகுவடை

இனிப்பு வகைகள்

1. அதிரசம்
2. பொறிவிளங்காய் உருண்டை
3. வெல்லச் சீடை
4. இனிப்பு ஸோமாஸ்
5. மங்களூர் போளி
6. தேங்காய் போளி
7. தஞ்சாவூர் மனோகரம் உருண்டை
8. திருநெல்வேலி மனோகரம் உருண்டை
9. மாலாடு
10. எள்ளு உருண்டை
11. பொறி உருண்டை

திருமண வைபவங்களுக்கு

சீர்முறுக்கு, சீர் அதிரசம், சீர்முள்ளுத் தேன்குழல், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

கிராண்ட் ஸ்வீட்ஸ்

வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு
காந்திநகர், அடையாறு,
சென்னை - 20.
போன் : 412557

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது போல், 'முதல்வரின்றி ஒரு காரியமும் நடக்காது' என்ற கதைதான். வோட்டுப் போடும் மக்கள் கூட, 'இன்னார் முதல்வராக வருவார்; நல்லாட்சி வழங்குவார்' என்ற எதிர்பார்ப்பில், அந்தத் தனிநபரைக் கருதித்தான் வோட்டுப் போடுகிறார்கள். இப்போதும் எம். ஜி. ஆரை உள்ளத்தால் எண்ணி, ஜெயலலிதாவை முதல்வராகக் கருத்தில் கொண்டுதான் வோட்டுப் போடுவார்கள்.

எனவே, "ஜெயலலிதாவின் உடல்நிலை சீராக இருக்கிறது; அவர் ஒரு மாநிலத்தை ஆள்வதில் உள்ள மலை போன்ற பிரச்னைகளையும் பொறுப்புக்களையும் தாங்கி, சிறந்த நிர்வாகத்தை வழங்கக்கூடிய ஆரோக்கியம் பெற்றிருக்கிறார்" என்பது மக்களுக்கு உறுதியாகத் தெரிய வர வேண்டும். இதைத் தெரிவிப்பது ஜெயலலிதாவின் கடமையும் கூட. அவரைக் கவனித்து வரும் டாக்டர்கள், தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கும் முன்னரே இத்தகைய ஒரு கூட்டறிக்கையை வெளியிட வேண்டும். பதவிக்கு வந்த பிறகு பொறுப்புக்களை நிறைவேற்ற உடல்நலம் இடம் தரவில்லையெனில், தமிழகத்தின் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்படும். எம். ஜி. ஆர். காலத்தில் நடந்தது நமக்கு இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது அல்லவா?

ஜெயலலிதாவின் சரீரம் பருத்து வருவதைப் பார்க்கும்போது பலருக்கும் 'அவர் கார்ட்டிஸோன் சாப்பிட்டு வருகிறாரோ?' என்ற எண்ணம் ஏற்படுகிறது. கார்ட்டிஸோன் மருந்து ரொம்பவும் வீரியம் உள்ளது. அவ்வளவு வீரியம் உள்ள மருந்து சாப்பிடும் அளவுக்கு அவர் உடல்நிலையில் கோளாறு எனில், அது கவலை அளிக்கும் விஷயமே. இப்படியெல்லாம் இல்லை; அவர் உடல்நிலை பற்றிக் கவலைப்படவே அவசியமில்லை எனில் அதையும் ஒரு டாக்டர் குழு அறிக்கையாகக் கூறி விட்டால் மக்களுக்கும் நிம்மதி; வதந்திகளுக்கும் இடமிராது.

ஒருவேளை தாம் முதல்வர் பொறுப்புக்களை ஏற்காமல் வேறு ஒருவரை நியமித்துத் தாம் கட்சித் தலைவராக மட்டும் இருந்துகொண்டு, செல்வாக்குச் செலுத்தி வழிகாட்டிக் கொண்டு போகலாம் என்பதாக ஜெயலலிதா எண்ணியிருந்தால், அதையும் இப்போதே கூறி, கூடுமானால் முதல்வராக அவர் யாரை நியமிக்க உத்தேசித்திருக்கிறார் என்பதையும் வெளியிட்டு விடுவதே முறையாகும். 'ஜெயலலிதா முதல்வராவார்' என்று எதிர்பார்த்து வோட்டுப் போடும் மக்களுக்கு, ஒரு கடுமையான ஏமாற்றத்தைப் பின்னால் உண்டாக்கும் உரிமை ஜெயலலிதாவுக்கே கூட இல்லை!

— இளங்கோவன்

படங்கள்: சுபா



பாரதிய ஜனதா மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்துகிறதா?

பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு முதல் முறையாகச் சென்னை வந்த முரளி மனோகர் ஜோஷியைச் சந்தித்த போது...

நிருபர்: ஜாதி ரீதியாக மக்களை வி. பி. சிங் பிரித்து விட்டார் என்று குற்றம்சாட்டு கிறீர்கள். ஆனால் உங்கள் கட்சி மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்துகிறதே?

முரளி மனோகர் ஜோஷி: உங்கள் வாதம் தவறானது. கலாசார ரீதியாக மக்களை ஒன்றுபடுத்தவே பா. ஜ. க. முயல்கிறது. வேறுவிதமான உடை அணிவதாலோ, அல்லது வேறு வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதாலோ, ஒருவர் தன் நாட்டின் புராதன கலாசாரத்திலிருந்து தம்மை மாற்றிக் காண்பித்துக் கொள்ள முடியாது. நமது மக்களின் — அவர்கள் எந்த மதமாக இருந்தாலும் சரி, ஏழைமை பொதுவானது. அவர்கள் எண்ணங்கள், அபிலாஷைகள் எல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. வேறு மதத்தினராக இருப்பதால் அவர்கள் நமது நாட்டிற்கு எதிரி என்பதும் கிடையாது. எல்லோரும் இந்தியர்கள். பொதுவான கலாசாரம் அவர்களுக்கும் சொந்தமானது. இந்த அடிப்படையில்தான் நாங்கள் பகவான் ராமரைக் கலாசாரத்தின் சின்னமாகப் பார்க்கிறோம். இந்தோனேஷியா நாடு ஒரு முஸ்லீம் நாடு. அந்த நாட்டு மக்கள் ராமருக்குக் கொடுக்கும் மரியாதை பிரமிக்கத்தக்கது.

நிருபர்: இந்து மதத்திலேயே பல பிரிவுகளுக்குள் ஏற்றத்தாழ்வு இருக்கிறதே?

ஜோஷி: பிறப்பை வைத்துக் கொண்டு பாகுபாடு காண்பிப்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அவற்றை ஒழிக்கப் பாடுபடுகிறோம். சட்டத்தினால் ஒன்றும் செய்ய முடியாது. மக்களின் எண்ணங்களை மாற்ற வேண்டும். இது ஒரு சமுதாயப் பணி.

நிருபர்: அயோத்தி பிரச்னை உச்சகட்டத்தில் இருந்த போது, சங்கராச்சாரியார் தலைமையில், தீர்வு காண ஒரு கமிட்டி அமைக்கப்படுவதாக இருந்தது. ஆனால் நீங்கள் 'ராமர் ஒரு வைஷ்ணவக் கடவுள். அவரது கோயில் தொடர்பான பிரச்னையில், ஒரு சைவ சமயத் தலைவரை ஈடுபடுத்தக் கூடாது' என்று கூறினீர்களே?

ஜோஷி: நான் சொன்னதாகத் தவறாகப் பரப்பப்பட்டு வரும் கருத்து அது. ராமரே சிவபூஜை செய்ததாக வரலாறு இருக்கிறது. மேலும் காஞ்சிபுரம் மடத்தின் மீதும், அதன் தலைமையிலும் எனக்குப் பெரிய மரியாதை உண்டு. பிரச்னைகளைப் போட்டுக் குழப்ப வி. பி. சிங் அரசு செய்த பல சதித் திட்டங்களின் காரணமாகத்தான் இதுபோன்ற செய்திகள் வரலாயின. சங்கராச்சாரியாரை ஒரு பக்கம் தொடர்பு கொண்டு விட்டு, மறு பக்கம் அயோத்தியிலுள்ள சாமியார்களைச் 'சைவம் — வைஷ்ணவம்' என்று பேசுமாறு தூண்டிப் பிரச்னையைக் குழப்ப முயன்றது வி. பி. சிங் அரசுதான். என் பெயர் இந்தச் சச்சரவில் தொடர்புபடுத்தப்படுவது அபாண்டம்.'

நிருபர்: இந்து மதத்தின் பல பிரிவுகளுக்குள் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது.என்றீர்கள். இந்த அடிப்படையில் ஓர் அரிஜன் அர்ச்சகராவதை உங்கள் கட்சி ஆதரிக்குமா?

ஜோஷி: அரிஜன் ஏன் அர்ச்சகராகக் கூடாது? அந்த அரிஜன், வேதம் மற்றும் முறைப்படி பயிற்சிகள் பெற்றுக் கொண்டு வந்தால், அவரை அர்ச்சகராக்குவதில் என்ன தவறு? ஏற்கெனவே விஸ்வஹிந்து பரிஷத்தின் சார்பாக நடக்கும் பல வேதப் பள்ளிகளில் பல தாழ்த்தப்பட்டவர்கள், கற்றுக் கொள்ளத் துவங்கியிருக்கிறார்கள். பலருக்குப் பூஜை, புனஸ்காரங்களில் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது.

நிருபர்: ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து?

ஜோஷி: எங்கள் தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டு இருக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்களைத் தவிர, சமூக பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். இது தவிர, வருமான அடிப்படையிலும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதையும் சொல்லி இருக்கிறோம். அதே சமயத்தில் இட ஒதுக்கீடு என்பது எந்தக் காலத்திலும் நீடித்துக் கொண்டே போவதாக இருக்கக் கூடாது. எவ்வளவு விரைவில் சமுதாயத்தைச் சரிசமமாகக் கொண்டு வர முடியுமோ, அவ்வளவு விரைவாகக் கொண்டு வர வேண்டும்.

பேட்டி: **தில்லப்பா**

படம்-நன்றி: **தினமலர்**

"நடக்கப் போவது குருக்ஷேத்திரப் போர். 'மண்டல்' என்னும் காண்டீபத்தைக் கையில் ஏந்தியிருக்கிறார் அர்ஜுனனான வி. பி. சிங். அந்தக் காண்டீபத்தில் 'மதச் சார்பின்மை' என்ற நாண் ஏற்றப்பட்டிருக்கிறது. துரோகிகளான துரியோதனர்கள் கூட்டம் துண்டைக் காணோம்; துணியைக் காணோம் என்று ஓடப் போகிறது..." என்று ஜனதா தளத்தின் பேச்சாளர் ஒருவர் மூச்சு விடாமல் பேசிய போது, அரங்கமே கைத்தட்டலில் அதிர்ந்து போனது.

கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஜனதாத் தள பிரதிநிதிகள் அந்த அரங்கத்தில் நிறைந்திருந்தனர். அத்தனை பேரும் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து தங்களது கைப் பணத்தை செலவு செய்து கொண்டு வந்திருக்கும் பிரதிநிதிகள். பல மாதங்களுக்குப் பிறகு, சிவாஜி கலந்து கொள்ளும் நிகழ்ச்சி. சிறப்புகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் வி. பி. சிங்! தமிழக ஜனதாத் தளத்தினர் நடத்திய அந்த மாநாட்டில் சேலம் நகரமே குலுங்கிப் போய் விட்டது.

"ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுப் போன எங்களுக்கு வி. பி. சிங்தான் விடிவெள்ளியாகத் தோன்றியிருக்கிறார். வரும் தேர்தலில் ஜனதா தளம் தோற்றாலும் சமூக நீதிக்கான நீண்டகாலப் போராட்டத்தில் அவர் நிச்சயம் வெல்வார்" என்று அத்தனை நம்பிக்கையோடு சொன்னார் கன்னியாகுமரியிலிருந்து வந்திருந்த தனசேகரன் என்ற தொண்டர். அவர் மட்டுமல்ல; மாநாட்டில் பேசிய பிரதிநிதிகள் அனைவருமே வி. பி. சிங்கைக் 'கிருஷ்ண பரமாத்மா' என்றும் 'அம்பேத்காரின் அவதாரம்' என்றும்தான் குறிப்பிட்டார்கள்.

"தொண்டனாக இருந்து மற்றவர்

ஜனதா தளம்:

சேலம் மாநாட்டில்



• மாநாட்டு ஊர்வலம்



• மேடையில்...

சில சலசலப்புகள்!

களுக்குத் தோள் கொடுத்தே பழகி விட்டது. அந்த என் பரிதாப நிலைமையைக் கேலி செய்யாமல், எனக்குத் தமிழ்நாடு ஜனதா தள தலைவர் என்ற ரோலைத் தந்திருக்கிறார் வி.பி.சிங். உங்களுக்குத்தான் தெரியுமே? எந்த ரோல் கொடுத்தாலும் நான் வெளுத்துக் கட்டி விடுவேன் என்று!'' — இப்படி ஆரம்பித்தார் சிவாஜி.



• நாயகன் வி.பி.சிங்

ஜனதா தளத் தலைவரான எஸ். ஆர். பொம்மைக்குக் கூட்டத்தைப் பார்த்தவுடன் உற்சாகம் பொங்கிக் கொண்டு போயிற்று. ''தமிழர்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் ஜனதா தளம் இடம்பெற்றிருக்கிறது. 'எங்கே அந்த கட்சி' என்று கேட்டவர்களுக்குச் சரியான பதிலடி தந்தீர்கள். நமது தோழமைக் கட்சியான தி.மு.க. வினருக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். வளர்ந்திருக்கும் எங்கள் செல்வாக்கைக் கணக்கில் கொண்டு, தொகுதிப் பங்கீடுகளைச் செய்து கொள்ளவும்'' என்று ஒரு போடு போட்டார். கூட்டம் ஆரவாரம் செய்தது.

ஆனால் மேடையில் இருந்த தலைவர்களோ நெளிந்தார்கள். அதில் மிகவும் சங்கடப்பட்டவர் சிங்!

பொம்மைதான் இப்படிப் பேசி விட்டுப் போய் விட்டார் என்றால், ஹெக்டேயும் தன் பங்குக்குக் கொஞ்சம் 'கிள்ளி' விட்டுத் தான் போனார். ''ஜனதா தளத்துடன் கூட்டு வைத்திருப்பது, தங்களுக்கு எவ்வளவு ஆதாயமாகி இருக்கிறது என்பதைத் தி.மு.க. வினர் கூடிய சீக்கிரம் உணர்வார்கள்'' என்றார் ஹெக்டே!

இன்று ஜனதா தளத்தில் அனைத்



''இப்ப நீங்க எழுதற 'புயல்'ன்ற தொடர்கதை ஏற்கெனவே வேறொரு பத்திரிகையிலே எழுதப் போறதா விளம்பரம் வந்திருந்ததே. இப்போது அதை விட்டுட்டு இன்னொரு பத்திரிகையில் எழுதறீங்களே, ஏன்?''

''என்ன பண்றது? திசை மாறிடுச்சு!''

இந்திய ரீதியில் உள்ள ஒரே 'மக்கள் தலைவர்' வி. பி. சிங்தான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் மனிதர் அடிக்கடி 'ஸேம் சைட்' கோல் போட்டுவிடுகிறார் என்பது மற்ற தலைவர்களின் ஆதங்கம். ''கட்சிப் பதவிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், நலிவுற்றவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும், இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்'' என்று அவர் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் அறிக்கை, தமது கட்சிக்காரர்களையே தாக்கும் 'ஸ்கட்'டாகி இருக்கிறது. ஆயினும் சிங்கோ, ''தேர்தலுக்கு முன்பு நாம் இதைச் செய்தால்தான் மக்கள் நம்மை நம்புவார்கள்'' என்று அடித்துச் சொல்கிறார்!

''உங்களின் இந்த அதிர்ச்சியான அறிவிப்பால் கட்சியே பலவீனப்படும் வாய்ப்பிருக்கிறதே?'' என்று நாம் கேட்டபோது, ''எனக்கு யாருடனும் கருத்து வேறுபாடு கிடையாது. என்னுடைய கருத்துக்கு மாறாக யாராவது சொன்னார்கள் என்றால், நீங்கள் அதற்கான காரணத்தை அவர்களிடம்தான் கேட்க வேண்டும். நான் கட்சியின் சாதாரண ஊழியன்தான்'' என்கிறார் சிங்! கூடவே தொடர்ந்து, ''நான் ஏதோ பிற்பட்டவர்களின் நலனுக்காக மட்டுமே போராடி வருவதானதோர் எண்ணம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. பல சமயங்களில் நான் வருமானத்தை அளவுகோலாக வைத்து, எந்த வகுப்பாக இருந்தாலும் இட ஒதுக்கீடு செய்யத் தயார் என்றும் பேசியுள்ளேன். இது தவிர, நல்ல புத்திசாலியான, ஆனால் ஏழை இளைஞர்களுக்கு பெட்ரோல் பங்க், காஸ் ஏஜென்ஸி போன்றவற்றைக் கொடுக்கலாம் என்றும் பேசியிருக்கிறேன். ஆனால் பத்திரிகைகள் இதையெல்லாம் கண்டுகொள்வதில்லையே'' என்றும் வருத்தப்பட்டார்!

அன்று மாலையில் சேலத்தின் நெருக்கடியான தெருக்களில் ஊர்வலம். 'பார் சிறுத்ததோ; படை பெருத்ததோ' என்கிற அளவுக்குக் கூட்டம் இல்லாமல் போனாலும், சேலம் நகரத்தில் நடந்த பெரிய ஊர்வலங்களில் இதுவும் ஒன்றுதான்!

ஊர்வலத்தின் முடிவில், போஸ் மைதானத்தில் நடந்த பொதுக் கூட்ட மேடைக்கு அடியில் வெடிகுண்டு வைத்திருப்பதாகச் செய்தி வர கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது. ''சிகிச்சைக்கு வெளிநாடு போக வேண்டி வந்தது. அதற்குப் பதிலாக இதுபோன்ற கட்சி மேடையில் வெடிகுண்டு வெடித்துச் சாவதையே மேலாக நினைக்கிறேன்'' என்று உணர்ச்சிவசப்பட்டு சிவாஜி பேசியபோது, கூட்டம் ஏனோ மௌனத்தில் ஆழ்ந்து போனது. வயதில் மூத்தவரான எஸ். ஆர். பொம்மை, தம்மை அண்ணன் என்று அழைத்ததைக் குறிப்பிட்ட சிவாஜி, ''அரசியல் பாருங்கப்பா... பெரியவரைச் சின்னவனாக்குது. சின்னவனைப் பெரியவனாக்குது...'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டபோது, கூட்டத்தில் வெடிச்சிரிப்பு!

குரலில் ஏற்ற இறக்கங்களோடு, பல நையாண்டிக் கதைகளைச் சொல்லி, அத்தனை கூட்டத்தையும் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருந்தார் வி. பி. சிங். மண்டல் கமிஷன் விஷயத்தில் வடக்கே ஒரு கருத்தையும் தெற்கே ஒரு கருத்தையும் சொல்லி வரும் ராஜீவ் காந்தி, இரண்டு கருத்துக்களுக்கிடையில் சிக்கிக்கொண்டு அரசியல் அநாதையாகி விடப் போகிறார் என்று சொல்லும் விதமாக, விபத்தில் இறந்த நாய்க் கதை ஒன்றைச் சொல்லியபோது, கூட்டம் ஆர்ப்பரித்து அடங்க ஐந்து நிமிடங்களாயின. அன்று காலையில் நடந்த பிரதிநிதிகள் கூட்டத்தில் பொம்மை, 'தி.மு.க.வுடன் இட ஒதுக்கீடு சம்பந்தமாகப் பேசிய, சர்ச்சைக்குள்ளான கருத்துக்கு மாறாகப் பேசித் தமது எண்ணத்தை வெளியிட்டார் வி. பி. சிங்.

''தேசிய முன்னணி என்பது ஒரு குடும்பத்தைப் போன்றது. ஜனதா தளம், தி.மு.க. ஆகியவை அண்ணன் — தம்பி போன்றவை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அண்ணன் — தம்பிகளுக்குள் மோதல் வரக் கூடாது. கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போனால்தான் இருவருக்கும் பொதுவான எதிரியை வீழ்த்த முடியும்'' என்று வி. பி. சிங் சொன்ன போது, காலையில் இதற்கு மாறாகப் பேசிய தலைவர்கள் முகத்தில் இறுக்கம் பரவியது.

எப்படியிருந்தாலும் தமிழக ஜனதா தளத்தினர் சேலத்தில் நடத்திய இந்த மாநாட்டின் மூலம், தமிழக மக்களிடையே தங்களுக்கும் ஒரு கௌரவமான செல்வாக்கிருக்கிறது என்பதை நிரூபித்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனால் இந்தக் கூட்டம் வோட்டுப் பெட்டியையும் நிரப்புமா என்பதை வரப்போகிற தேர்தல்தான் சொல்ல முடியும்.

— ப்ரியன்

படங்கள்: கு பா

ஒரு வேண்டுகோள்

அண்மையில் காஞ்சிபுரம் சென்றிருந்தேன். பரமாச்சாரியார் அவர்களையும் புதுப்பெரியவர்களையும் இளையவரையும் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது மடத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம்பெண் பெயர் எம். கே. ரமா, வயது பதினைந்து, இதயத்தில் வால்வுக் கோளாறினால் பத்து அடி கூட நடக்க முடியாமல் தவிப்பதைச் சொன்னார்கள். இது விஷயமாக எனக்கு இதய ஆபரேஷன் செய்த டாக்டர் செரியனிடம் பேசுவதாகச் சொன்னேன். அந்தச் செய்தியை திரு பட்டாபிராமன் பரமாச்சாரியாளிடம் சொன்ன போது அவர் இரு கைகளையும் உயர்த்தி ஆசீர்வதித்தார்.

டாக்டர் K. M. செரியன் சிறுமி ரமாவுக்கு ஆபரேஷன் செய்ய உடனே ஒப்புக் கொண்டிருக்கிறார். பணம் என்னதான் குறைத்துக் கொண்டாலும் அவசியச் செலவுகளுக்கு ரூபாய் அறுபதாயிரம் வரை ஆகிறது. ஏழைப் பெண். உதவி செய்ய முடிந்தவர்கள் அனுக்கிரகம் பெறுவார்கள். உதவித் தொகையை,

எம்.கே. ரமா,
C/o. ஸ்ரீ குப்புசாமி,
6-B, காமாக்ஷி அம்மன் தெற்கு மாடவீதி,
காஞ்சீபுரம் - 631 502.

என்ற விலாசத்துக்கு உடனே அனுப்ப வேண்டுகிறேன்.

அன்புடன்,
சுஜாதா.
சுஜாதா



கல்கி

1991 மார்ச் 24
மலர் : 49 இதழ் 34
பிரமோதூத பங்குனி 10




கருணாநிதியின் கோபமும் ஆர். வி. யின் அமைதியும்!


"நுணலும் தன் வாயால் கெடும்" என்பது பழமொழி. கருணாநிதியின் கூப்பாடும் அப்படியே! அவர் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதில் பலருக்கும் ஏற்பட்ட அனுதாபத்தை, வெகு சீக்கிரம் துடைத்து எறிந்து விட்டு, வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள அவர் தீர்மானித்து விட்டார் போலும்! இல்லாவிட்டால், 'குடியரசுத் தலைவர் மாளிகை, காங்கிரஸ் கட்சிக் காரியாலயமாகச் செயல்படுகிறது' என்றும் 'ராஜீவைப் பிரதமராக்க ஆர். வி. முனைந்திருக்கிறார்' என்றும் 'ஆர். வி. யை நாடாளுமன்றம் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும்' என்றும் அவர் உரத்த குரலெழுப்பித் துள்ளிக் குதித்திருக்க மாட்டார்.

குடியரசுத் தலைவர், அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் என்பதும், அரசியல் சாசனத்தின் பாதுகாவலர் என்பதும் கருணாநிதிக்கே தெரியுமென்றால் வெங்கட ராமனுக்குத் தெரியாமல் போகாது. சட்ட ஞானமும் நல்லறிவும் அனுபவமும் உள்ள ஆர். வி.க்குக் குடியரசுத் தலைவர் ஒரு சாதாரண அரசியல்வாதி போல் வாதப் பிரதிவாதங்களில் இறங்க முடியாது என்பதும் தெரியும். அதனால்தான் இன்று வரை கருணாநிதிக்குப் பதில் ஏதும் கூற முடியாத நிலையில் அவர் மௌனம் சாதிக்கிறார்.

கருணாநிதி ஆட்சி அநீதியான முறையில் டிஸ்மிஸ் ஆனதற்கு ஆர். வி. கையெழுத்துப் போட்டார் என்பது உண்மையாயினும் பிரதமரின் கருத்துக்கு மாறாக நடந்து கொள்ள, குடியரசுத் தலைவருக்கு நமது அரசியல் சட்டம் அதிக இடம் தரவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். குற்றம் சந்திரசேகருடையதே தவிர, குடியரசுத் தலைவருடையது அல்ல. தற்போது மக்களவைக் கலைப்பு, தேர்தல் அறிவிப்பு விஷயத்திலும் ஆர். வி. நிதானத்துடனும் நல்லறிவுடனும் நாட்டு நலனுக்கு ஏற்பவே நடந்து கொண்டிருக்கிறார்.

வி. பி. சிங் ஆட்சி கவிழ்ந்தபோதே மக்களுக்குத் தேசிய முன்னணியிடம் மதிப்புப் போய் விட்டது. நிலையான ஆட்சி அமைக்கக்கூடிய வேறு கட்சி ஏதும் இல்லாத நிலையில், மக்கள் அப்போதே தேர்தலை விரும்ப ஆரம்பித்து விட்டார்கள். ராஜீவ் காந்தி குறுக்கே புகுந்து குட்டையைக் குழப்பாமல் இருந்திருந்தால், அன்றே தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சந்திரசேகரின் பதவி ஆசையும் ராஜீவின் தந்திரமும் சேர்ந்து கொள்ள, 117 நாட்களுக்கு நாடு தவியாய்த் தவித்தது. மக்கள் முள்ளின் மேல் நின்றனர். சந்திரசேகருக்கு இழிவு உண்டாக்குவதில் ராஜீவ் பெற்ற வெற்றி மட்டுமே நிகர லாபம்! ராஜீவிடம் ஏமாற்றமடைந்து சந்திரசேகரும் ராஜினாமா சமர்ப்பித்த பிறகு, 'மறுபடி வேறு ஆட்சி இல்லை; தேர்தல்தான்' என்பதே மக்களின் ஏகோபித்த கருத்தாக இருந்தது. இதை உணர்ந்துதான் ஒருவர் பாக்கியின்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் "தேர்தல், தேர்தல்" என்றே மக்கள் எண்ணத்தை எதிரொலித்தனர். இந்த விஷயம் ஆர். வி.க்கு மட்டும் புரியாமலா போகும்? ஆனால், பிரதமர் சந்திரசேகரின் கருத்தை ஏற்று, உடனடியாக மக்களவையைக் கலைக்கவோ, தேர்தல் அறிவிக்கவோ அவரால் முடியாதபடி இடைக்கால





பட்ஜெட் குறுக்கே நின்றது. பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீடிக்க நாடாளுமன்ற ஒப்புதல் பெற வேண்டியிருந்தது. நாட்டில் பெரிய நெருக்கடிகள் உருவாவதைத் தவிர்க்கவும், அவசரச் சட்டப் பிரயோகங்களுக்கு இடமின்றி நடந்து கொள்ளவும் முற்பட்ட ஆர். வி., பட்ஜெட், பஞ்சாப் பிரச்னைகளுக்கு நாடாளுமன்றத் தீர்வு கிடைக்கும் வரை காத்திருந்து, பின்னர் மக்களவையைக் கலைத்துத் தேர்தலையும் அறிவித்திருக்கிறார்.

இந்தத் தாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு சு. சுவாமியும், தேவிலாலும், சிமன்பாய் பட்டேலும், முலாயம்சிங் யாதவும், சௌதாலாவும் மாற்று அரசுக்கு முயற்சி செய்து கோமாளித்தனமாக ஆட்டம் போட்டார்கள் எனில், அதற்குக் குடியரசுத் தலைவரைக் காரணமாக்கிக் குற்றம் சுமத்த முடியாது. சட்ட நிபுணர்களையும் கலந்தாலோசித்து, செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில், முறைப்படி செய்து முடித்திருக்கிறார் ஆர். வி. மக்கள் இந்தத் தாமதத்தால் பொறுமை இழந்திருக்கலாம்; கவலையும் அடைந்திருக்கலாம்; ஆனால், தாமதம் தவிர்க்க முடியாததாக ஆகி விட்டது. இதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்கும் நிலையில் குடியரசுத் தலைவர் இல்லை; அப்படி அவர் வாதப் பிரதிவாதங்களில் இறங்கவும் கூடாது. அது அந்தப் பதவியின் கண்ணியத்தைக் குறைக்கும்.

தேர்தலை அறிவித்த ராஷ்டிரபதிபவன் அறிக்கை, 'மாற்று அரசு அமைக்க வேறு யாரும் முன்வரவில்லை' என்பதையும் குறிப்பிடுகிறது. இது உள்ள நிலவரத்தைப் படம் பிடித்துக் காட்டும் வாக்கியமேயன்றி, 'மாற்று அரசு அமைய வேண்டும்' என்று ஆர். வி. விரும்பி, அதற்கு முயற்சி மேற்கொண்டதாக அர்த்தமாகி விடாது. 'மாற்று அரசு அமைக்கிறேன்' என ராஜீவ் முன்வந்திருந்தால் அது குடியரசுத் தலைவருக்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் நல்லவேளை, எத்தனையோ பல தவறுகளைச் செய்துள்ள ராஜீவ், இந்த விஷயத்தில் மக்கள் மனம் அறிந்து, விவேகத்துடன் தேர்தலையே கோரி, எல்லோருக்கும் மன நிம்மதி அளித்திருக்கிறார். அவருக்கு நன்றி. குடியரசுத் தலைவருக்கு வாழ்த்து.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

YOU CAN WIPE-OFF THIS CHILD'S TEARS.



This child knows, the pain of hunger, the cold of loneliness and the fear of being unwanted. This child can have all the love and care it needs to feel wanted at UDAVUM KARANGAL.

UDAVUM KARANGAL is a secular organisation aligned to neither sect nor creed or receiving aid from the Government or Abroad. We depend on the general Public– AND THAT MEANS YOU. Remember no donation is too small – It's the love that goes with it that matters. Our children need Food, Medicine, Clothing and Education.

You can help us in more ways than one. Write to us and tell us about yourself. We need volunteers too.

DONATONS ARE EXEMPTED UNDER SEC 80 (G) OF THE INCOME-TAX ACT.

S. VIDYAKAR

UDAVUM KARANGAL (REGD).

(CENTRE FOR HUMAN SERVICES)

460, NSK NAGAR
MADRAS - 600 106
PHONE : 426141.

SPACE DONATED BY JAYABHARATHAM GROUP OF COMPANIES, ROYAPETTAH MADRAS - 14.

ALKA'S

மனைவி உடைத்த அம்மிக்கல்!

இந்தக் கட்டுரையைப் படிக்கும் போது இதற்கும், தி.மு.க. வின் டி. வி. உடைப்புப் போராட்டத்துக்கும் ஏதாவது தொடர்பு இருப்பதாக வாசகர்களுக்குத் தோன்றினால் எனக்கு ரொம்ப சந்தோஷமே! அப்படித் தோன்றாமல் இருந்துவிடப் போகிறதே என்பதுதான் என் கவலையெல்லாம்!

— விஷ்ராம்

என் மனைவியைப் பற்றி இதுவரை எனக்கே கூடத் தெரியாத ஒரு விஷயத்தை நேற்று கண்டுபிடித்தேன்!

அவள் மகா பலசாலி என்பதுதான் அந்த விஷயம்!

எங்கள் வீட்டு அம்மிக் கல்லைத் தான் ஒருத்தியாகத் தூக்கிப் போட்டு நாலாக உடைத்து விட்டாள்!

அம்மிக்கல்லை அவளுக்குச் சமீப காலமாகப் பிடிக்காததே காரணம்.

ஆனால் இதே அம்மியை அவள் ரொம்பக் கொண்டாடி, ''இதைப் போல எந்த மிக்ஸியும் கூட அரைக்காதாக்கும்,'' என்றெல்லாம் புகழ்ந்திருக்கிறாள்.

அவளுக்குத் திடீரென்று அம்மிக் கல் மீது ஏன் வெறுப்பு?

யோசித்துப் பார்த்தேன்.

காரணம் என் அம்மாதான்.

முன்பு என் மனைவி மட்டுமே அம்மியில் அரைத்து வந்தாள். ஒட்டி ஒட்டி நன்றாக மணிக்கணக்கில் உட்கார்ந்து அனுபவித்து அரைத்து மகிழ்ந்தாள்.

அப்புறம் என் அம்மா ஊரிலிருந்து வந்தாள். அவளுக்கும் இந்த அம்மியைப் பிடித்து விட்டது. அம்மியின் அகலம் நீளம் எல்லாம் கச்சிதமாக இருந்தது ஒரு காரணம்.

அம்மா இப்போது அம்மியைப் பிடித்துக் கொண்டு அரைக்கத் தொடங்கியதும் என் மனைவி அம்மிப் பக்கம் போகும் சந்தர்ப்பம் வெகுவாகக் குறைந்து விட்டது.

வெறுப்பை உடனடியாகக் காட்டாமல், ''என்னது இது அம்மி. சுத்த மோசம். நான் கூட அரைத்துப் பார்த்தேன். சரியாகவே அரைக்கவில்லை,'' என்று ஆரம்பித்தாள்.

என் அம்மா ஆட்சேபித்து, ''இல்லையே நன்றாகத்தானே அரைக்கிறது. நீ பொளியச் சொல்லி இரண்டு மாதம்தான் ஆகிறது. வெகு பேஷாக அரைக்கிறது,'' என்றாள்.

என் மனைவி ஒப்புக் கொள்ளவில்லை. எந்த அம்மியை இரண்டு மாசம் முன்பு வரை நேசித்தாளோ அதைப் போகிற போதும் வருகிற போதும் காலால் உதைப்பாள்.

அந்த அம்மி பாவம் வாயில்லாத ஜீவன். யார் வந்து உட்கார்ந்து அரைத்தாலும் அதற்கு எந்தத் தனிப்பட்ட உணர்ச்சியும் கிடையாது. தான் எப்படியோ



விஷ்ராம்

உயிரோடு இருந்து வந்தால் போதும் என்று அதற்கு ஒரு விரக்தியான திருப்தி.

அரைப்பவர்களும் அம்மியைக் கேட்டுக் கொண்டு மசாலா அரைப்பதில்லை. காரியம் என்று வருகிறபோது அவரவர் இஷ்டத்துக்கு அரைத்துக் கொள்வார்கள்.

தனக்குச் சுதந்திர தாகம் இருப்பது போல அம்மி நடு நடுவே லேசாகக் குரல் கொடுக்கும். ஆனால் இப்படி குரல் கொடுப்பதே தப்பு என்று அரைக்கிறவர்களிடமிருந்து புகார் வந்ததும் அம்மி கப்சிப் என்றாகி விடும்.

இப்போது அதன் சுதந்திரம் பற்றிய பேச்சே இல்லை. என் மனைவி அம்மியைத் தூக்கிப் போட்டு உடைத்தாளே அதுதான் பிரச்னை. மாமியார் உபயோகப்படுத்துகிறாள் என்பதற்காக ஒரு பொருளைப் போட்டு உடைப்பதென்பது சரியல்ல.

நாளைக்கு இதே அம்மியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆட வேண்டிய நிலை வந்தால் அம்மிக்கு எங்கே போவது? பாவம் வாயில்லாத கல்லைப் போட்டு உடைப்பானேன்?

இதே அம்மிக் கல்லைக் கட்டிக் கொண்டு கொஞ்சிய நாட்கள் என் மனைவிக்கு மறந்து விட்டதே! மறுபடியும் அதன் முகத்தில் விழிக்கப் போகும் நாள் வரவே வராது என்று நினைத்து விட்டாளோ என்னவோ?

தனக்கு உபயோகமில்லை. பிறந்தியாருக்குத்தான் பயன்படுகிறது என்பதற்காக ஒரு பொருளை உடைப்பது எனக்கு உடன்பாடில்லை.

ஆனால் என் மனைவி என்னைக் கேட்டுக் கொண்டா உடைக்கிறாள்? அம்மியை உடைத்தால் அவளுக்கு மாமியாரையே உடைப்பது போல ஒரு திருப்தி போலும்!

சரி, நேரடியாக மாமியாரை உடைக்க முடியாதவள் அம்மியையாவது உடைத்து மகிழட்டும் என்று நானும் அம்மி போன துக்கத்தை மறந்து வருகிறேன்.

ஆனாலும் என் மனைவி அம்மி உடைந்து பல நாட்களாகியும் திடீர் திடீரென்று ராத்திரி நேரத்தில் எழுந்து உட்கார்ந்து அம்மி அரைப்பது போல் அபிநயம் பண்ணுவதுதான் கவலையாக இருக்கிறது!

அமெரிக்காவின் ஆட்சிமொழி ஆங்கிலம் அல்ல!

● வளைகுடாப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில் எனக்கு பி.பி.சி., வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா போன்ற வெளிநாட்டு ரேடியோச் செய்திகள் கேட்பதில் (டிரான்ஸிஸ்டரில்தான்) ஆர்வம் ஏற்பட்டது. ஓர் இரவு VOA வில் "திஸ் ஈஸ் அமெரிக்கா" என்ற நிகழ்ச்சியைக் கேட்டதில் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம்: 'அமெரிக்காவின் ஆட்சி மொழி (Official Language) ஆங்கிலம், அதாவது அமெரிக்க ஆங்கிலம் என்றுதானே நாமெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதுதான் இல்லை. அமெரிக்கச் சமஷ்டி அரசின் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தையும், ஸ்பானிஷ் போன்ற வேறு மொழிகளையும் சௌகரியப்படி உபயோகிக்கிறார்கள். இப்போதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு ஒரு மசோதாவைத் தயாரிக்கலாமா என்று யோசித்து வருகிறார்கள். ஆனால் சில மாகாணங்கள் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக அங்கீகரித்துள்ள போதிலும் மற்ற இடங்களில் எதிர்ப்பு இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அதற்காக நாடெங்கும் மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தவிருக்கிறார்கள். சிறுபான்மையான மக்கள் எதிர்த்தால் கூட அங்கே ஆங்கிலம் ஏக போக ஆட்சிமொழியாக முடியாது. இது வல்லவா ஜனநாயகம்! நம் நாட்டு ஹிந்தி வெறியர்களைப் பற்றி என்ன சொல்வது?

தகவல்: எஸ். அனந்தராமன்.

ரஜினிகாந்த் இப்போது அடிக்கடி ட்ரைவ் – இன் – உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு வருகிறார். தாராளமாக டிப்ஸ் வழங்குகிறார். யார் கைநீட்டினாலும் முகம் சுளிக்காமல் கைகுலுக்குகிறார். அப்படியொரு நாள் ஹோட்டலுக்கு வந்துவிட்டுச் செல்லும் போது, வாசலில் ஒரு பலூன்காரரைக் கண்டு காரை நிறுத்தி, ஒரு பலூனை விலை பேசாமல் வாங்கியவர், பாக்கெட்டில் கையை விட்டுக் கிடைத்த நோட்டுகளைப் பலூன்காரர் கையில் திணித்தார். மூன்று பத்து ரூபாய் நோட்டுகளைப் பார்த்ததும் பலூன்காரரின் முகத்தில் ஏகப்பட்ட பிரகாசம்! லட்சக்கணக்கில் சம்பாதிக்கும் ரஜினி, இப்படிச் செய்வதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? "நான் நடிகனாகப் பிரபலமாகாத அந்த நாட்களில், நண்பர்களுடன் சேர்ந்து வந்து வறுமையைப் பகிர்ந்து கொண்டதை நினைவுபடுத்திக் கொள்வதற்காகத்தான் இங்கு அடிக்கடி வருகிறேன். அப்படியே ஒரு மசால்தோசையும் சாப்பிடுகிறேன்..." என்கிறார் ரஜினி. இது ஆச்சரியம்தானே!

— திரைஞானி



ஹம்



அடேயப்பா! 'ஜும்மா சும்மா' என்றவொரு பாடலை வைத்துக் கொண்டு என்ன பாடுபடுத்தி விடுகிறார்கள்! ஆட்டமான ஆட்டம்! கூட்டமான கூட்டம்! கும்மாளமான கும்மாளம்! டைகர் (அமிதாப்) அசத்தி விடுகிறார்.

அவருக்கு ஏற்கெனவே ரொம்பவும் பழகிப் போயிருக்கும் அதே 'கோபமான இளைஞன்' பாத்திரம் — முன் பகுதியில்.

அந்தக் கோபம் சமூகத்தின் மேல் மட்டத்தினர் மீது. கௌரவப் போர்வை போர்த்திக் கொண்டு அவர்கள் செய்யும் சமூக விரோதமான காரியங்களின் மீது. நடுவில் சில ஆண்டுகள் தொலைந்து போனாலும் இப்போது மீண்டும் அந்த 'அசல் அமிதாப் பச்சன் ஃபார்முலா' கொடுத்திருப்பது கை.

''சாக்கடையில் தோன்றும் கரப்பான் கடிக்கும் போது மனிதனுக்கு நோய் ஏற்படுகிறது. சமூகத்தில் தோன்றும் கரப்பான் கடிக்கும் போது அந்தச் சமூகத்துக்கே நோய் ஏற்பட்டு விடுகிறது. சாக்கடைக் கரப்பானை அழிக்க ஃப்ளிட் அடித்தால் போதும். சமூகக் கரப்பானை அழிக்க அப்படியொரு மருந்து இல்லையே!'' என்று அவர் குடி போதையில், வேதனை நெஞ்சை அடைக்க, இந்தியிலும் உடைந்த ஆங்கிலத்திலுமாகக் குமுறிக் குழறும் போது அவரைப் போலவே அவர் நடிப்பும் உயரம்.

பின் பகுதியில் அந்தப் புலி தன் ஆக்ரோஷத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு பூனையாக மாறி, இரண்டு தம்பிகள், மூத்த தம்பியின் மனைவி, அவளுடைய மகள் என்னும் ஒரு சிறிய குடும்ப வட்டத்துக்குள் தன்னை வரையறுத்துக் கொண்டு, கண்டிப்பும் கறாரும் அன்பும் அரவணைப்பும் பாசமும் பரிவுமாக அவர்களுடைய நல்வாழ்வே நோக்கமாகச் செயல்படும் போது அந்தத் தந்தைத் தனத்தில் அவருடைய உயரங்கள் இன்னும் கூடிப் போகின்றன.

முழுக்க முழுக்க அமிதாப்புக்காவே அமைக்கப்பட்டுள்ள திரைக்கதை. அதனால் மற்றவர்கள் அனைவருமே அவரைச் சுற்றிச் சுற்றி வரும் துணைக் கோள்கள் ஆகிவிடுகின்றனர் — நம்மூர்க்காரர் உட்பட. (இரண்டொரு சிகரெட் வித்தைகள் தவிர அதிகம் வேலையில்லை.)

அந்தக் குடும்பத்தின் ஒற்றுமையையும் ஒட்டுறவையும் உணர்த்தும் 'ஹம்' என்றொரு பாடல். தலைப்பை நியாயப்படுத்தும் வகையில் மூன்று நான்கு இடங்களில் இடம் பெறும் அந்த இசை இனிமையான தாலாட்டு. என்றாலும் —

சுற்றிலும் வில்லனின் ஆட்கள் கையில் ஏ. கே. 47 உடன் நிற்க, டாங்குகளிலும் ஹெலிகாப்டரிலும் அதுபோலவே மேலும் ஆட்கள் நிறைந்திருக்க, தம்பி மனைவியின் கையில் வெடிகுண்டு வைத்துக் கட்டப்பட்டுள்ள நிலையில், அதன் ரிமோட் கண்ட்ரோலை எந்த நிமிடமும் இயக்கி அவளை அழித்து விடுவதாக வில்லன் கொக்கரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தம்பி மகள் அந்தப் பாடலைத் தொடங்கி வைக்க, அதைத் தொடர்ந்து டைகரும் குடும்பத்தினரும் அதில் கலந்து கொள்ள... நிலைமையின் தீவிரம் அடிபட்டுப் போய் கேலிக் கூத்தாகி விடுகிறது!

— சி. ஆர். கே.

அடுத்த இதழில்......



●● ''ஹம்''

திருப்புமுனையானது எப்படி...?

— அமிதாப் சிறப்புப் பேட்டி

'மனு' நீதி

கதாகாலட்சேபம் செய்து கொண்டிருந்த பெரியவர், திருவாரூரின் பெருமையையும், பசுவிற்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழனின் வரலாற்றையும் அழகாக விவரித்துக் கொண்டிருந்தார்.

அருகில் மேய்ந்து கொண்டிருந்த அந்தப் பசு மாட்டிற்கு மெய்சிலிர்த்தது. 'ஆகா... மனிதர்கள் இவ்வளவு நல்லவர்களா? இது நமக்குத் தெரியாமல் போயிற்றே! சென்ற மாதம் என்னுடைய கன்றின் மீது காரை மோதிக் கொன்று விட்டவரை என்ன செய்வதென்று தெரியாது கதறினேனே! இப்பொழுதல்லவா தெரிகிறது.. நானும் சென்று முறையிடுவேன். நீதி பெறுவேன்!' என்று நினைத்த பசு, அடுத்த நாளே காரியத்தில் இறங்கியது.

தற்காலத்தில் மனுநீதிச் சோழர்கள் யாரும் கிடையாது. மந்திரிகள்தான் உண்டு. அவர்களிடம் மனு கொடுத்தால் நீதி கிடைக்கும். ஆனால் அதற்குச் சென்னை செல்ல வேண்டும் என்ற விவரங்களைத் தெரிந்து கொண்ட பசு, சென்னைக்கு எப்படிச் செல்வது என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தது.

பசுவின் எண்ணம் அடுத்த வாரமே கைகூடியது. ஏதோ ஒரு கட்சி, சென்னையில் விவசாயப் பேரணி நடத்த ஊரிலிருந்த ஆடு, மாடு, மனிதர்கள் அனைவரையும் அள்ளிக் கொண்டு போக, நம் மாடும் தலைநகரை அடைந்தது.

எப்படியோ பேரணி நடத்தியவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, மெதுவாகக் கோட்டையைச் சென்று அடைந்தது.

அங்கே மனு கொடுக்கக் காத்திருந்த மக்களுக்கிடையில், தான் முன்பே தயார் செய்து வைத்திருந்த மனுவை வாயில் வைத்துக் கொண்டு ஓர் ஓரமாக நின்றது.

மக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டு வந்த முதலமைச்சர், மாட்டைப் பார்த்து ஆச்சரியம் அடைந்து, மனுவைப் பெற்று ''உடனடியாக நடவடிக்கை எடுங்கள்...'' என்று ஓர் அதிகாரியிடம் ஒப்படைத்தார். மாடு தனக்கு எப்படியும் நீதி கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் ஊர் திரும்பியது.

பசு மாட்டின் மனு, கோட்டையிலிருந்து மாவட்ட ஆட்சியருக்கு வந்து, அங்கே இருந்து சார் ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு, பின்பு அங்கே இருந்து வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டு, வட்டாட்சியரிடமிருந்து விசாரணை செய்து அறிக்கை அனுப்ப ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்பட்ட பொழுது, கன்று இறந்து ஒரு வருடம் ஆகி விட்டிருந்தது.

பக்கத்து மாநிலத்திலிருந்து வந்த அமைச்சர்களுக்குப் 'பிரியாணி' வாங்குதல், வி. ஐ. பி. உறவினர்களுக்குக் கோயில்களைச் சுற்றிக் காண்பித்தல் போன்ற அதிமுக்கியமான பணிகள் இருந்தமையால், ஆர். ஐ.க்கு மாட்டின் மனுவை உடனே விசாரிக்க முடியவில்லை. இருந்தாலும் அவர் இடைக்கால அறிக்கையாக ஒரு பதிலை அனுப்பி வைத்தார்.

'இந்தப் பகுதி முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், மேய்ச்சலுக்கு இடமில்லாமல் போய் விட்டது. எனவே, மனு கொடுத்த பசு மாடு மேய்வதற்காக வேறு ஊருக்குப் போய் விட்டதால் அதனை விசாரிக்க முடியவில்லை. எனவே மாடு ஊர் திரும்பியதும் விசாரித்து அறிக்கை அனுப்புகிறேன்.'

இதனால் இன்னும் ஓர் ஆறு மாதம் செலவழிந்தது. எனினும் மேலிடத்திலிருந்து தொடர்ந்து நினைவூட்டி வர, வி. ஐ. பி.க்கள் வராத ஒரு நல்ல நாளில், மாட்டை விசாரிக்கப் புறப்பட்டார் ஆர். ஐ.

தன்னுடைய கன்றை, அந்தக் கட்சித் தலைவரின் குடிகார மகன் எப்படிக் காரை மோதிக் கொன்றான் என்பதைப் பசு மாடு கண்ணீர் மல்க விவரித்தது. கூட இருந்த காளை மாடும் எருமை மாடும் சாட்சி சொல்லின. மூன்று மாடுகளிடமும் வாக்குமூலம் பெற்று அவற்றின் கை ரேகையுடன் (கால் ரேகை?) பதிவு செய்து கொண்டார் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்.

மாடுகளின் கண்ணீர்க் கதை கேட்டு, ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கே கண்ணீர் வந்தது. என்றாலும் முறையாக விசாரணை செய்ய வேண்டுமென்பதால், அந்தக் கட்சித் தலைவரின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

கட்சித் தலைவர் தின்று போட்டுத் திண்ணையில் சாய்ந்திருந்தார். சாட்சி சொன்ன எருமை மாட்டை விடக் கொஞ்சம் பெரிதாக இருந்தார். ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்ததுமே 'ஓ'வென்று அழத்

கொ. வை. அரங்கநாதன்



தொடங்கினார் அந்தத் தலைவர்.

"சார்... எனக்கு எதிராகப் பெரிய சூழ்ச்சியே நடக்குது சார்... அந்தப் பசு மாடு இருக்கே.. அது எங்க கட்சிதான் சார்.. ஆனா வேற கோஷ்டி. கட்சியில எனக்குள்ள செல்வாக்கைக் குறைக்கிறதுக்காக இப்படியொரு பழியைச் சுமத்தியிருக்கு சார்.. இப்படி ஒரு அபாண்டத்தைச் சுமத்தலாமா? அதுக்காகத்தான் சார் நான் அந்தப் பசு மாட்டு மேலே ஒரு கேஸை போட்டிருக்கேன்."

கட்சித் தலைவரின் மற்ற வார்த்தைகள் ஆர். ஐ.யைக் கவர்ந்ததோ இல்லையோ, கடைசி இரண்டு வார்த்தைகள் அவரைச் சுண்டியிழுத்தன.

"என்ன சொன்னீங்க சார்... கேஸ் போட்டிருக்கீங்களா... கேஸ் நம்பர் என்ன சார்...?" பரபரத்தார் ஆர். ஐ.

"ஓ. எஸ். 2/90 சார். இன்னும் விசாரணையில் இருக்கு..."

"அப்பாடா இது போதும் சார்..." — மகிழ்ச்சியுடன் புறப்பட்ட ஆர். ஐ. யைக் காரணம் புரியாமல் பார்த்தார் கட்சித் தலைவர்.

"மனுதாரரான பசு மாட்டின் மீது கட்சித் தலைவர் வழக்குத் தொடர்ந்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இம் மனு மீது இப்பொழுது நடவடிக்கை எடுக்க இயலாது..." என்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் அறிக்கை மீண்டும் 'பதினெட்டுப் படிகள்' ஏறிக் கோட்டையை அடைய ஒரு வருடம் ஆனது.

இவ்வாறு இரண்டரை ஆண்டுகள் கழிந்து, "உங்கள் மனு மீது நடவடிக்கை எடுக்க இயலாது" எனப் பசு மாட்டிற்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

பசு மாட்டிடம் தபாலைப் படித்துக் காட்டிய பக்கத்து வீட்டுக்காரர், "இதென்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. இந்த இரண்டரை வருடத்தில் கோர்ட்டிலே உன் மேல் போடப்பட்ட கேஸை முடிஞ்சு போயிருக்குமே..." என்று ஆதங்கத்துடன் வினவ —

"நீங்க வேற சார். கோர்ட்ல இந்தக் கேஸை இன்னும் விசாரணைக்கே எடுக்கலை..." என்று விரக்தியாகச் சொல்லி விட்டு, அந்தக் கடிதத்தை மென்று அசை போடத் துவங்கியது அந்தப் பசு மாடு!

ஏழுமணியில் ஒரு விளைகூடா

நடக்காது, நடக்க விடக் கூடாது என்று நினைத்த சண்டை, கடைசியில் நடந்தே விட்டது! மோதல் படு உக்கிரமாகத் தொடங்கி விட்டது. உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தது பூதாகரமாக வெடித்து விட்டது. சதாம் உசேன் போல் அம்புஜம் மாமி சிலிர்த்து எழ, அமெரிக்கா போல் தன்னுடைய தோழியர் படை அணியைத் திரட்டிக் கொண்டு பங்கஜம் எதிர்க்க, இருவருக்கும் சொற்போர் தொடங்கி அது மற்போராகும் நிலையை எட்டிக் கொண்டிருந்தது.

எங்களுடைய குடியிருப்பில் மாடியில் மூன்றும் கீழே மூன்றுமாக மொத்தம் ஆறு போர்ஷன்கள். அவற்றில் ஆறு குடும்பங்கள். இதில் வீட்டுச் சொந்தக்காரர்களான அம்புஜம் மாமியும் அவள் கணவர் சுந்தரம் மாமாவும் ஒரு போர்ஷனில் இருக்கிறார்கள். சுந்தரம் மாமா மிலிட்டரியில் இருந்து ரிடையர் ஆனவர் என்றுதான் பேர். ஆனால் உண்மையில் மாமிதான் வீட்டில் மிலிட்டரி ஜெனரல் போல் ஆதிக்கம் செலுத்துவாள். மாமா தானுண்டு தன் பேப்பர் உண்டு என்று இருந்து விடுவார்; குடித்தனக்காரர்களை ஆட்டிப் படைப்பதெல்லாம் மாமிதான்.

அதிகமாகத் தண்ணீர் உபயோகிக்கக் கூடாது; காரணமில்லாமல் இரவு, வேளை கெட்ட வேளையில் வீட்டிற்கு வந்து மற்றவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது; அனாவசியமாகச் சத்தம் போட்டுப் பேசுவதோ, விளக்குகளை எரிய விடுவதோ கூடாது. மாடியில் குடியிருப்பவர்கள் முறைவைத்துப் படிக்கட்டுகளைச் சுத்தம் செய்ய வேண்டும்; அதே போல் கீழ் போர்ஷனில் இருப்பவர்கள், சுற்றியுள்ள தரையைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும்.... போன்றவை, மாமியின் மிலிட்டரி உத்தரவுகளில் முக்கியமானவை.

இந்தத் தருமமிகு சென்னையில், இது போல் சகல வசதிகளுடன், நியாயமான வாடகைக்கு வீடு கிடைப்பது அரிதிலும் அரிது என்பதால், எல்லாக் குடித்தனக்காரர்களும், மாமியின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பயந்தே நடந்தனர். ஏறக்குறைய மாமி ஒரு சர்வாதிகாரி போலவே நடந்து கொள்வாள்.

கீழ்போர்ஷன் ஒன்றில் குடியிருக்கும் பங்கஜம் மட்டும்தான், துணிவோடு, அவ்வப்போது மாமியின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்துவாள். ஆனால் மாமியின் மிலிட்டரி ஆட்சியில் அவளுடைய புரட்சிக் குரல் அதிகச் சந்தடி இல்லாமலே அடக்கப் பட்டு வந்தது.

பங்கஜம் இந்தப் போர்ஷனுக்குக் குடி வந்து ஏறக்குறைய இரண்டரை வருஷங்களாகப் போகிறது. கை நிறையச் சம்பாதிக்கும், சொன்னதைக் கேட்கும் கணவன்; இரண்டு சமர்த்துக் குழந்தைகள் என்று பிரச்னைகள் அதிகம் இல்லாத நிறைவான குடும்பம் பங்கஜத்தினுடையது. குடித்தனக்காரர்களில் முக்கால்வாசிப்பேர், பங்கஜத்திற்கு வேண்டியவர்கள்; அவள் மாமியை அவ்வப்போது எதிர்த்துப் பேசுவதை ரசிப்பவர்கள். அதைவிட மிகவும் முக்கியமான விஷயம், பங்கஜத்தின் அண்ணா ரேஷன் கடையில் வேலை செய்பவர். அதனால் வேண்டியவர்களுக்கு, மாசம் பிறந்தால் விள்ளாமல் விரியாமல் பாமாயில் வாங்கித் தருவாள் பங்கஜம்.

பாமாயில் என்பது என்ன சாதாரணப் பண்டமா? கிடைக்காத கொம்புத்தேன் அல்லவா....? அதனால் குடித்தனக்காரர்கள் அனைவரும் அவளுடைய காலடியில்! 'பங்கஜம் கோபிப்பாளோ...? பங்கஜம் தப்பாக நினைப்பாளோ...?' என்றெல்லாம் அவள் முகம் பார்த்துப் பயப்படுவார்கள். ஆனானப்பட்ட அம்புஜம் மாமியே, பாமாயில் அட்சத்திற்காக பங்கஜத்திடம் அவ்வப்போது வருவதுண்டு! இருந்தாலும் பங்கஜத்தை மாமிக்குப் பிடிக்காது. சமயம் பார்த்து ஊசி ஏற்றிக் கொண்டே இருப்பாள்.

இந்த நீண்ட நாள் பகைதான் இன்று காலை வெடித்து விட்டது சண்டையாக. விஷயம் ஒன்றும் பிரமாதமில்லை. இனிமேல் சமையல் காஸ் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்று யாரோ சொல்லி வைக்கவே,

வனிதா

முன் யோசனை மிகுந்த பங்கஜம், விலை ஏறு முன், ஒரு மூட்டை லிக்கோ கரி வாங்கிக் கொண்டு வந்து விட்டாள். கூடவே ஒரு கூடை சிரட்டையும், ஒரு மூட்டை தேங்காய் நாறும் வேறு வாங்கிவிட்டாள்! காஸ் தீர்ந்து விட்டால் உடனே கரி அடுப்பு மூட்டுவது என்பது அவளுடைய பிளான். ஆனால் கரி மூட்டையை எங்கே வைப்பது....? மாடிப்படி வளைவு சும்மாதானே இருக்கிறது, என்று அங்கே கொண்டு வந்து கரி மூட்டையையும் மற்ற சாமான்களையும் அடுக்கி வைத்தாள். அவ்வளவுதான்....!

மாமி ரௌத்ரமாகிவிட்டாள்!


"மாடிப்படி வளைவை நீ எப்படி ஆக்ரமிக்கலாம்....? உடனடியாகக் கரி மூட்டையை எடுத்து, உன் போர்ஷனில் போட்டுக் கொள்; இல்லாவிட்டால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும்!" என்று மிரட்டினாள்!

பங்கஜமா மசிவாள்? காரசாரமாய் பதிலுக்கு விளாசினாள். மாமி சும்மா இருப்பாளா? தோட்டக்காரரின் உதவியோடு கரி மூட்டையை வெளியே இழுத்து எறிந்து, சிரட்டைக் கூடையிலிருந்த சிரட்டைகளைப் பட படவென்று ஏவுகணைகளைப் போல் வீச, பங்கஜம் கையிலிருந்த கரண்டியால் மாடிப்படி வளைவிலிருந்த பல்பைத் தட்டி உடைத்து நாசமாக்கினாள்.

மாமி, அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப்படை விமானங்களின் குண்டு மழையைப் போல் வசவு மாரி பொழிய, பங்கஜம் அதைத் தடுத்து எதிர்த்தாக்குதல் நடத்த, யுத்தம் சூடு பிடித்தது. மாசம் பிறந்தால் கிடைக்கிற பாமாயிலை நினைத்து, அனைத்துக் குடித்தனக்காரிகளும் பங்கஜத்தை ஆதரிக்க, மாமி தன்னந்தனியாக நின்று தாக்குதலைச் சமாளித்தாள். குடித்தனக்காரர்களில் சற்றே வயது முதிர்ந்த தம்பதியான விசாலம் – பார்த்தசாரதி, நடுநிலைக் கொள்கை வகித்து, கூட்டுச் சேராமல் நின்றனர்.

பங்கஜம் விடுவதாயில்லை. அம்புஜம் மாமிக்குச் சமமாகப் போர் தொடுத்து நின்றாள். இரண்டு நாட்களாகியும் பங்கஜம் ஓய்வதாகத் தெரியவில்லை. எவ்வளவோ, எடுத்துச் சொல்லியும் சமாதானப் படுத்தியும், இருதரப்பிலும் ஒரு பயனும் இல்லை.

இறுதியில் மாமி, பங்கஜம் உட்பட அனைவருக்கும் தண்ணீர் சப்ளையை நிறுத்தினாள். மோட்டார் போடுவதற்கான ஸ்விட்ச் மாமி போர்ஷனில்! பங்கஜம் வீட்டைக்



காலி செய்து கொண்டு போன பின்னரே தண்ணீர் விடப்படும் என்று அறிவித்து விட்டு, மாமி தன் போர்ஷனைப் பூட்டிக் கொண்டு தங்கை வீட்டிற்குப் போய் விட்டாள்!

இந்த அதிரடியில் அனைத்துக் குடித்தனங்களும் ஸ்தம்பித்தன! பாமாயில் மோகத்தில் பங்கஜத்தின் வலையில் விழுந்து மோசம் போனோமே என்று எல்லாப் பெண்களும் வருந்த, லாரியில் தண்ணீர் வரவழைக்கப் பட்டது. லாரி வந்ததற்கான டீஸல் பில்லைப் பார்த்துக் குடித்தனக்கார ஆண்கள் யாவரும் வாயடைத்துப் போனார்கள். இந்த ரேட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்தனம் நடத்தக் கட்டுப்படியாகுமா? இல்லை வேறு வீட்டிற்குக் குடிபோவது என்பதுதான் என்ன அவ்வளவு சுலபமா?

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த பங்கஜத்தின் கணவன் ரமேஷ் உடனே குடித்தனக்கார ஆண்கள் அனைவரையும் கூட்டி ஓர் அவசரகால ரகசியச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தான். உடுப்பி கிருஷ்ணாபவனில் சமாதானப் போர் நிறுத்தக் கூட்டம் நடந்தது. மாமியின் கணவர் சுந்தரமும் பங்கஜத்தின் கணவன் ரமேஷும் பேச்சு வார்த்தைகளுக்குத் தலைமை வகித்தனர். சுந்தரமும் ரமேஷும் தவறு தங்கள் மனைவியர் பேரில்தான் என்பதை ஒப்புக் கொண்டு, பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தினர். ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசிக் கொண்டனர். பிரச்னையின் பல்வேறு பரிமாணங்களையும் அலசி ஆராய்ந்தனர்.

இறுதியில், சண்டையிடும் பெண்களைச் சமரசம் செய்ய அருமையான யோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டது. வீட்டின் முன் பகுதியில் பழைய கார் ஷெட் ஒன்று உபயோகப்படுத்தப் படாமல் இருந்தது. அதை நன்றாக வெள்ளையடித்துப் புதுப்பித்து, ஃபேன் மாட்டி, அதில் ஒரு வி.சி.பியை வாங்கி வைத்துத் தினம் ஒரு படமாகப் போட்டுக் காண்பித்தால், பெண்கள் தங்கள் பிரச்னைகளை மறந்து, சினிமா பார்ப்பார்கள். ஆண்களும் நிம்மதியாகத் தங்கள் வேலைகளைக் கவனிக்கலாம். தலா ரூபாய் இரண்டாயிரம் தந்தால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று முடிவெடுக்கப் பட்டது. இரண்டாயிரம் என்பது அமைதிக்காகக் கொடுக்கப்படும் விலை என்பதால் ஆண்கள் அனைவரும் இத்திட்டத்திற்கு ஏகமனதாக ஒப்புக் கொண்டனர்.

அப்புறம் என்ன!

ஒரே நாளில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, மாடிப்படி வளைவு மீட்கப்பட்டு, தண்ணீர் நிலைமை சீராக்கப்பட்டு, அமைதி நிலைநாட்டப்பட்டது. அம்புஜமும் பங்கஜமும், இப்போது வேற்றுமைகளை மறந்து தத்தம் அணியினருடன் அமைதியாகக் கார் ஷெட்டில் அமர்ந்து சினிமா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

லிப்கோவின் மகத்தான வெளியீடு!

கீர்த்தனாசார்ய **ஸ்ரீ உ.வே. C.R. ஸ்ரீநிவாஸய்யங்கார்** அவர்களின்



ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம் ★ புதிய பதிப்பு

பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய இரண்டு பாகங்களில் மொத்தம் 1800 பக்கங்கள்

2 பாகங்களும் சேர்ந்து ரூ. 150

ஸ்ரீ ராமநவமியை முன்னிட்டு, சலுகை விலை ரூ. 125 (15.4.1991 வரை)

தபாலில் பெற விரும்புவோர் ரூ. 144 M.O. அல்லது டிராப்ட் அனுப்புக.

In ENGLISH by the same author:2 Volumes together: Rs.250
Pre-publication offer till 15.4.1991: Rs. 200; By Post Rs. 220
(Will be ready by April 1, 1991)

லிப்கோ வெளியீடுகளில் மேலும் சில:

1.	ஸ்ரீ ராகவ - யாதவீயம்	ரூ. 6.00
2.	ஸுந்தர காண்டம் - மூலம் தமிழில்	ரூ. 14.00
3.	கம்ப ராமாயணம் - வசனம்	ரூ. 18.00
4.	ஸ்ரீ C.R.S. ஸுந்தர காண்டம் - வசனம்	ரூ. 27.00
5.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் - ஸ்தோத்ரமாலையுடன்	ரூ. 16.00
6.	தசா புக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் - தசை ஒவ்வொன்றும்	ரூ. 2.00
7.	ஸ்ரீரங்க மாஹாத்ம்யம்	ரூ. 8.00
8.	நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 2 பாகங்களில் 1670 பக்கங்கள்	ரூ. 90.00
9.	ஸ்ரீமத் பகவத் கீதை - தமிழில் மூலமும், உரையும்	ரூ. 13.00
10.	விரத பூஜா விதாநம்	ரூ. 12.00
11.	குடும்ப ஜோதிடம்	ரூ. 12.00
12.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	ரூ. 20.00
13.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	ரூ. 9.00
14.	அபயாம்பிகை சதகம்	ரூ. 8.00
15.	ஷட்பதீ ஸ்தோத்ரம்	ரூ. 2.00
16.	நூற்றெட்டு ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேச வைபவம்	ரூ. 8.00
17.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ - உரையுடன்	ரூ. 4.00
18.	ஸ்ரீராமஹ்ருதயம்	ரூ. 2.00
19.	Chitra-Ramayanam (English)	ரூ. 20.00

லிப்கோவின் இலவச முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017. போன்: 441538

★ 62-ஆம் ஆண்டு பொன்னான சேவை! ★

ஆகாசத் தாமரை 11

கல்யாணத்துக்குச் சந்தியா வந்திருந்தாள். அவளுடைய அப்பா மூர்த்தி வரவில்லை. சந்தியா மிக இயல்பான புன்னகையுடன், அவன் கைகளைக் குலுக்கிக் கொண்டே சொன்னாள்: ''ரொம்ப அழகாக இருக்கா உங்க ஆம்படையா. டேக் கேர் ஆஃப் ஹர்.''

அவன் கோமளாவின் கைகளைப் பற்றியவாறு கூறினான்: ''நீ அதிர்ஷ்டக்காரப் பொண்ணு. உன் அதிர்ஷ்டத்தை நீ நிரூபிச்சுண்டாகணும்.''

துருவ் யோசித்தான். இதற்கு என்ன அர்த்தம்? அவனை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டியது இனி கோமளாவின் பொறுப்பு என்கிறாளா?

துருவ் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, வீணைக்குச் சுருதி கூட்டினான்.

''உனக்கு பிடிச்ச ராகம் எது?'' என்றான் துருவ்.

கோமளா பேசாமல் நின்றாள். அவள் மிகவும் பயந்து நிற்பதைப் போல் தோன்றியது.

''சொல்லும்மா...''

''ராகத்தைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''உனக்குப் பிடிச்ச பாட்டு எது?''

கோமளா பதில் கூறவில்லை.

''சினிமாப் பாட்டுப் பிடிக்கும்னா, ஏதாவது ஒரு சினிமாப் பாட்டுப் பாடு...''

''எனக்குப் பாட வராது.''

''பாடத் தெரிஞ்ச வரைக்கும் பாடு.''

அவள் பாடவில்லை.

''இப்படி வா... கட்டில்லே உட்கார்ந்து ஏதாவது ஒரு சினிமாப் பாட்டை, உனக்குப் பாட முடிஞ்ச வரைக்கும் பாடு...''

அவள் கட்டிலில் ஓரமாக உட்கார்ந்தாள்.

''ஹூ-ம். பாடு...''

''வேணாம். நீங்க வீணை வாசிங்கோ.''

''நீ பாடித்தான் ஆகணும்.''

''என்னாலே முடியாது.''

''ஏன்?''

''எனக்குப் பாட வராது. குளிக்கிற போதுதான் நான் பாடுவேன்...''

''சரி... இப்போ குளிக்கிறதா நினைச்சுக்கோ, பாடு...''

அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. அவனைக் கட்டிப் பிடிக்க வேண்டும் போல் ஓர் ஆவேசம் அவளுக்குள் எழுந்தது. அவள் அவனருகில் சென்று அவன் மடியில் சாய்ந்து ஒரு கையினால் கழுத்தைப் பற்றிக் கொண்டாள்.

அவன் அவளை உதறினான்.

''கெட் அவுட்.''

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன தப்புச் செய்து விட்டாள்? கல்யாணமாகி விட்டது. முதலிரவு.

அவள் எழுந்து நின்றாள். அவனை நடுங்கிக் கொண்டே பார்த்தாள்.

''தயவு செய்து வெளியே போ,'' என்றான் துருவ்.

''என்ன தப்புப் பண்ணிட்டேன்?''

''ஒரு தப்பும் பண்ணலே. வெளியே போ...''


அவள் மௌனமாக வெளியேறினாள். வீடு நிசப்தமாக இருந்தது. துருவ் அம்மாவின் அறையில் விளக்கு எரிந்தது. அங்கு போகலாமாவென்று ஒரு கணம் யோசித்தாள் கோமளா. வேண்டாம்.

அவளுடைய அம்மா பயந்தது சரிதான். இவர் பைத்தியமா? எதற்காக அப்படித் திடீரென்று கத்தினார்? அவள் பல திரைப் படங்கள் பார்த்திருக்கிறாள். முதலிரவின் போது கணவன் மனைவியை அணைத்துக் கொண்டு, மிருதுவான குரலில் பேச வேண்டும். அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் திரைப்படங்கள் பார்த்ததில்லை போல் அவளுக்குத் தோன்றிற்று. அதற்காகத்தான் அவளாகவே போய் அவன் மடியில் சாய்ந்தாள். இது தப்பா? அவள் பால்கனியில் போய் நின்றாள்.

வீதி வெறிச்சோடிக் கிடந்தது. அவள் குடியிருந்த வீட்டுக்காரருடைய கார் டிரைவர் ராம்சந்த் அவளை விரும்பினான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் ஹிந்திக்காரனை மணக்க அப்பா சம்மதிக்க மாட்டாரென்றும் அவளுக்குத் தெரியும். ஏக்கப் பிரவிய ஒரு பார்வைப் பரிமாற்றத்தோடு அந்தக் காதல் முடிந்தது. ராம்சந்தை மணந்திருக்கலாம். அவனும் நிறையத் திரைப்படங்கள் பார்ப்பான். முதலிரவில் சினிமா பற்றி விடிய விடியப் பேசியிருக்கலாம். நிச்சயமாக அவள் பாடியிருப்பாள். அவனுக்கும் பிடித்திருக்கும். இந்தப் பணக்காரச் சம்பந்தம் யாருக்கு வேண்டும்?

வீணையின் நாதம் காற்றில் மிதந்து வந்தது. அவளுக்கு ராகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. நன்றாக வாசிக்கிறார். சோகமாக வாசிப்பது போல் அவளுக்குப் பட்டது. சோகப்பட வேண்டியவள் அவள்.

இந்திரா பார்த்தசாரதி



அவருக்கென்ன சோகம்? அதுதான் அவளுக்குப் புரியவில்லை. அவர் 'பாடு' என்ற போது, பாடாமலிருந்தது தப்பா? அவளுக்குத் தெரிந்தவையெல்லாம், சினிமா பாட்டுக்கள்தாம். அவற்றிலும் எதுவும் முழுவதும் தெரியாது. பாடி, அசட்டுப் பட்டம் கட்டிக் கொள்ள அவள் விரும்பவில்லை. அப்படிப் பட்டம் வாங்கியிருந்தாலும் பரவாயில்லை, இப்பொழுது வெளியே போ என்று துரத்தி விட்டாரே.

அவளுக்குத் திடீரென்று அழுகை வந்தது. கைகளால் முகத்தை மூடிக் கொண்டு கேவிக் கேவி மௌனமாக அழுதாள். அவள் தோள் மீது வேறொரு கை படுவதை உணர்ந்ததும், அவள் திடுக்கிட்டுத் தன் முகத்தினின்றும் கைகளை விலக்கினாள்.

துருவ்வின் அம்மா!

''அழாதே, என்ன நடந்தது சொல்லு!'' என்றாள் மஞ்சுளா.

கோமளா பதில் கூறவில்லை.

''பயப்படாமல் சொல்லு.''

''அவர் என்னை வெளியிலே போகச் சொல்லிட்டார்.''

''என்ன காரணம்?''

''தெரியலே... வந்து...'' அழுகை குறுக்கிட்டது.

''சொல்லும்மா... நீ அவனோட ஆம்படையா. அவனுக்கு இந்த வீட்டிலிருக்க எவ்வளவு உரிமை இருக்கோ, அவ்வளவு உரிமை உனக்கும் இருக்கு... சொல்லு தைரியமா...''

நடந்ததைச் சொன்னாள் கோமளா...

மஞ்சுளா சிறிது நேரம் மௌனமாகக் கைகளை பால்கனிச் சுவரின் மீது ஊன்றிக் கொண்டு, விண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்தப் பெண்ணிடம், 'உன் புருஷன் சிக்கலானவன்; நீ அவனைப் புரிந்து கொள்ள முயல வேண்டும்' என்று எப்படிச் சொல்வது? தாயாக இருந்தும் அவளால் அவனைப் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றதா?


அவன் எதற்காக இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்? இவள் எளிமையையும், வறுமையையும், 'ரொமான்டிசைஸ்' செய்த கற்பனையில் இவளை மணந்திருக்கிறான்! இவளிடம் அவன் பேதைமையை எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால், இவள் வலுவில் சென்று அவன் மடியில் விழுந்தது, அவன் கற்பனையின் அசட்டுத்தனத்தை அவனுக்கே உணர்த்திய நிலையில், அவன் சினத்தைத் தூண்டியிருக்கலாம்!

இது அவள் தவறா?

''சரி, நீ என் ரூம்லே போய்ப் படுத்துக்கோ... நான் துருவ்வைப் பார்த்து...''

''வேணாம், வேணாம்... நான் உங்ககிட்ட வந்து குத்தம் சாட்டியதா அவர் நெனைச்சுக்கக் கூடாது...'' என்றாள் கோமளா.

''அப்படியெல்லாம் நினைச்சுக்க மாட்



கணவன்: ஆபீஸ்ல எவ்வளவு ஃபைல் கையெழுத்தாகாமல் 'பெண்டிங்'காக் கிடக்கு, தெரியுமா?

மனைவி: அப்ப, ஏகப்பட்ட 'தொகை' வரவேண்டியிருக்குன்னு சொல்லுங்க!

— சீர்காழி. வி. ரேவதி.

டான் — நீ என் ரூமுக்குப் போ...''

துருவ் மஞ்சுளாவை ஏறிட்டு நோக்கினான்.

''நீ அந்தப் பொண்ணுகிட்டே நடந்துண்ட விதம் சரின்னு நெனைக்கிறியா?'' என்றாள் மஞ்சுளா. ''நான் அப்போவே சொன்னேன். உங்க ரெண்டு பேருக்கும் பொருந்துமான்னு... பட்!''

''ப்ளீஸ்... லீவ் மி இன் பீஸ்...''

''உன்னை நீ என்ன வேணுமானாலும் பண்ணிக்கலாம், ஆக்கிக்கலாம், அழிச்சுக்கலாம்... இது உன் உரிமை... இப்போ நீயே, போய் ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டு...''

துருவ் எழுந்து அவளைக் கடந்து வெளியே சென்றான். மஞ்சுளா அவனைப் பின் தொடர்ந்தாள். அவன் கீழே இறங்கிச் செல்ல முற்படுவதைப் பார்த்ததும், அவள் சொன்னாள்: ''அவ என் ரூம்லே இருக்கா.''

துருவ் மஞ்சுளாவின் அறையை நோக்கி நடந்தான். ''ஐ ஆம் ஸாரி... உன் பேர் எனக்கு அடிக்கடி மறந்து போயிடறது. கோமளாதானே?'' என்று சொன்னான் துருவ்.

கோமளா, என்ன செய்வதென்றறியாமல் அவனைத் திகைத்து நோக்கினாள்.

''இது உன் ரூம் இல்லே. அதுதான் உன் ரூம்,'' என்று தன்னறையை அங்கிருந்து சுட்டிக் காட்டினான் துருவ்.

''இன்ஃபாக்ட், உனக்குத் தனி ரூம் வேணும்னாலும் அம்மாகிட்டே சொல்லு. அது பெரிய ப்ராப்ளம் இல்லே.''

கோமளா பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

''சரி வா... நம் ரூமுக்குப் போகலாம்.''

அவள் அவனைப் பின்தொடர்ந்தாள்.

மஞ்சுளா அவர்களைப் பார்த்துவிட்டுக் கோமளாவின் தோளை லேசாகத் தட்டியவாறே, தன்னறையை நோக்கிச் சென்றாள்.

துருவ் கட்டிலில் உட்கார்ந்ததும், கோமளாவிடம் கூறினான்: ''இதோ பாரு... நீ இந்த வீட்டிலே என்ன வேணுமானாலும் செய்யலாம். வீட்டிலேங்கிறதில்லே, பொதுவா, நீ என்ன விரும்பறியோ, அதை யாருடைய அனுமதியும் தேவைப்படாம தைரியமாச் செய்யலாம். நான் என் விருப்பப்படி இருப்பேன். நீயும் ஒண்ணும் என்னைக் கேட்கக் கூடாது. நானும் உன்னைக் கேட்கலே...''

''எனக்கு வீணை கத்துத் தர்றேளா?''

அவன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான். அவளுக்குத் தான் கேட்டது தப்போ என்ற பயம் வந்தது.

''நீங்க நன்னா வீணை வாசிக்கறேள். எனக்கும் கத்துக்கணும் போலிருக்கு.''

''என்னைத் திருப்திப்படுத்தணும்னு உனக்கு அவசியமே இல்லே...'' என்றான் துருவ் புன்னகையுடன்.

மிகவும் வசீகரமான புன்னகை. அவனருகில் போய் உட்கார வேண்டும் போலிருந்தது அவளுக்கு. முந்திய அனுபவம் அவளுக்கு அச்சத்தைத் தந்தது.

''பாட்டுக் கத்துக்கணும்னு எப்போதாவது முன்னாலே தோணியிருக்கா?''

''இல்லே...''

''உனக்கு என்னென்ன தெரியும்?''

''அப்படின்னா?''

''தைக்கிறது, ஸ்வெட்டர் போடறது, எம்ப்ராய்டரி, பூவேலை... இந்த மாதிரி...''

''நன்னாச் சமைப்பேன். அப்பா விக்கிற பட்சணம் முக்கால்வாசி நான் பண்ணறது தான்.''

துருவ் அவளை மௌனமாகப் பார்த்தான்.

சில விநாடிகள் கழித்து அவன் கேட்டான். ''பாட்டுக் கத்துத் தரேளா?''

''எனக்கு வாசிக்கத் தெரியும். கத்துத் தரத் தெரியாது. வேணும்னா ஒரு பாட்டு வாத்தியார் ஏற்பாடு பண்றேன்...''

''அப்படி வேணாம்... உங்களுக்கு இஷ்டமிருந்தா கத்துத் தாங்கோ, இல்லாட்டா வேணாம்.''

''ஆமாம், நீ திமிர்னு ஆவேசமா என் மடியிலே வந்து படுத்திண்டியே, எதுக்காக அப்படிப் பண்ணே?''

அவள் வெட்கத்துடன் முகத்தை இன்னொரு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

''உனக்கு முன்னாலே 'செக்ஸ்' அனுபவமுண்டா?''

''என்னது?''

'''செக்ஸ்' அனுபவம்?''

''நீங்க சொல்லறது புரியலே.''

''புருஷன் — பொண்டாட்டின்னா, புருஷன் மடியிலே பொண்டாட்டி படுத்துக்கணும்னு உனக்கு எப்படித் தெரியும்?''

அவள் தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். முகம் சிவப்பேறியது.

''கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம இருக்கிறது எனக்குப் பிடிக்காத விஷயம்.''

''எனக்குத் தெரியும்...'' என்றாள் கோமளா.

''எப்படித் தெரியும்?''

''சினிமாவிலே பாத்திருக்கேன்.''

''நீ நெறையச் சினிமா பாக்கிறதுண்டா?''

அவள் பேசாமலிருந்தாள்.

''சொல்லு... உனக்கு எது பிடிக்கும்னு சொல்லறதிலே தப்பேயில்லே.''

''பாப்பேன்..''

''சரி... இப்பொவும் நீ பாக்கலாம்.. ஆனா நானும் கூட வரணும்னு எதிர்பார்க்காதே.''

''நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா?''

''கேளு.''

''வீணை வாசிக்கறதைத் தவிர, வேற உங்களுக்கு என்ன பிடிக்கும்?''

''வீணை வாசிக்கிறதும் எனக்குப் பிடிக்கலே.''

''அப்படின்னா?''

''எது பிடிக்கும்னு தேடிண்டிருக்கேன். வீணை வாசிக்கிறதும் இதிலே ஒரு முயற்சி தான். ஏதாவது பிடிச்சதுன்னா....'' அவன் சொல்ல வந்ததை முடிக்காமல், கைகளைத் தலைக்குப் பின்னால் கட்டிக் கொண்டு படுக்கையில் சாய்ந்தான்.

''சொல்லுங்கோ... 'பிடிச்சது'ன்னா?''

''அதுதான் என் மரணம்.''

''என்ன இப்படிப் பேசறேள்?''

''ஆமாம்... தேடிண்டேயிருக்கணும். திருப்திதான் மரணம்.''

''என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

''பிடிச்சிருந்தா செத்துப் போயிருப்பேன்'' என்றான் துருவ் சிரித்துக் கொண்டே.

''செத்துப் போறது அவ்வளவு சுலபமா? எங்க பெரியம்மா 'கான்ஸர்' வந்து செத்துப் போனா. வலி பொறுக்க முடியாம தினம் துடிதுடிச்சிண்டிருப்பா. நான் பெருமாளை என்ன வேண்டிண்டேன் தெரியுமா? 'பகவானே, பெரியம்மாவைச் சீக்கிரம் அழைச்சுக்கோ'ன்னு. ஆனா சாவுங்கிறது ஒவ்வொருத்தருக்கும் எப்பொ நேரணும்னுருக்கோ, அப்பொத்தானே நேரும்? நாம நெனைக்கிறத்திலே எதுவுமே இல்லே...'' அவள் பேசிக் கொண்டே போனாள்.

அவன் சொன்னது அவளுக்குப் புரியவில்லை. ஆனால் 'சாவு' என்று அவன் சொன்னதை வைத்துக் கொண்டு, அவளுக்குத் தெரிந்த வாழ்க்கைத் தத்துவங்களை அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

''செத்துப் போறதைப் பத்தி நெனைச்சா உனக்குப் பயமாயிருக்கா?'' என்றான் துருவ்.

''எதுக்காகப் பயப்படணும்? உங்களுக்கு பயமாயிருக்கறதினால்தான் எதைக் கண்டாலுமே உங்களுக்குப் பிடிக்கலே போயிருக்கு...''

துருவ் வாய் விட்டுச் சிரித்தான்.

அவள் கட்டிலோரத்தில் வந்து உட்கார்ந்தாள். ''என்னைக் கண்டாப் பிடிக்கலேனுட்டேள்...''

''நான் அப்படிச் சொல்லவேயில்லியே...''

''பிடிச்சிருந்தாச் செத்துப் போயிருப்பேன்னேளே, அதுக்கு என்ன அர்த்தம்?''

''சொன்னா உனக்குப் புரியாது?''

''ஏன் புரியாது? நான் படிப்பில்லாதவ, முட்டாள்னறதினாலா?''

''சரி... பேசாமெ படு...''

அவள் அவனைச் சிறிது நேரம் உற்று நோக்கினாள். அவன் கண்கள் மூடியிருந்தன. முதலிரவில், 'பேசாமெ படு' என்றால் என்ன அர்த்தம்? இவருக்கு 'இதில்' இஷ்டமில்லையா? இவருக்கு எதில்தான் விருப்பமிருக்கிறது? இவர் எதற்காக என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்?

அவள் விளக்கை அணைத்து விட்டு அவனருகில் கட்டிலில் படுத்தாள். ராம் சந்த் அவள் மனத்திரையில் ஒரு கணம் வந்து விட்டுப் போனான். 'சே.. என்ன தப்பான எண்ணம்' என்று அவள் தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.

அவள் கண்ணிமைகள் நனைந்திருந்தன.

(தொடரும்)

கண்ணதாசனின் வேண்டுதல்!



நெடுமாறனும் கண்ணதாசனும் நண்பர்களுடன் கோவில் பிராகாரம் சுற்றி வரும் போது நவக்கிரகங்கள் அருகில் கவிஞர் நின்றுவிட்டார். ''நவக்கிரகங்களைப் பார்த்துத் திகைத்து நிற்கா தீர்கள்'' என்று சொன்னார் நெடுமாறன்.

''இவர்கள் நவக்கிரகங்களாகவா தெரிகிறார்கள்? இவர்களைப் பார்த்தால் உங்களுக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் நினைவுக்கு வரவில்லையா?'' என்று கண்ணதாசன் கேட்க, அனைவரும் சிரித்து விட்டனர். கண்ணதாசனோ, ஒரு தாளில் எழுத ஆரம்பித்தார்:

''குடைச்சல் பொறாமை குழப்பம் தகராறு
இமைப்பொழுது மின்றி எல்லோரும் ஒன்றா
தமிழ்நாடு காங்கிரசைத் தலைமாற்றி
வைத்தருள்வாய்
மைவான மலைமீதில் அமர்ந்திருக்கும்
பெருமானே''

என்று கவிதை எழுதி, ''நெடுமாறன் இதையும் சேர்த்து உண்டியலில் போட்டு விடுங்கள். ஆண்டவனாவது நம்மவர்களுக்குப் புத்தி புகட்டட்டும்'' என்று சொன்னார்.

ஆதாரம்: இராம. கண்ணப்பன் எழுதிய ''கவியரசர் கண்ணதாசனோடு கண்டதும் கேட்டதும்''

தகவல்: சி. ஆர். நாகராஜன்



* எத்தனையெத்தனை அலங்காரங்கள்...

சங்கறுப்பது எங்கள் தொழில்...

கடற்கரைப் பிரதேசங்களில் குடியிருப்பவர்கள், மீன்பிடித் தொழிலைத்தான் நம்பியிருக்க வேண்டும் என்பதில்லை; அவர்களுக்குச் சங்குத் தொழிலும் கை கொடுக்கும் என்பதற்கு, இராமேஸ்வரமே ஓர் உதாரணம்.

"என்னைப் போல் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், இந்தச் சங்குத் தொழிலைத்தான் குடிசைத் தொழிலாகக் கொண்டிருக்கிறோம்!" என்கிறார் இராமேஸ்வரத்திலுள்ள காந்தி.

குடிசைத் தொழில் என்றால் இதை யார் வேண்டுமானாலும் தனியாகவே செய்ய முடியுமா? "இல்லை; நான் சொன்ன குடிசைத் தொழில் என்பது அந்த அர்த்தத்தில் இல்லை...." என்று காந்தி விளக்க ஆரம்பித்தார்.

"நீங்கள் தனுஷ்கோடிக் கடற்கரைப் பக்கம் சென்றால், கடற்கரையோரங்களில் ஏராளமான பெண்கள், சிப்பிகளைத் தரம் வாரியாகப் பிரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஆண்கள் கடலிலிருந்து ஒட்டு மொத்தமாகச் சங்குகளையும் சிப்பிகளையும் வாரியெடுத்துக் கொண்டு வந்து போடுவார்கள். அவற்றைத்தான் பெண்கள் பிரிப்பார்கள்.

"அப்படித் தரம் வாரியாகப் பிரித்துக் கொண்டு வருவதைத்தான் என்னைப்போல் இருப்பவர்கள் தரத்துக்குத் தகுந்த விலை கொடுத்து வாங்குகிறோம். வாங்கிய பிறகு, அவற்றைச் சுத்தப்படுத்த வேண்டும்.

"சங்கு, சிப்பி.... என்பதெல்லாம் உயிருள்ள ஒருவகைப் புழுக்களின் ஓடுகள் தானே? அதனால், நாங்கள் வாங்குகிற போது, அவற்றுக்குள் அந்தப் புழுக்கள் உயிருடனோ அல்லது செத்தோ இருக்கத் தான் செய்யும் என்பதால், முதலில் அவற்றை நீக்கிச் சுத்தப்படுத்துவோம். பிறகு அவற்றை மேலும் தூய்மையாக்குவதற்காகச் சோடா உப்பெல்லாம் போட்டுக் கொதிக்க வைப்போம்.

"அப்புறம் வண்ணங்கள் தீட்டுவது; டேபிள் வெயிட்டாகப் பயன்படும் சங்குகளில் அமிலங்களைக் கொண்டு எழுத்துக்கள் பொறிக்கும் வேலைகள், சிப்பிகளின் தரத்தையும் உருவத்தையும் பொறுத்து, அவற்றை ஒன்றாகக் கோத்து, வீட்டுவாசல்




* காந்தி



கதவுகளில் தொங்கவிடுவதற்குப் பயன் படுகின்ற வகைகளில்.... அலங்கார மேஜை விளக்குகள்... என்று பலவிதமான டிசைன் களில் உருவாக்குவோம்.

''சங்குகளில் வலம்புரிச் சங்குகள் என்றால் சொல்லவே தேவையில்லை... அவை பூஜைக்குரிய பொருள் என்பதாலும் அபூர்வமாகத்தான் கிடைக்கும் என்பதாலும் அவற்றுக்கு ஏக மதிப்பு. மற்ற சங்குகளெல் லாம் தரத்துக்கும் சைஸுக்கும் தகுந்தபடி விலை போகும்.

''சில சங்குகள் வீடுகளின் வரவேற்பறை களை அலங்கரிப்பதற்காகப் பயன்படும். சில ஊதுவதற்குப் பயன்படும். சில டேபிள் வெயிட்டுக்கு மட்டும்தான் உதவும். இன்னும் சில வளையல்கள் செய்யப் பயன்படும்.



* கடற்கரையில் சிப்பிகள் பொறுக்கும் பெண்கள்...

மேற்கு வங்காளத்தில் திருமணமாகிச் செல்லும் பெண்களுக்குப் பெற்றோர் கொடுத்தனுப்பும் சீதனங்களில், மிக முக்கிய மான தொன்றாகச் சங்கு வளையல்கள் இடம் பெற்றிருப்பதால் அங்கு ஏககிராக்கி. அங்கெல்லாம் நாங்களும் அனுப்புகிறோம்.

''வளையல்களைப் போலவே சங்கில் மோதிரங்கள், காதுகளுக்கான காதணிகளும் செய்கிறோம். இவற்றை ஏழைப் பெண்கள் மாத்திரம் தான் விரும்பி வாங்குகிறார்கள் என்பதில்லை; பாஷனை விரும்பும் வசதி படைத்த பெண்களும் வெளிநாட்டிலிருந்து வரும் பெண்களும் இவற்றை விரும்பி வாங்கி அணிந்து கொள்கிறார்கள் என்பதால், எங் களைப் போன்றவர்கள் பரம்பரை பரம் பரையாகச் செய்து வரும் இந்தச் சங்குத் தொழில் இன்னும் நசித்துப் போகாமல் இருக்கிறது!

''இராமேஸ்வரத்தில் மட்டும் சுமார் இருபதாயிரம் பேர் இச்சங்குத் தொழிலோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந் தும் — இதுவொரு குடிசைத் தொழிலாக இருந்தும் நமது அரசாங்கம் இத்தொழிலுக்கு உதவவில்லை. மேற்கு வங்க அரசைப் போல் இத்தொழிலை ஊக்குவிப்பதற்காக நமது அரசும் இதற்கு விற்பனை வரிவிலக்களித் தால், இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் லாபகரமாக இருக்கும்!'' என்றார் காந்தி.

— பிரின்ஸ்

வண்ணப்படங்களும், படங்களும்: சுபா

யோசனை
தெரிவித்த
வாசகர்:

பி. ராம்குமார்,
இராமேஸ்வரம்.

சிவகாமியின்

பதினாறாம் அத்தியாயம்

முற்றுகைக்கு ஆயத்தம்

கண்ணபிரானும் கமலியும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் அரண்மனை அந்தப்புரத்தின் முன் வாசல் மண்டபத்தில் அமர்ந்து, மகேந்திர பல்லவரின் பட்ட மஹிஷியான புவன மகாதேவியும், மாமல்ல நரசிம்மரும், தளபதி பரஞ்சோதியும் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

''தேவி! சென்ற எட்டு மாதங்களாக இந்தக் கோட்டைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க நேர்ந்ததன் பொருட்டுக் குமார சக்கரவர்த்தி ஓயாமல் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாரே? அவர் குறைப்படுவதற்குக் காரணம் ஒன்றுமே இல்லை. கோட்டை மதில், நகரம் எல்லாவற்றையும் நான் நன்றாய்ச் சுற்றிப் பார்த்தாகி விட்டது. இந்தக் காஞ்சிக் கோட்டையை ஏறக்குறையப் புதிய கோட்டையாகவே செய்து விட்டிருக்கிறார். தேவேந்திரனும் விருத்திராசுரனும் சேர்ந்து படையெடுத்து வந்தாலுங்கூடக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே புகமுடியாது; வாதாபி புலிகேசியும் தலைக்காட்டுத் துர்விநீதனும் என்ன செய்து விடப் போகிறார்கள்!'' என்று தளபதி பரஞ்சோதி கூறினார்.


''கோட்டையை அவ்வளவு பலப்படுத்த மாமல்லன் என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறான்? நீதான் எனக்குச் சொல்ல வேண்டும், பரஞ்சோதி! மாமல்லன் எனக்கு ஒன்றுமே சொல்வதில்லை. அந்தப்புரத்திற்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அபலை ஸ்திரீக்கு யுத்த விஷயங்கள் என்ன தெரியப் போகிறது என்று அவனுக்கு எண்ணம்!'' என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமஹிஷி.

''அம்மா! அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடக்கும் அபலை ஸ்திரீ உண்மையில் தாங்களா? நானல்லவா பெண்ணிலும் கேடானவனாகக் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேன்! மகேந்திர பல்லவர் இப்படி என்னை வஞ்சிப்பார் என்று நான் நினைக்கவில்லை!'' என்று கூறி மாமல்லர் கைகளைப் பிசைந்து கொண்டார்.

''குழந்தாய்! உன் தந்தையைப் பற்றி எதுவும் சொல்லாதே! அவர் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அது முன் யோசனையுடனும் தீர்க்க திருஷ்டியுடனும் இருக்கும்....'' என்று புவன மகாதேவி கூறுவதற்குள் பரஞ்சோதி, ''உண்மை, தேவி! உண்மை! மகேந்திர சக்கரவர்த்தியைப் போல் மதிநுட்பமும் முன்யோசனையும் உள்ளவர்களை ஈரேழு பதினாலு உலகத்திலும் காணமுடியாது என்று நான் சத்தியம் செய்வேன்!'' என்றார்.

''ஒருவருக்கு இரண்டு பேராய்ச் சேர்ந்து கொண்டீர்கள் அல்லவா? அப்படியென்றால் நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன். மகேந்திர பல்லவர் ரொம்பவும் முன்யோசனையுடன் காரியங்களைச் செய்கிறவர்தான்; சந்தேகமில்லை. ஆனால், அவருடைய தந்தை சிம்மவிஷ்ணு மகாராஜா இன்னும் அதிக முன்யோசனை உள்ளவர். ஆகையினால்தான் அவர் துர்விநீதனுடைய தந்தைக்குப் பட்டங்கட்டி வைத்தார். அவரே நேரில் கங்கதேசம் சென்று தம் கையினாலேயே மகுடம் சூட்டினார்! அந்தக் காரியத்துக்கு எவ்வளவு நன்றாய் இப்போது துர்விநீதன் நன்றி செலுத்துகிறான் பாருங்கள்! சிங்கமும் சிங்கமும் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போது நடுவில் நரி நுழைவதுபோல், புலிகேசி படையெடுத்திருக்கும் சமயம் பார்த்துத் துர்விநீதனும், பல்லவ ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்! அவசர அவசரமாக எங்கும் இராத்தங்காமல் துர்விநீதன் தன் சைனியத்துடன் வந்து கொண்டிருக்கிறான்? இது தெரிந்தும், நான் இந்தக் கோட்டைக்குள்ளே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது! நீங்கள் சக்கரவர்த்தியின் மதிநுட்பத்தையும் தீர்க்காலோச

சபதம்



னையும் பற்றிப் பேசுகிற போது, எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது!'' என்று மாமல்லர் கூறுகையில், அவருடைய கண்கள் நெருப்புத் தணலைப்போல் சிவந்து தீப்பொறியைக் கக்கின.

''குழந்தாய்! வீணாக நொந்து கொள்ளாதே! கங்கபாடி அரசனின் நன்றியற்ற துரோகச் செயலை நினைத்தால் எனக்கும் கோபமாய்த்தானிருக்கிறது! அதற்காகஎன்ன செய்யலாம்? எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா?'' என்றாள் புவன மகாதேவி.

''தேவி! துர்விநீதனுக்குத் தக்க தண்டனை கொடுக்க இதற்குள்ளாகவே சக்கரவர்த்தி இட்டம் போட்டிருப்பார்: சந்தேகமில்லை'' என்றார் தளபதி பரஞ்சோதி.

''சக்கரவர்த்தி இட்டம் போட்டிருப்பார்; அதை நிறைவேற்றவும் செய்வார். ஆனால் நான் ஒருவன் எதற்காக யுவ மகாராஜா, குமார சக்கரவர்த்தி, மாமல்லன் முதலிய பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறேன்? அம்மா! பாரதக் கதையில் வரும் உத்தர குமாரனைவிடக் கேடானவன் ஒருவன் உண்டு என்றால், அவன் நான்தான். உத்தர குமாரனாவது போர்க்களத்துக்குப் போய் விட்டுத் திரும்பி ஓடிவந்தான். நானோ அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை. மகாபாரதக் கதையை எழுதியது போல் இந்தக் காலத்துக் கதையை யாராவது எழுதினால், என்னுடைய வீரத்தையும் தீரத்தையும் எவ்வளவு பாராட்டுவார்கள்? ஆனாலும் நான் சாந்தமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் சேர்ந்து உபதேசிக்கிறீர்கள்!'' என்று கூறியபோது, வீர மாமல்லரின் கண்களில் நீர் ததும்பி நின்றது.

அவருடைய முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாதவராயிருந்த பரஞ்சோதி சக்கரவர்த்தினியை நோக்கி, ''தேவி! பல்லவ குமாரர் தம்மை உத்தர குமாரனுடன் ஒப்பிட்டுக் கொள்வது கொஞ்சமும் பொருத்தமாயில்லை. மற்ற எல்லாரும் போருக்குப் போன போது உத்தர குமாரன் என்ன செய்து கொண்டிருந்தான்? தன்னுடைய தங்கை உத்தரகுமாரி நாட்டியம் கற்றுக் கொள்வதைப் பார்த்துக் கொண்டு காலங் கழித்தான். மாமல்லர் அப்படிக் காலங் கழிக்கவில்லையே!'' என்றார். இவ்விதம் அவர் சொல்லி வருகையில் மூன்று பேருக்கும் சிவகாமியின் நாட்டியக் கலை விஷயம் ஞாபகம் வந்தது. மாமல்லரின் முகம் சுருங்கியது.

பரஞ்சோதி தாம் நடனக் கலையைப் பற்றிப் பிரஸ்தாபித்தது உசிதத் தவறு என்பதை உணர்ந்து கொண்டு, ''மேலும், யுத்தம் இன்னும் ஆரம்பமாகக்கூட இல்லையே? மகாபாரத யுத்தத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய யுத்தம் இனிமேல் தானே நடக்க இருக்கிறது? மாமல்லர் வீரச் செயல்கள் புரிவதற்கு இனிமேல் தானே சந்தர்ப்பங்கள் வரப்போகின்றன?'' என்றார்.

''போதும், போதும்! எத்தனை யுத்தம் நடந்தால்தான் என்ன? எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் வந்தால்தான் என்ன? அப்பா என்னை இந்தக் கோட்டைக்குள்ளேயே பூட்டி வைக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?'' என்று மாமல்லர் கொதிப்புடன் கேட்டார்.

புதல்வனின் மன நிலையைக் கண்ட அன்னை பேச்சை மாற்ற விரும்பி, ''பரஞ்சோதி! கோட்டையைப் பத்திரப் படுத்துவதற்கு மாமல்லன் செய்திருக்கும் காரியங்களைப் பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றாள்.

''தேவி! நமது கோட்டை மதிலைச் சுற்றியுள்ள அகழியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?''

''ஆமாம்; எட்டு மாதங்களுக்கு முன்னால் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்ற பிறகு நான் அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை.''

''நானும் எட்டு மாதங்களுக்கு முன்பு

அமரர் கல்கி

பார்த்ததுதான். முன்னே பார்த்தபோது சிறு கால்வாய் மாதிரி இருந்தது. இப்போது பார்த்தால் சமுத்திரம்மாதிரி அலைமோதிக் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காணப்படுகின்றன. வாதாபிச் சைனியத்தில் எத்தனை பேருக்கு இந்த அகழியில் மோட்சம் கிடைக்கப் போகிறதோ!'' என்றார் பரஞ்சோதி.

''அகழியில் அவர்கள் இறங்கினால் தானே? பாலங்கள் அமைத்துக் கொண்டு வந்தால்? அல்லது படகிலே வந்தால்?''

'தேவி! அகழியின் அருகில் வருகிறவர்கள் மீது அம்புகளைப் பொழிய ஐயாயிரம் வில் வீரர்கள் மதில் சுவர்கள் மீது மறைந்து காத்திருப்பார்கள்.! அப்படியும் அகழியைத் தாண்டி வருகிறவர்களுக்கு மதில் சுவருக்கும் அகழிக்கும் மத்தியில் எத்தனையோ அதிசயங்கள் காத்துக் கொண்டிருக்கும். வெளிக்குத் தெரியாத பள்ளங்களில் அவர்கள் விழுந்து காலை ஒடித்துக் கொள்வார்கள். ஆங்காங்கே கண்ணுக்குத் தெரியாதபடி விரித்திருக்கும் வலைகளிலும் பொறிகளிலும் சிக்கிக் கொள்வார்கள. இவற்றையெல்லாம் மீறி வந்து மதில் சுவர்மேல் ஏற முயலும் சளுக்க வீரர் தலைகளின் மீது மதில் சுவரின் மேல் வைத்திருக்கும் பாறாங்கற்கள் உருண்டுவிழும்!''

''வாதாபிச் சைனியம் கடலைப் போல் பெரியதென்று சொல்கிறார்களே. பரஞ்சோதி! லட்சக்கணக்கான வீரர்கள் மனம் வைத்தால் அகழியை ஆங்காங்கே தூர்த்து வழி ஏற்படுத்திக் கொள்ளலாமல்லவா!''

''ஆமாம் தேவி! அகழியைத் தூர்க்கலாம்; ஆனால் கோட்டை மதிலை அவ்வளவு சுலபமாக இடிக்க முடியாது!''

''கோட்டைவாசலுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கொண்டு யானைகளை ஏவினால் என்ன செய்கிறது? மத்த கஜங்களின் தாக்குதலுக்கு எதிரே கோட்டையின் மரக்கதவுகள் என்ன செய்யும்?'' என்று பட்டமகிஷி கேட்ட போது. பரஞ்சோதி எதையோ நினைத்துக் கொண்டவர்போல் சிரித்தார்.

''அப்பா! ஏன் சிரிக்கிறாய்?'' என்றாள் சக்கரவர்த்தினி.

''தாங்கள் கேட்டதை நினைத்துத்தான் சிரிக்கிறேன். உண்மைதான் தேவி! வாதாபி வீரர்கள் அப்படித்தான் செய்யப்போகிறார்கள். நமது கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்க்கப் போகிறார்கள். அல்லது பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கொண்டு வந்து பாலம் போடப் போகிறார்கள். போட்டு விட்டுக் கோட்டைக் கதவுகளைத் தகர்க்க யானைகளை ஏவப் போகிறார்கள். அந்த யானைகளுக்கு முதலில் மதுவைக் கொடுத்து விட்டுத்தான் ஏவப் போகிறார்கள்! ஆனால்! ஆகா! அந்த யானைகள் எப்பேர்ப்பட்ட அதிசயத்தை அநுபவிக்கப் போகின்றன? கோட்டை வாசலின் மேல்மண்டபத்திலிருந்தும் பக்கத்து மதில் சுவர்களின் மேலிருந்தும் வஜ்ராயுதம் விழுவதுபோல் வேல்கள் வந்து அவற்றின் தலைமீது விழும்போது. அந்த மதுவுண்ட யானைகள் பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு திரும்பி ஓடி வாதாபி வீரர்களைத் துவைத்து நாசமாக்கப் போகிற காட்சியை நினைத்துப் பார்க்கையில் எனக்குச் சிரிப்பு வருகிறது! இது மட்டுமா? மேலேயிருந்து விழுகிற வேல்களுக்குத் தப்பிச் சிற்சில யானைகள் வந்து கதவிலே மோதக் கூடுமல்லவா? அதனால் கோட்டைக் கதவு பிளக்கும் போது அந்த யானைகளுக்கு மகத்தான அதிசயம் காத்திருக்கும் தேவி! வெளிக் கதவு பிளந்ததும். உள்ளே நீட்டிக்கொண்டிருக்கும்வேல் முனைகள் அவற்றின் மண்டையைப் பிளக்கும்



போது ஆகா, அந்த யானைகள் வந்த வேகத்தைக் காட்டிலும் திரும்பி ஓடும் வேகம் அதிகமாயிராதா?'' என்றார் பரஞ்சோதி.

''அப்படியா?'' என்று மாமல்லரின் அன்னை அதிசயத்துடன் கேட்டாள்.

அதுவரையில் மௌனமாயிருந்த மாமல்லர் அப்போது சம்பாஷணையில் சேர்ந்து, ''ஆம் அம்மா! ஆனால், இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் மூல காரணம் யார் தெரியுமா? நமது தளபதி பரஞ்சோதிதான்! இவர் முதன் முதலில் காஞ்சியில் புகுந்த அன்று மதயானையின் மேல் வேல் எறிய, யானை திரும்பி ஓடிற்றல்லவா? அதற்கு மறுநாளே இந்தக் காஞ்சிமா நகரிலுள்ள கொல்லர்கள் எல்லோரும் வேல் முனைகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்! தளபதி அன்று செய்த காரியத்தினாலேதான், வாதாபியின் யானைப் படையை எதிர்ப்பதற்குத்தக்க யோசனை அப்பாவின் மனத்தில் உதயமாயிற்றாம். இதையெல்லாம் அப்பாவே என்னிடம் சொன்னார்!'' என்று மாமல்லர் பெருமையுடன் கூறிப் பரஞ்சோதியை அன்புடன் தழுவிக் கொண்டார்.

''தேவி! இந்த எட்டு மாதத்தில் காஞ்சி நகர்க் கொல்லர்கள் செய்திருக்கும் வேலையை நேற்று நான் பார்த்தேன். லட்சோப லட்சம் வேல்களைச் செய்து குவித்திருக்கிறார்கள். காஞ்சி நகர்க் கொல்லர்கள் வெகு கெட்டிக்காரர்கள், அம்மா! நான் கொண்டு வந்திருந்த சோழநாட்டு வேலைப் போலவே அவ்வளவும் செய்திருக்கிறார்கள். என்னையே அவர்கள் ஏமாறச் செய்து விட்டார்கள். வடநாட்டுக்கு நான் யாத்திரை சென்றபோது என்னிடம் கொடுக்கப்பட்ட வேல் என்னுடைய சொந்த வேல்தான்





ஒருவர்: கல்யாணத்துக்குத் தலைமை தாங்க வந்திருக்கிற கட்சித் தலைவர் ஏன் கண்கலங்குகிறார்?

நண்பர்: ரொம்ப நாளைக்கப்புறம் இவ்வளவு கூட்டத்தைப் பார்த்ததிலே கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டாரு.

— வி. கி., குமார்.

என்று எண்ணி நான் ஏமாந்து போனேன். இங்கே திரும்பி வந்ததும்தான் என்னுடைய வேலை மாமல்லர் பத்திரமாய் வைத்திருந்தார் என்று தெரிந்தது. எட்டு மாதமும் வீணில் கழித்ததாக மாமல்லர் எண்ணுவது பெரும் பிசகு. அம்மா! கோட்டை மதில் பாதுகாப்புக் காரியம் மட்டுமல்ல; கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக இன்னும் எவ்வளவோ செய்திருக்கிறார். காஞ்சி மக்களுக்கு இரண்டு வருஷத்துக்குத் தேவையான தானியங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. நகருக்குள்ளிருந்த அநாவசியமான மக்கள் எத்தனையோ பேரை வெளியேற்றியாகி விட்டது. முக்கியமாகக் காஞ்சி நகருக்கே அவலட்சணமாயிருந்த காபாலிகர்களை வெளியேற்றியது பெரிய காரியம். அதற்கு நமார சக்கரவர்த்தி வெகு நல்ல யுக்தியைக் கையாண்டார். தேவி! காஞ்சியிலுள்ள மது பானக்கடைகளையெல்லாம் மூடிவிட வேண்டும் என்று நேற்றைய தினம் கட்டளை போட்டார். இன்றைக்கு அவ்வளவு காபாலிகர்களும் கையில் மண்டை ஓட்டையும் மாட்டுக் கொம்பையும் எடுத்துக்கொண்டு வடக்குக் கோட்டை வாசல் வழியாகப் போய் விட்டார்கள்....!''

இப்படிப் பரஞ்சோதி சொல்லிக் கொண்டே வருகையில் அந்தப்புரத்துச் சேடி ஒருத்தி, அரண்மனை முன்கட்டிலிருந்து உள்ளே வந்து புவனமகாதேவியின் அருகில் நின்று மெதுவான குரலில் ஏதோ கூறினாள்.

அதைக் கேட்ட தேவி முகத்தில் கிளர்ச்சியுடன், ''மாமல்லா! அப்பாவிடமிருந்து செய்தியுடன் சத்ருக்னன் வந்திருக்கிறானாம்!'' என்று சொன்னாள்.

மாமல்லர் பரபரப்புடன் எழுந்து போக முயற்சி செய்த போது ''குழந்தாய்! சத்ருக்னன் இங்கேயே வரட்டும். செய்தி என்னவென்று நானும் தெரிந்து கொள்கிறேன்'' என்றாள் அன்னை.

(தொடரும்)

அருள்வாக்கு



ஒரே ஆகாசம் எங்கும் நிறைந்திருக்கிறது. ஆகாசம் எல்லாவற்றிற்கும் இடம் கொடுக்கிறது. எங்கும் பரவியிருக்கிற இந்த ஆகாசத்துக்கு 'மஹாகாசம்' என்று பெயர். திறந்தவெளியில் காலியாகப் பல குடங்களை வைத்தால் அவற்றுக்குள்ளும் ஆகாசம்தான் இருக்கிறது. குடத்திற்குள் இருக்கிற ஆகாசத்திற்குக் 'கடாகாசம்' என்று பெயர். கடம் என்றால் குடம். கடம் உடைந்து போனால் கடாகாசமும் போய்விடுமா? போகாது. கடாகாசமாகத் தனியாகத் தெரிந்தது மஹாகாசத்தில் கலந்துவிடும். கடம் உடையாத பொழுது அந்த ஆகாசம் தனியாகச் சின்னதாக இருக்கிறது போல நமக்குத் தோன்றுகிறது. உடைந்து விட்டால் கடாகாசம் மஹாகாசமே ஆகி விடுகிறது. கடம் இருக்கிற அளவு எதுவோ அதற்குத் தகுந்தபடி இப்படிப்பட்ட பேதங்கள் ஏற்படுகின்றன. அதே மாதிரி பரமாத்மா அந்தந்த மனஸுக்குத் தக்கபடி வித்தியாசமாகத் தோன்றுகின்றார். செம்பிலிருக்கிற ஜலம் பெரிய செம்பாயிருந்தால் பெரியதாகவும் சின்னச் செம்பாயிருந்தால் சின்னதாகவும் தோன்றுகிறது. செம்பை உடைத்து விட்டால் அந்தப் பேதங்களெல்லாம் போய் விடுகின்றன. அதைப் போல மனஸ் போய் விட்டால் பேத புத்தியும் போய் விடுகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

பரிசு

ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/—
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/—
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/—
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/—

முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 — 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

அப்புசாமியும் மூணு கை முனிரத்தினமும்

பாக்கியம் ராமசாமி

திருமதி லதிகா படள்கரிடமிருந்து சீதாப் பாட்டிக்கு ஓர் அழைப்பு வந்திருந்தது. தீவுத் திடலில் நடைபெறும் இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் தோட்டக் கலைக் கண்காட்சி இடம்பெறும் இரு தினங்களில் ஏதாவது ஒரு நாள் வருகை தரும்படி அழைப்பில் கோரியிருந்தார்.

'லதிகா படள்கர் தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர். அவரைத் தனது பா. மு. கழகத்துக்குச் சிறப்பு வருகை தரும்படி அழைக்க வேண்டும் என்று ஏற்கெனவே சீதாப்பாட்டி நினைத்துக்' கொண்டிருந்த வேளையில் அவரிடமிருந்தே அழைப்பு வந்தது, தலைவலி நேரத்தில் டிகாக்ஷன் நழுவிப் பாலில் கொட்டியது போன்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்பிட்ட தினம் சீதாப்பாட்டி புறப்பட்டுச் சென்றாள். வரவேற்ற ஆணையர்; வந்திருந்த பிரமுகர்களுக்கு அழகுச் செடிகளையும், அலங்காரக் கொடிகளையும், கலப்புத் திருமணம் செய்து கொண்டு பரிசு பெற்ற பழரகங்களையும் விதைகளையும் விளக்கிக் கொண்டிருந்தார்.

சீதாப்பாட்டி உன்னிப்பாகக் கேட்க முயன்றாலும், பொருட்காட்சியில் வேறு ஒரு ஸ்டாலிலிருந்து ஒலி பெருக்கியில் வந்த அறிவிப்பு அவளது கவன ஈர்ப்புக்கு அடிக்கடி வந்தது. பழகிய குரல்.

''கலியுக அதிசயம் நைனா! 'மூணு கை முனிரத்தினம்!' 'சாதா மனுஷனுக்கு ரெண்டு கை. இவருக்கு மூணு கை சார். காணத் தவறா.... சர்ர்ர்ர். (மூக்குப் பொடி இழுப்பு ஓசை)..தீர்கள்... ஆக்கூ! ஆக்கூ! கலியுக அதிசய மனிதர் சார்... மூணு கை ஆக்கூ... மனிதர் சார்.. ஒரே ரூபாய் டிக்கெட்...''

'கணவர் அப்புசாமியேதான்!

''எக்ஸ்க்யூஸ்மி. ஜஸ்ட் எ மினிட்,'' என்று ஆணையர் படள்கரிடமிருந்து படக்கென்று முறித்துக் கொண்டு, ஒலிபெருக்கிக் குரல் வந்த ஸ்டாலைக் குறிவைத்து விரைந்தாள் சீதாப்பாட்டி.

குப்பைமேடு போன்ற ஒதுக்குப்புறமான இடத்தில் அழுக்கும் கந்தலுமான படுதாக்களுடன், ஸ்டால் என்ற பெயரைக் கொண்டிருந்த ஓர் இடத்தில், நாற்காலியா, முக்காலியா, மரமா, தகரமா என்று இனம் கண்டு கொள்ள இயலாத ஒரு வஸ்துவின் மீது உட்கார்ந்தவாறு கையில் மைக்குடன் அப்புசாமி கத்திக் கொண்டிருந்தார் உற்சாகமாக.

''கலியுக அதிசயம் சார்... மூணு கை முனிரத்தினம்... ஒரே ரூபாய்...

சீதாப்பாட்டி பல்லைக் கடித்துக் கொண்டாள். கடந்த பதினைந்து தினங்களாக மத்தியான்ன வேளைகளில் கணவன் அப்ஸ்காண்ட் ஆகும் ரகசியம் இதுதானா?

'வாய்ஸ் அஃப் அப்புசாமி' அவள் காதுகளில் அநாகரிகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. ஸ்டாலை ஒட்டி ஓடிய கூவ மாநதியின் 'குப் குப்' வேறு குடலைக் கடைந்தது. நகர்ந்தால் போதும் என்று சீதாப்பாட்டி கைக்குட்டையால் மூக்கை மூடிக் கொண்டாள்.

இரவு கணவன் வந்ததும், உடனடியாக ஒரு தனிநபர் விசாரணைக் கமிஷன் அமைத்து, ஊழல் பட்டியலைத் தொகுத்து, அவர் கழுத்தில் மாட்டி அவரை உண்டு இல்லை என்று ஆக்கி விட வேண்டும் என்ற கடுங்கோபத்துடன் வெளியேறினாள்.

மூன்று கை முனிரத்தினத்தை அப்புசாமி சந்தித்தது எப்படி? மூ.மு.ரத்தினத்தின் புகழ் பரப்புச் செயலாளராக, மைக்கின் செல்வராக அப்புசாமி மாறியது எவ்வாறு?

தீவுத் திடலில் எந்தக் கண்காட்சி நடந்தாலும் ஒரு தினமாவது அப்புசாமி அங்கு போய் விடுவார். அங்கு விற்கப்படும் மாவட்ட மற்றும் மாநிலச் சிறப்பு அம்சங்களான முறுக்குகள், சுண்டல்கள், பானி பூரிகள், பஜ்ஜிகள், மசாலா மக்காச் சோளங்கள் இவற்றை ஒரு பிடி பிடிப்பார்.

இந்தத் தடவையும் அவ்வாறே, காரம் மிளகாய்ப் பொடி தூவிய ஒரு மாபெரும் அப்பளத்தை வாங்கிக் கொண்டு ஒரு ஸ்டாலின் பின்புறம் ஒதுங்கி நின்று சுவைக்கத் துவங்கினார். குவைத் அளவு விண்டு வாயில் போட்டுக் கொண்டிருப்பார்.

அதற்குள் துணித் திரை வழியே சரேலென்று ஒரு கை நீண்டது. ''சார் நம்மளையும் கொஞ்சம் கவனியுங்கோ.''

தனது அப்பள சாம்ராஜ்யத்தில் பங்கு கேட்கத் துணிந்த கைச் சின்னத்தில் எதையாவது போடலாமா வேண்டாமா என்று அப்புசாமி உறுத்துப் பார்த்தார்.

அசரீரி போல் குரல் ஒலித்தது. ''டிக்கெட்

வாங்கிட்டு அந்தப் பக்கமாக வா நைனா. முதல்லே கொஞ்சம் அப்பளம் குடுத்திடு. பசி கொல்லுது நைனா.''

அப்புசாமி துளியூண்டு பிய்த்து நீட்டிய கையில் வைத்தார்.

''நைனா, தருமராஜா, நல்லாயிருக்குது அப்பளம். இன்னும் கொஞ்சம் தரக் கூடாதா? டிக்கெட் எடுத்துக்கிட்டு வாசல் வழியா வா துரை.''

கை சொன்னபடி அப்புசாமி ஸ்டால் நுழைவாயிலில் ஒரு ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டார்.

முகப்பில் போதுமான எழுத்துப் பிழைகளுடன் கோணாமாணாக் கையெழுத்தில் ஓர் அறிவிப்பு எழுதப்பட்டிருந்தது.

'காணத் தவறாதீர். மூணு கெய் அதிசய மனுசன். ஒரே ரூபாய்.' புரோப்ரெய்டர் மூணு கெய் முனிரத்தினம் அவர்கள்.'

அப்புசாமி துணிப் படுதாவை விலக்கிக் கொண்டு உள்ளே சென்றார்.

'கிட்ரக்! கிட்ட்ரக் கிட்ரக்!' என்று எந்த இளையராஜாவாலும் எழுப்ப முடியாத ஒரு விநோத ஒலி உள்ளே எழும்பிக் கொண்டிருந்தது.

அந்தச் சப்தம் எங்கிருந்து வருகிறது என்று பார்த்தார். படுதா ஓரமாக ஒரு நாற்காலியில் சோர்வாக, சாதுவாக, உட்கார்ந்திருந்தான் முனிரத்னம். கையில் ஒரு பலூனை வைத்துக் கொண்டு 'கட்ரக் கட்ட்ரக்' ஒலியை அவன்தான் எழுப்பிக் கொண்டிருந்தான்.

ஆசாமியைப் பார்த்தால் சாதாரண மனிதப் பிறவி மாதிரிதான் அப்புசாமிக்குத் தெரிந்தது. சட்டை ஏதும் போடாத திறந்த மார்பு.

மாமூலான இரண்டு கைகளுடன், மூன்றாவதாக ஒரு சிறு கை, கெச்சல் வாழைக்காய் மாதிரி மூன்றங்குல நீளத்துக்கு நடு மார்பில் ஒட்டிக் கொண்டிருந்தது.

அவனது மார்புப் பிரதேசம் கசமுசவென்று கலவரப் பகுதி போல சற்றுக் குழப்பமாக இருந்தது. அதிகப்படியான சதைப் பகுதியைப் பார்க்க அப்புசாமிக்குச் சங்கடமாக இருந்தது. ஒரு ரூபா கொடுத்து வந்த உரிமையில் அப்புசாமி கேட்டு வைத்தார்: ''ஏப்பா, இதுதான் மூணாவது கையா? ஒண்ணும் ஒட்டு வேலை இலை இல்லையே?''

அவன் அசல் கைகளால் அப்புசாமியைக் கும்பிட்டான். குரல் தழுதழுக்க, ''உங்களை மாதிரிபெரியமன்ஷாளெல்லாம் இப்படிச் சந்தேகப்பட்டுச் சந்தேகப்பட்டுத்



தான் எங்க மாதிரி அதிசயப் பிறவிங்களுக்கு மதிப்பே டெவுன் ஆயிடுச்சி. அந்தக் காலத்துலே எக்ஸிபிஷன்னா, எங்களாட்டம் அதிசயப் பிறவிங்களுக்குத்தான் கூட்டம் கூடும். ரெண்டு தலை மனுஷி, பாம்புத் தலை அழகி அப்படி இப்படீன்னு...''

அப்புசாமியின் கண்கள் அவனது மூன்றாவது கையை ஆராய்ந்து கொண்டிருந்தன. ''கை மாதிரிதான் தெரியுது. ஆனால் மகாவிஷ்ணு, பிரம்மா, இவுங்க கை மாதிரி பளிச்சினு வெளியே தெரியற மாதிரி இல்லையே,'' என்றார் ஏமாற்றத்துடன்.

அவனுக்கு அழுகையே வந்து விட்டது. கடகடவென்று தன் துயர சரித்திரத்தை தொண்ணூறு நிமிட காஸெட் மாதிரி ஒலி பரப்பித் தள்ளி விட்டான்.

''சார்... நான் என்னங்க பண்ணுவேன். மகாவிஷ்ணு, பிரும்மாவெல்லாம் கடவுளுங்க. எத்தினி கை வேணும்னாலும் பளிச் பளிச்சுனு வெச்சிக்கலாம். நம்ம கையிலே இருக்கற கை இவ்வளவுதாங்க. இதை வெச்சுத்தான் ஊர் ஊரா எக்ஸிபிஷன்லே ஸ்டால் போட்டு வயித்துப் பிழைப்பு நடக்குது. இங்கே ஸ்டால் போட்டுப் பத்து நாள் ஆகுது. இதுவரைக்கும் — உங்களோடதும் சேர்த்து பன்னெண்டு ரூவா வசூலாயிருக்குது. வெறும் டீ குடிச்சுக் காலம் தள்ளறேன்.''

அப்புசாமிக்குப் பரிதாபமாயிருந்தது.

''உன் பேர்தான் புரோப்ரெய்டர் முனிரத்தினமா? வாசல்லே போட்டிருந்ததே.''

''ஆமாங்க. அதிசயப் பிறவியும் நான் தான். புரோப்ரெய்டரும் நான்தான்.''


''அதாவது, நீயே முதலாளி, நீயே அதிசயப் பிறவியா?'' டீ.வி. பேட்டியாளர் மாதிரி எதிராளியின் பதிலிலிருந்தே ஒரு கேள்வி தயாரித்தார்.

''வாசல்லே அரை டவுஜர்லே இட்லர் மீசையோடு ஒரு ககமாலம் இருக்கானே. அவன்தானுங்க டிக்கெட் விற்கறவன். நாளைக்கு அவனும்போயிடப்போறானாம். அப்பளம் சுடற ஸ்டாலிலே ஒரு நாளைக்குப் பத்து ரூபாக் கூலி தர்றாங்களாம். அவனும் போய் விட்டால் என் பாடு பேஜாருங்க. நானே வெளியே வந்து கூவி டிகெட் குடுத்துட்டு, நானே உள்ளாற வந்து குந்திகினு, நான்தாங்க அதிசயப் பிறவின்னா அது நல்லாருக்குமுங்களா?''

அப்புசாமி நெகிழ்ந்து போனார்.

மூணு கை முனிரத்தினத்தின் மீது ஆழமாக அன்பும் அனுதாபமும் ஏற்பட்டு விட்டன. அவனுக்காகத் தினமும் ஸ்டாலுக்கு வந்து குரல் கொடுக்கும் பணியை மேற்கொண்டு விட்டார். அதுவுமில்லாமல் மைக்கில் பேச அவருக்கு வேறு யார் சந்தர்ப்பம் தருவார்கள்?

ராத்திரி பதினொரு மணி. நட்புக் கட்சியின் தயவில் அரசு நடத்தும் தலை வரைப் போலப் பயந்து நடுங்கியவாறு



இயற்கையான ஜூஸ்கள், இயற்கையான உணவுகள் அத்துடன் இயற்கையான உட்பொருட்களுடன் கொசு விரட்டி!
கொசுக்களை விரட்டிட ஆரோக்கியமான வழி... டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
ஏம்பா, கொசுக்களை விரட்ட கத்தி எதுக்கு? வத்தி போதுமே! டார்டாய்ஸ் கொசுவத்தியால் பாதுகாப்பாய் விரட்டலாமே!
பாதுகாப்பாகவும், ஆற்றலுடனும் கொசுக்களை சுழற்றி அடிக்க... டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர் : பாம்பே கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஃபோர்ட், பம்பாய்-400 023. ஃபோன் : 273831.
TORTOISE



''இந்த மாச பட்ஜெட் போட்டுட்டியா?''
''நேரமில்லிங்க... இந்தாங்கஜட்-ஆன்-அக்கவுண்ட்... பணத்தை எடுங்க...!''

அப்புசாமி பஸ்ஸரை அழுத்தினார்.

சீதாப்பாட்டி அப்புசாமியை அந்தக் கணமே வெளியேற்றத் தயாராக ஒரு தலையணை ஜமுக்காளம் ஆகியவற்றை அவர் முகத்தில் எறியும் ஆயத்தங்களுடன் கதவைப் படீரென்று திறந்தாள்.

''சீதே! இவர்தான் கலியுக அதிசயப் பிறவி! மூணு கை முனிரத்தினம்! ஹிஹி! ரொம்பக் கூச்சப்பட்டார். அட பரவாயில்லை, வாய்யா. பத்து நாள்தானே தங்கப் போறே! என்று கூட்டி வந்து விட்டேன்'' என்று அதிசயப் பிறவியை அறிமுகம் செய்து வைத்தார்.

திக்கென்றது சீதாப்பாட்டிக்கு. 'வாட் நான்ஸென்ஸ் ஆர் யு டாக்கிங்' என்று கத்துவதற்குள், மூணு கை முனிரத்தினம் தனது ஒரிஜினல் கைகளைப் பயன்படுத்திப் பாட்டிக்கு ஒரு கும்பிடு போட்டான்.

''அம்மா! தாயே ஏழைக்கு இரக்கம் காட்டுங்க.''

சீதாப்பாட்டி பல்லைக் கடித்துக் கொண்டாள். ''யு ஷுட் ஹாவ் இன்ஃபார்ம் ட் மீ இன் அட்வான்ஸ்'' என்றாள் அப்புசாமியிடம்.

மூன்று கை முனிரத்தினம் மறுபடியும் பெரிய கும்பிடாகப் போட்டு, ''அட்வான்ஸ் எல்லாம் இந்த ஏழையாலே தர முடியுமுங்களா தாயி? ஐயாதான் சொன்னாரு இலவசமாகவே நீ தங்கிக்கலாம், சாப்பிட்டுக்கலாம்னு... நீங்க அட்வான்ஸ் கேட்கறீங்களே.''

அப்புசாமி, ''இல்லே சீதே, வந்து.. பத்து நாள்தான். வசூல் ஒண்ணும் ஆகாததாலே சாப்பாட்டுக்குக் கஷ்டம்... தங்கறதுக்கும் இடமில்லை... மூக்காலயும் காதாலயும் கண்ணாலயும் அழுதான். இவனுக்குத் தனி ரூம் ஒண்ணும் தர வேண்டாம். மாடியிலே என் ரூமிலேயே இருந்துப்பான்.''

நடு ராத்திரியில் வாசலில் வைத்துத் தவராறு வேண்டாம் என்று தீர்மானித்த சீதாப்பாட்டி, ''மாடியில்தான் இருப்பாரோ, உங்க மடியில்தான் இருப்பாரோ, லெட் மி டிஸைட் இட் இன் த மார்னிங், உள்ளே வந்து தொலையுங்கள் முதலில்'' என்றாள்.

அப்புசாமி முனிரத்தினத்தைப் பார்த்துக் கண்ணடித்து விட்டு, ''பார்த்தியா? நான் சொல்லலை? என் சம்சாரத்துக்கு வாய், தேள் கிண்ணம். மனசு தேன் கிண்ணம். கடுகு மாதிரி வெடிப்பாள். ஆனால் கல் மனசுக்காரி இல்லே.''

காலையில் சற்றுத் தாமதமாகத்தான் சீதாப்பாட்டியால் எழ முடிந்தது. வாஷ் பேஸினருகே பல் தேய்க்க வந்த போது அப்புசாமி பல் தேய்த்துக் கொண்டிருந்தார். சீதாப்பாட்டி கோபத்துடன் ''உங்களுக்கு டெண்ட்டல் பேஸ்ட்டை விட மெண்ட்டல் பேஸ்ட்தான் தேவை,'' என்று முணுமுணுத்து விட்டு நகர்ந்தாள்.

அப்புசாமி அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. தொண்டைக்குள் தண்ணீரை நிரப்பிக் கொண்டு, களகளகள என்று பெருஞ் சத்தமிட்டு உமிழ்ந்தார். பிறகு தன் சொந்த முயற்சியில் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளுவது போல 'க்கே க்கே க்கே' என்று மரணக் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்தார்.

பாட்டி அவர் தோளை லேசாக ஒரு தட்டுத் தட்டினாள். ''நாஸ்ட்டி! நாக்கு அதனுடைய இடத்திலிருந்துட்டுப் போகட்டும்'' என்றவள், ''உங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும். என் ரூமுக்கு வாங்க,'' என்றாள்.

அப்புசாமி திரும்பினார். பாட்டிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அது அப்புசாமி அல்ல. முனிரத்தினம். ''ஹி ஹி! என்னங்க பேசணும்.''

''மை காட்!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள். உடம்பெல்லாம் பூரான் ஊறுவது போல அருவருப்புப் பரவ, சீதாப்பாட்டி தன் அறைக்கு விரைந்து கதவைத் தாளிட்டவள் படுக்கையில் தொப்பென்று விழுந்தாள். ''சே! ஹௌ ஃபூலிஷ் ஐயம். என் கண்ணென்ன டோட்டல் ப்ளைண்ட்னஸ் ஆகி விட்டதா? அந்த ஆளைப் போய்த் தொட்டுத் தொலைத்தேனே... அத்தோடு, ஓ! எவ்வளவு பெரிய மிஸ்டேக் கமிட் பண்ணி விட்டேன். 'உங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும். என் ரூமுக்கு வாங்கன்னு வேறு கூப்பிட்டு விட்டேன்.

சீதாப்பாட்டி தன் விரல்களை மேஜை மீது குத்திக் கொண்டாள். கண்களில் நீர் கரகரத்தது. 'என் லைஃப்பில் இந்த மாதிரி மிஸ்டேக் நான் கமிட் பண்ணியதில்லை. விரல்களை ஜன்னல் கதவில் வைத்து நறுக்கென்று சாத்திக் கொள்ளலாமா என்று கூடத் தோன்றியது.

சீதாப்பாட்டிக்கு அன்று இரவு வந்த கனவில் அப்புசாமி ஒரு ரிஷி மாதிரி வந்தார். சீதாப்பாட்டி ஏதோ ஒரு நதி தீரத்திலே மணலைக் கொண்டு அவசரம் அவசரமாகப் பதற்றத்துடன்

குடம் செய்கிறாள். அமலா மாதிரியான பளிச் முகத்தில் ப்ளீர் பளீரெனக் கலவரமும், பயமும் கவலையும் மாறி மாறித் தோன்றப் பதறுகிறாள்.

அப்புசாமி தாடியை உருவிக் கொண்டு, "ஹ! ஹ! ஹ! குடம் பிடிக்க வரவில்லையோ! இந்தா பிடி சாபம்!" என்று கமண்டலத்திலிருந்து தண்ணீரை எடுத்துக் கோபத்துடன் தெளிக்கிறார்.

சீதாப்பாட்டி அடுத்த வினாடி ஒரு பாமரேனியன் நாய்க் குட்டியாகி, வாள் வாள் வாள்' என்று கத்திக் கொண்டு ஓடுவது போன்ற காட்சி அவள் கனவில் விரிந்து திடுக்கென்று விழித்துக் கொண்டாள்.

உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. முனிரத்தினத்திடமிருந்து ஐ ஷ"ட் ஸேவ் மை ஹஸ்ஃபெண்ட் ஃபர்ஸ்ட்... நிதானப்படுத்திக் கொண்டாள்.

பிறகு அமைதியாக ஒரு காகிதத்தை எடுத்தாள்.

அதில் பத்துத் தரம் 'முனிரத்தினத்திடமிருந்து ஐ ஷ"ட் ஸேவ் மை ஹஸ்பெண்ட் ஃபர்ஸ்ட்' என்று எழுதினாள்.

பத்துத் தடவை எழுதியதைப் பத்துத் தடவை மனசுக்குள் படித்தாள். பிறகு பத்துத் தடவை உரக்கப் படித்தாள்.

சற்று முன் வரை இருந்த அவளுடைய சோர்வு மெதுவே அகலத் தொடங்கியது. புதிய பலம் எங்கிருந்தோ வரத் துவங்கியது. 'புருஷனைக் காப்பாற்ற வேண்டும்' என்ற நினைவு கொடுத்த சக்தி அவளை எழுந்து உட்கார வைத்தது. ஜனாதிபதி புஷ்ஷின் உறுதி அவள் உடம்பில் பரவியது.

பா.மு.கழகத்திற்குப் பாட்டி சென்ற போது சில முதிய தையல்கள், சில புதிய தையல் யந்திரங்களை டெம்போவிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தன. கழகம் அடுத்த வாரத்தில் ஊனமுற்றோர் மேம்பாட்டுத் தினம் கொண்டாட ஏற்பாடு செய்து கொண்டிருந்தது.

மூன்று பெண்மணிகளுக்கு இலவசத் தையல் யந்திரமும் கண் பார்வை சரியில்லாத இருபத்தொரு மூதாட்டிகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்குவதாகத் திட்டமிட்டிருந்தனர்.

ஊனமுற்றவர்களுக்குச் சர்க்கார் என்னென்ன சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பாட்டி குறிப்பெடுத்துக் கொண்டாள், விழா தினத்தில் பேசுவதற்காக.

மத்தியான்னம் சீதாப்பாட்டி வீட்டுக்குத் திரும்பிய போது அப்புசாமி, முனிரத்தினத்துக்காக அண்ணாசாலை முனியாண்டி விலாசத்துக்கு ஸ்பெஷல் பிரியாணி வாங்கி வரச் சென்றிருந்தார்.

சீதாப்பாட்டி குளுமையாக எலுமிச்சம் பழ ஜூஸ் தயாரித்துக் கொண்டு மாடி ஏறிக் கதவை லேசாகத் தட்டினாள்.

"மே ஐ கமின் சார்!"

கதவு தட்டப்பட்டதும், ''இன்னய்யா சாவுகிராக்கி இம்மாந் நேரம்?'' என்றவாறு கதவைத் திறந்தவன் சீதாப்பாட்டி குளுமையான எலுமிச்சை ஜூஸுடனும் அதைவிடக் குளிர்ந்த முகத்துடனும் நிற்பதைப் பார்த்ததும் அசடு வழியக் கும்பிட்டு, ''நீங்களாம்மா.... உங்க வூட்டுக்காரரோன்னு நெனச்சிட்டேன். ஒரு இடத்துக்குப் போனால் அந்த ஆள், போனாமோ வந்தோமான்னு வர்றதில்லீங்க. நீங்க ரொம்பப் பொறுமைசாலிங்க.''

''விமன் ஃபோக்ஸ் ஆர் ஆல்வேஸ் ரீஸனபிள் அண்ட் அண்டர்ஸ்டாண்டிங். போன இடத்திலே பஸ் கிஸ் மிஸ் பண்ணியிருப்பார். நீங்க ஃப்ரஷ் லைம் சாப்பிடலாமில்லையா? ஷல் ஐ ப்ரிங் ஸம் ஸ்னேக்ஸ்? ஓமப்பொடி அண்ட் காராசேவ் ப்ரிபேர் பண்ணினேன்...''

''ஹி ஹி! வாணாமுங்க. பசி அடைச்சிடும். அப்புறம் பிரியாணி சாப்பிட முடியாது; அதுவும் அந்த ஆள்கிட்டே ஃபுல் பிளேட்டா வாங்கியாரச் சொல்லிட்டேன்.''

சீதாப்பாட்டிக்கு மனசில் நறுக்கென்று ஊசியால் குத்தியது போல் வலித்தது. அவளுடைய கணவரை, அவள் காதுபட, எங்கிருந்தோ வந்த ஒரு டிராம்ப், அந்த ஆள் இந்த ஆள் என்று குறிப்படுவதாவது...

மூன்று கை முனிரத்தினம் ஜூஸைப் புர்ரென்று உறிஞ்சிக் குடித்து முடித்தான்.

சீதாப்பாட்டி தயங்கியவாறு, ''கான் யூ ஸ்பேர் மி சம் ஃபைவ் மினிட்ஸ். உங்ககிட்டே ஐந்து நிமிஷம் பேசணும்...'' என்றவாறு கைப் பையைத் திறந்து ஒரு விண்ணப்ப பாரத்தை எடுத்தாள்.

''டோன்ட் மிஸ்டேக் மீ.. நீங்க படிச்சிருக்கீங்களில்லையா?'' என்றாள்.

தலையைச் சொறிந்து கொண்டான் முனிரத்தினம். ''படிச்சிருந்தா ஏங்க இப்படி லோல்படறேன். சுமாராக் கையெழுத்துப் போடுவேனுங்க.''

''அது போதும். யு கான் டு வொன்டர்ஸ்...'' என்ற சீதாப்பாட்டி, தான் கொண்டு வந்திருந்த விண்ணப்பத் தாளை அவன் முன் வைத்தாள். ''நீங்க ஜஸ்ட் ஒரு கையெழுத்து இதிலே போட்டால் போதும். மாசா மாசம் உங்களுக்கு ரூபாய் இருநூற்றைம்பது கவர்மெண்ட்டிலே தருவாங்க...''

பதினேழரை சென்ட்டி மீட்டருக்கு முனிரத்தினத்தின் வாய் விரிந்தது. ''அப்படீங்களா?''

''ஹாண்டிகேப்டுகளுக்கு அதாவது ஊனமுற்றவர்களுக்குச் சர்க்கார் உதவித் திட்டம் வைத்திருக்காங்க.''

முனிரத்தினத்தின் முகம் டீஸல் லாரி புகை கக்கிய மாதிரி மாறியது.

''ஊனம்தான் இல்லீங்களே நமக்கு. இரண்டு கைக்கு மூணு கையாகப் படைச்சுட்டானே..''

''மை டியர் முனிரத்தினம்...'' என்றாள் சீதாப்பாட்டி. ''வெதர் இட் இஸ் அன்வான்ட்டட் க்ரோத்.. ஆர் லாஸ் டியூ டு ஆக்ஸிடெண்ட். எதுவாக இருந்தாலும் யு ஆர் எலிஜிபிள்...''

டமால் என்ற சப்தம். முனிரத்தினம் சாஷ்டாங்கமாக விழுந்து சீதாப்பாட்டியை நன்றியுடன் கும்பிட்ட பேரொலிதான்!

தென் கிழக்கில் தொடங்கி வட மேற்காகத் தன் கையெழுத்தை ஒருவாறாக முனிரத்தினம் போட்டு முடிக்கப் பத்து நிமிஷமாயிற்று. ''வெரி கைண்ட் அஃப் யூ...'' என்ற சீதாப்பாட்டி, ''என் ஹஸ்பெண்ட் வர இன்னும் நேரமானாலும் ஆகும். யு கான் கம் டௌன்ஸ்டேர்ஸ் அண்ட் ஸீ எ நைஸ் வீடியோ ஃபிலிம்.''

சட்டையை மாட்டிக் கொண்டு முனிரத்தினம் உற்சாகமாகக் கீழே இறங்கினான்.

சீதாப்பாட்டி வீடியோவைப் போட்டாள். சோபாவில் முனிரத்தினம் தெளிந்தான்.

சீதாப்பாட்டி விளக்கினாள்: ''இது ஒரு ஒண்டர்ஃபுல் படம். ஹார்ட் சர்ஜரி பற்றியது. அதாவது இருதய ஆபரேஷன் படம். இன்ஸிஷன் போட்டதும் ரத்தம் எப்படி வர்றது பார்த்தீங்களா? செஸ்ட் போனை உடைக்காமல் விலாப்பக்கம் எலும்பை அறுக்கறாங்க பாருங்க... இன்ஸ்ட்ருமென்ட்ஸ் எல்லாம் எவ்வளவு ப்ரிஸைஸா இருக்கு பாருங்க...''


சீதாப்பாட்டி விளக்கிக் கொண்டிருந்தாளே தவிர, முனிரத்தினம் கண்ணை இறுக்கி மூடிக் கொண்டு, வீடியோவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''என்னங்க... இதெல்லாம் போய்ப் படம்னு காட்டறீங்க. நான் எதுனா பலான சினிமாவா இருக்கும்னு நினைச்சேனுங்க.''

உங்களுக்குத் தெரியுமா கோங்காணி ரெயின்கோட்!

மழைக்காலங்களில் நகரங்களில் உள்ளவர்கள் ரெயின்கோட் அணிந்து கொள்வார்கள். ஒரு ரெயின்கோட்டின் விலை, கிட்டத்தட்ட நூறு ரூபாய் வந்து விடும். கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் நூறு ரூபாய் கொடுத்து ரெயின்கோட் வாங்க இயலாது. காற்று மழைக்கு வெறும் குடைகள் போதாது. அப்படியானால் அவர்கள் நனைய வேண்டியது தானா? நிச்சயமாய் இல்லை.

திருநெல்வேலியிலிருந்து கடையம் போகிற பாதையில், 'துப்பாக்குடி' என்னும் கிராமம் இருக்கிறது. நான்காண்டுகளுக்கு முன்பு, ராஜீவ் காந்தி ஜீப்பிலேயே 'டூர்' வந்த சமயம், சில கிராமங்கள் உருவாக்கப்பட்டன. சின்னச் சின்னதாய் இருபது, இருபத்தைந்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அப்படி உருவானதொருக்கிராமம்



தான் துப்பாக்குடி. இங்கு தான் மழைக்குப் போர்த்திக் கொள்கிற கொங்காணியைப் பொழுது போக்காகச் செய்கிறார்கள்.

தூத்துக்குடியிலிருந்து 'சம்பு' என்னும் செடியை வாங்கி வந்து, அதைக் காய வைக்கிறார்கள். பிறகு வாழை நாரையும் காய வைக்கிறார்கள். சம்புவைக் குறுக்காக வைத்து வாழை நாரை நடுவில் பின்னி, நீளமாக ரெயின்கோட் தினுசில் கொங்காணி செய்யப்படுகிறது.

"கொங்காணி செய்றதுல லாபம்னு கிடையாதுங்க. ஒரு கொங்காணிக்கு ஏழெட்டு ரூபாதான் கிடைக்கும். அது சம்பு வாங்கவும் தூத்துக்குடி போயிட்டு வரவுமே சரியாயிடும்!" என்றார் வசந்தா.

கேரளாவில் இந்தக் கொங்காணிகளை உபயோகிப்பவர்கள் அதிகம் என்பதால் அங்கு இதற்கு நல்லகிராக்கி என்று சொல்லப் படுகிறது. குடிசைத் தொழிலாகச் செய்வதற்கு அரசு ஏதேனும் உதவி செய்தால், விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் தங்களுக்கு மிகுந்த உதவிகரமாய் இருக்குமென்று கருதுகிறார்கள். ஆனால், அரசாங்கம் என்ன நினைக்கிறதோ!

பேட்டி: **தமயந்தி**

படம்: **சுந்தர்**

வாசகர் யோசனை: நெல்லைக் குரலோன், பொட்டல்புதூர்.

'பலான' என்று அவன் சொன்ன வார்த்தை சிதாப்பாட்டியின் பல்லை நறநறக்க வைத்தது. ஆனாலும் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

"இந்தப் படம் உங்களுக்கு ரொம்பப் பிரயோசனப்படக் கூடியதுங்க," என்றாள். "உங்களுக்கு ஏதாவது பயம் இருந்தா இந்தப் படத்தைப் பார்த்ததும் போய் விடும். வாட் இஸ் வாட்னு பிராக்டிகலாகத் தெரிந்து கொள்வது பயத்தை நிச்சயம் போக்கும். நாளைக்குக் காலையிலே ஏழு மணிக்கு நீங்க பண்ணிக்கப் போகிற ஆபரேஷனும் ஏறக்குறைய இந்த மாதிரி தான் இருக்கும். எக்ஸாக்டாக ரிமூவல் அஃப் எக்ஸ்ட்ரா பார்ட்ஸ் இன் த ஹ்யூமன் பாடி காஸெட் கிடைக்குமான்னுதான் பார்த்தேன். அது கிடைக்கவில்லை."

"தாயி! தாயி! என்னென்னவோ சொல்றீங்களே... நான் ஆபரேசன் பண்ணிக்கறதாச் சொல்லிக்கலைங்களே?"

"சொல்லா விட்டால் என்ன? கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கீங்களே. நானும் அதை வாங்கிப் பத்திரமாகப் பீரோவில் வைத்திருக்கேன்."

கும்பிட்ட கையை அகற்றவில்லை முனிரத்தினம். "தாயி! என்னவோ கையெழுத்துப் போட்டா உதவித் தொகை வரப்போகுதுன்னு சொல்லிட்டு இப்ப இப்படிப் பேச்சு மாத்தறீங்களே. படிச்சவங்க இப்படித்தான் பித்தலாட்டம் பண்றதுங்களா? தருமமுங்களா?"

சிதாப்பாட்டி நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள். "ஐயம் டெரிப்ளி ஸாரி மிஸ்டர் முனிரத்தினம். நீங்க ஆபரேஷன் பண்ணிக்கச் சம்மதம் தெரிவிக்கிற ஒரு பாரமும், ஊனமுற்றோருக்கான உதவித் தொகை பெறுகிற பாரமும் ஒண்ணா நான் வாங்கிட்டு வந்தேன். பை மிஸ்டேக் நீங்க முதலில் ஆபரேஷனுக்கு சம்மதம் என்ற பாரத்தில் கையெழுத்தைப் போட்டுட்டீங்க. நாளை காலை வரை யு ஷுட் நாட் டேக் எனிதிங், எக்ஸெப்ட் வாட்டர். அந்தத் தண்ணியும் கூட அளவாகத்தான் சாப்பிடணும். நீங்க போகலாம். மார்னிங் ஸிக்ஸ் ஓ க்ளாக்கு ரெடியாயிருங்கள். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகிறோம்."

ஏதோ ஊர்வலம் காரணமாக டிராபிக் ஜாமில் சிக்கிக் கொண்டு அப்புசாமி படாதபாடு பட்டுக் கையில் பிரியாணிப் பொட்டலத்துடன் இரவு பத்துக்கு வந்து சேர்ந்தார். "முனிரத்தினம்! முனி! முனி!" என்று அன்புக் குரல் கொடுத்தார்.

மாடி அறையில், பாத்ரூமில், அழுக்குக் கூடைக்குள், கட்டிலடியில் எல்லா இடமும் தேடி விட்டு, கீழே வந்து, "சீதே சீதே! நம்ம கலியுக அதிசயம், என் சீட்டாட்ட குருநாதர், என் கை ரேகை கைடு... எங்கே... எங்கே? அவரோட பெட்டி, படுக்கை, படுதா என் ஜிப்பா, வேட்டி... எதையும் காணோமே..." என்று பதறினார்.

சிதாப்பாட்டி சிரித்தவாறு, "நீங்க கூட்டி வந்து வைத்துக் கொண்டீர்கள். பிரியாணி போட்டு வளர்த்தீர்கள். இப்ப திமீர்னு வந்து என்னைக் கேட்டால்? ஸாரி ஐ ஹாவ் அப்ஸல்யூட்லி நோ ஐடியா."

அப்புசாமி கையிலிருந்த பிரியாணி பொட்டலத்திலிருந்து எண்ணெய் கொட்டியது!

(அடுத்த இதழில்: சுத்தம் சுகம் அப்புசாமி!)

தண்டனையாகி விட்ட தாலி பாக்கியம்!







சுசீலா திரும்பவில்லை.... விவாகரத்து வேண்டி, Legal Aid Board ஐ அணுகினாள். எனக்குக் கணவனே தேவையில்லை; இல்வாழ்க்கையே வேண்டாம்; புதுமைப் பெண்ணாக வாழ்ந்து காட்டுவேன் என்று சூளுரைத்தாள்.

சமரசத்துக்கு முயன்று பார்ப்பதே Legal Aid Board இன் குறிக்கோள் என்பதால், அனந்தை அழைத்துப் பேசினார்கள். சுசீலா கோபித்துக் கொண்டு பிறந்தகம் சென்றிருக்கிறாள் என்று தெரிந்திருந்தும் அவள் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ''புருஷன்னா பெண்டாட்டியை ரெண்டு தட்டுத் தட்டத்தான் தட்டுவான்... இதைப் போயப் பெரிசு பண்ணி, கோர்ட் வரைக்கும் கொண்டு போய்ட்டாளே!'' என்று ஆச்சரியப்பட்டான்!

மனைவியை அடிப்பது கணவனின் உரிமையல்ல என்பதைப் பொறுமையுடன் அவனுக்கு விளக்கினார்கள் ஆலோசகர்கள். 'விலங்குகளுக்குக் கூட பாதுகாப்பு உரிமைகள் உண்டு —SPCA போன்ற அமைப்புக்கள் அவற்றைப் பாதுகாக்கின்றன. அப்படியிருக்கையில் ஒரு சக மனுஷியின் உரிமைகளை மதிக்க வேண்டாமா? பெண் பலகீனமானவள் என்பதால் அவளைத் துணிந்து அடிக்கிறாய். இதே ஓர் ஆணாக இருந்தால் அடிக்கத் துணிவாயா?' என்று பேசி, சிந்திக்க வைத்தனர்.

மூர்க்கத்தனமாக அடித்தவன்தான் என்றாலும் அனந்த் யோசித்தான். தான் செய்தது தவறு என்று உணர்ந்தான்; இப்போது ஒப்புக்கொண்டான். ஆனால், ''சுசீலா எனக்குப் பிடிக்காத சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் செய்து கொண்டேயிருப்பாள். எவ்வளவு சொல்லியும் கேட்காமல் செய்துவிட்டு, அதை மூடி மறைக்கப் பொய் சொல்வாள் — அது பிடிக்காமல்தான் நான் அடிப்பேன்'' என்று காரணம் சொன்னான்.

ஆலோசகர்கள் தனிமையில் மீண்டும் சுசீலாவிடம் பேசிய போது அனந்த் கூறியதை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். இருவரையும் சேர்த்து அழைத்து, மண வாழ்க்கையின் முதல் மூன்று மாதங்கள் எப்படி அவர்களால் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது என்று கேட்டார்கள். இருவருமே இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் யோசனையில் ஆழ்ந்தார்கள்.

புத்திசாலி தம்பதி என்பதால், மூன்று மாதங்கள் அன்பு செலுத்தி, அனுசரணையாக வாழ்ந்த நாம்தான் அந்த மகிழ்ச்சியை நீடிக்க விடாமல் குலைத்துக் கொண்டோம் என்று உணர்ந்தார்கள். அனந்த் அடிப்பதில்லை என்று வாக்குக் கொடுத்தான். சுசீலாவும் அவனுக்குப் பிடிக்காத காரியங்களைச் (பக்கத்து வீட்டுக்குப் போய் டி.வி. பார்ப்பது; மதில் சுவர் அருகே நின்று மணிக்கணக்கில் அரட்டை அடிப்பது) செய்யாமல், இருக்க உறுதி கொண்டாள்.

அடித்தவன் திருந்துவதும், அவன் மனைவி சமாதானமாகி அவனிடம் திரும்புவதும் — மண வாழ்க்கையில் தாற்காலிகமாகத்தான் நிலைக்கும். ஆனால் இந்தத் தம்பதி விஷயத்தில் அது நிரந்தரமான நிலையாகியிருக்கிறது. இதற்குக் காரணம், மண நல ஆலோசகர்களின் உதவி மட்டுமல்ல. இந்தத் திருமணத்தை நாம் முறித்துவிடக் கூடாது என்ற அக்கறையுடன் அடிமனத்தில் அனந்த் — சுசீலா இருவருக்கும் பரஸ்பர மெய்யன்பு இருந்தமைதான்.

பெரும்பாலான 'அடிக்கும் கணவர்கள்', அனந்த் ஆரம்பத்தில் சொன்னது போல் 'புருஷன்னா ரெண்டு தட்டுத் தட்டத்தான் செய்வான்' என்றே இந்த நூற்றாண்டிலும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கொடுமை!

தொகுப்பு: **எஸ். ஆர்.**

பெண் என்பதற்காக...

முதன் முதலாக அந்தக் கம்பெனியில் அடியெடுத்து வைத்த அனிதாவுக்கு மகிழ்ச்சியை விட உள்ளுக்குள் அச்சமே அதிகமாக இருந்தது.

அபாயின்ட்மெண்ட் ஆர்டரை மானேஜரிடம் காட்டியதும் அவர் சூபரின்டென்டை அழைத்து, அவள் உட்கார வேண்டிய இடத்தைக் காட்டச் சொன்னார்.

அவரும் அவளை இன்முகத்துடன் அழைத்துச் சென்றார். "வாங்கம்மா. இது தான் அட்மின் பிளாக். கம்பெனிக்கு வரக்கூடிய அத்தனை ஆர்டர்களும், டெண்டர்களும் இங்கேதான் முதல்ல வரும். உங்களுக்குத் தற்சமயம் வேலை சொல்லித் தர இவர் இருக்கார். இவர் கோகுல்ராம்... — ஜூனியர் அகௌண்டென்ட் கோகுல்ராம் மரியாதையுடன் சமிக்ஞை செய்ய —

"இவங்க மிஸ் அனிதா. மானேஜ்மெண்ட் ட்ரெய்னியா வந்திருக்காங்க."

"வெல்கம். உட்காருங்க மேடம். ஹோப் யு வில் பி ஹேப்பி ஹியர்."

நான்கு வருடம் சர்வீஸ் போட்டிருந்த கோகுல்ராமுக்கு அவளது யௌவனமும், வாளிப்பான தோற்றமும் உற்சாகத்தைத் தந்தது. அக்கறையுடன் அவளைப் பற்றி அத்தனையும் விசாரித்தான்.

அனிதா அன்று எந்த வேலையையும் தொடவில்லை. செக்ஷன் ஆபீஸர், பி. ஆர். ஓ., புரொடக்ஷன் எக்ஸிக்யூடிவ் என்று பலரை சந்தித்தாள். அவர்கள் கொடுத்த ஊக்கத்தையும், நம்பிக்கையையும் நன்றியுடன் ஏற்றுக் கொண்டாள்.

வேலையை ஆரம்பித்து ஒரு வாரம் இருக்கும்.

தான் தயாரித்த ஸ்டேட்மெண்டை கோகுல்ராமிடம் காண்பிக்க அவன் முகமலர்ச்சியுடன் ஒரு நோட்டமிட்டான்.

"நல்லா இருக்கு மேடம். இம்ப்ரூவ் ஆயிட்டீங்க. ஸ்டேட்மெண்டுல ஒரு க்ளாரிடி கொண்டு வந்துட்டீங்க. ஆமா.. இதென்ன கல்கத்தா டீலருக்கு இவ்வளவு அலாட்மெண்ட் பண்ணியிருக்கீங்க?"

அனிதா அவசரமாய்க் குறுக்கிட்டாள். "ஒரு நிமிஷம் சார்" என்று ஆர்டர் ஃபார்மை பார்த்து விட்டு வந்தாள்.

"ஸாரி சார். ஏதோ தவறுதலா மாத்தி எழுதிட்டேன்."

"இட்ஸ் ஆல்ரைட். இதுக்குப் போயி ஏன் இப்படிப் பதர்றீங்க? ஆரம்பத்துல இந்த மாதிரி தவறுகள் வர்றது சகஜம் தான்."

அவளுக்கு அதன் பிறகுதான் சற்று ஆறுதலாக இருந்தது.

அடுத்த வாரமும் இன்னொரு தவறு நேர்ந்தது. மானேஜர் அறைக்குள் நுழைந்து இன்வாய்ஸ் உள்பட பேலன்ஸ் ஷீட்டை நீட்ட அவரது புருவம் நெளிந்தது. எனினும் அப்போதே அவளது தவறை அவர் சுத்திக் காட்ட விரும்பவில்லை. முதலில் நிதானமாய் அவளை நலம் விசாரிக்கத் துவங்கினார்.

"என்னம்மா எப்படியிருக்கே?"

"நல்லா இருக்கேன் சார்."

"ஆபீஸ் வேலை எப்படி, பிடிச்சிருக்கா?"

"ம்."

"டைம் ரொம்ப ஜோராப் போயிடும். எந்தப் பிரச்னையும் இருக்காது. ஹேப்பியா பொழுதைத் தள்ளிடலாம்" என்று நிறுத்தியவர், பேலன்ஸ் ஷீட்டில் பார்வையை ஓட்டினார்.

"அடடே! என்னம்மா இது? கிட்டத்தட்ட ஒரு லட்சத்து ரூபாய் அடிபடுதே! தேவி அண்டு கோ கணக்கைச் சேர்க்கலையா?"

"ஐயய்யோ இல்லை சார்."

"ஏம்மா பயப்படறே? இப்ப என்ன ஆயிப் போச்சு? வெறும் பேப்பர் சமாச்சாரம்தானே? தலையா முழுகிடப் போவுது? நிதானமா க்ராஸ் செக் பண்ணிப்பாரு. காப்பி சாப்பிட்டியா?"

"இல்லே சார்."

"முதல்ல அதைச் சாப்பிட்டுட்டு வேலையைக் கவனி."

"தேங்க்யூ சார்."

ஆறு மாதங்கள் சென்றதும் கம்பெனியில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது. பழைய மானேஜர் வாசுதேவன், வெளியூருக்கு மாற்றலாகிச் செல்ல, புதிதாய் ராமலிங்கம் என்ற ஒருவர் மானேஜராய் வந்தார். அவர் வந்த கொஞ்ச நாட்களிலேயே அலுவலகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வேலையிலும் சில புதிய முறைகள் கொண்டு வரப்பட்டன. அடிக்கடி ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதும் மணிக்கு ஒருமுறை டீ, பீடா போன்றவை உள்ளே வருவதும் அத்தனையும் நின்று போயிற்று. ஜூனியர் அகௌண்டென்ட் கோகுல்ராமின் சீட்டும் மாற்றப்பட்டு விட்டது.

மதுமனோ

''ஆரம்பத்துல எல்லோரும் இப்படித் தான். அப்புறம் மாறிடுவாங்க. நான் சர்விஸ்ல பார்க்காததா?'' என்று இடை வேளையில் முணுமுணுத்தார் செக்ஷன் ஆபீஸர்.''

மற்ற ஊழியர்கள் கூட அப்படியே நினைத்தார்கள்.

ஆனால் நடந்தது வேறு.

புதிய மானேஜர் ராமலிங்கம் வந்த பிறகு அனிதா முதல் முறையாய் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

''குட்மார்னிங் சார்.''

மானேஜர் பதிலுக்குத் தலையசைத்து விட்டு, அவள் நீட்டிய ஃபைலை வாங்கிக் கொண்டார்.

ராமலிங்கத்தின் சுருட்டை முடியும், கட்டையான சரீரமும் இருதாவின் நரைத்த முடியையும் பார்த்தபோதே, அவளுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

அவர் கேட்ட முதல் கேள்வி. ''வேலை யில சேர்ந்து எவ்வளவு நாளாச்சு?''

''ஒரு வருஷம் ஆகப் போவுது சார்.''

''ஹௌ ஷேம்! இதென்ன ஸ்டேட் மெண்டா இல்ல உன் வீட்டுப் பால் கணக்கா? என்னம்மா நினைச்சே? திஸ் ஈஸ் கம்பெனி ஐ ஸே. லெட்டர்ஸ்ல யார் முன்னே கேட்டிருக் காங்க, யார் பின்னே கேட்டிருக்காங்கன்னு முக்கியமா கவனிக்கணும். ப்ரியாரிடி பேஸிஸ் கேள்விப்பட்டதில்லை? என்ன மானேஜ்மெண்ட் ட்ரெய்னி நீ? போ! சீக்கிரம் திருத்திக் கொண்டு வா!'' — வார்த் தைகளைக் குதறினார்.

அனிதா மருள மருளப் பார்த்தாள். இந்த மனிதனிடம் இனி எப்படிச் சமாளிக்கப் போகிறோமோ என்று கலவரமாக இருந் தது அவளுக்கு. ஃபைலை வாங்கிக் கொண்டு விருட்டென வெளியேறினாள்.

மற்றொரு சமயம் ஸ்டாக்லிஸ்ட் விவரங் களை டைப் செய்து கொண்டு போன போது —

''வாட் ஆர் யு திங்கிங்? வேலையில ஒரு ஒழுங்கு வேணாம்? உன் இஷ்டம் போல செய்யறதுக்கு இதென்ன மளிகைக் கடையா? யு மஸ்ட் ஹேவ் ரெஸ்பான்ஸி பிளிடி ஐ ஸே. டோண்ட் வேஸ்ட் டைம். மத்த லிஸ்டெல்லாம் எப்படித் தயார் பண்ணியிருக்காங்கன்னு போய்ப் பாரு.''

அனிதாவுக்கு முகம் சோம்பிப் போயிற்று. எதுவும் பேச இயலாத நிலை யில் விதியே என்று தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

இடைவேளை நேரத்தில் காண்டீனுக் குச் சென்று தன் இருக்கைக்குத் திரும்பிய போது திக்கென்றது. இருக்கையில் மானே ஜர் ராமலிங்கம் உட்கார்ந்து கொண்டு அவள் டைப் செய்து வைத்திருந்த கொடே ஷன் லிஸ்டுகளை சீரியஸாய் புரட்டிக் கொண்டிருந்தார்.

அனிதா உள்ளே பிரவேசித்ததும் கோபத்தில் பொரிந்து தள்ளினார்.



''எவ்வளவு அலட்சியம் இருந்திருந்தா இதை இப்படி டைப் பண்ணியிருந்திருப்பே? இதுல போட்டிருக்கிற அத்தனை விலையும் பழைய எஸ்டிமேஷன். ரிவைஸ்ட் எஸ்டிமேஷன் ஏதாச்சும் இருக்கான்னு பார்த்தியா? இல்லை யாரையாச்சும் கேட்டியா?''

''சார் அது வந்து....''

''நோ எக்ஸ்பிளனேஷன். யு ஆர் வெரி இர்ரெஸ்பான்ஸிபிள்! இதே எஸ்டிமேஷன்ல ஒருவேளை டெலிவரி ஆயிருந்துச்சுன்னா கம்பெனிக்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா? பதினெட்டு லட்சம்! யாருடைய சொத்து? உன் வீட்டுலேருந்து கொண்டு வருவியா? ஒழுங்கா அத்தனையையும் மாத்தி டைப் பண்ணிக் கொண்டு வா.''

''சார் இதெல்லாம் மறுபடி டைப் பண்ணணும்னா சாயங்காலம் ஏழு மணி ஆகும்.''

''பரவாயில்லை. நீ செஞ்ச தவறுக்காக இந்த வேலையை முடிச்சுத்தான் ஆகணும்.''

அனிதாவுக்கு அழாத குறை. மாலை ஐந்து மணிக்கு எல்லோரும் சென்ற பிறகும் தான் ஒருத்தி மட்டுமே தனியாக உட்கார்ந்து கொண்டு வேலை பார்த்தாள். உடலும் உள்ளமும் தளர்ந்து போயிற்று. அத்தனை வேலைகளையும் செய்து முடிக்க இரவு ஏழு மணிக்கு மேல் ஆயிற்று. முன்பிருந்த பழைய மானேஜரையும் தன்மையாய் நடந்து கொண்ட அத்தனை மேலதிகாரிகளையும் நினைத்துக் கொண்ட போது, மனசு மிகவும் சங்கடப்பட்டது.

வீட்டிற்கு தாமதமாகச் செல்ல நேர்ந்தது. அதற்கான காரணத்தைச் சொன்னதும் அப்பா மிகவும் விசனமானார்.

''வேலையை விடும்மா. எவனோ ஒரு பாவிகிட்டே நீ எதுக்கும்மா இப்படிப் படணும்? உனக்கென்ன தலையெழுத்து? இந்த வேலை இல்லேன்னா இன்னொரு வேலை.''

அனிதாவுக்கும் அதுதான் சரியென்று பட்டது. மானேஜரிடம் இனியும் தன்னால் பட முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்தாள். அப்போதே உட்கார்ந்து ராஜினாமா கடிதத்தை எழுதினாள்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. அவளுக்கு மனசுக்கு ஒன்றும் சரியாக இல்லை. ஒரு மாறுதலுக்காக மைலாப்பூரிலிருந்த தன் தோழியின் வீட்டுக்குச் சென்று திரும்பினாள். மணி அப்போது பிற்பகல் மூன்றிருக்கும். பஸ் ஸ்டாப்பில் நீண்ட நேரமாய் நின்றிருந்தும் ஒரு பஸ்ஸூம் வருவதாய் இல்லை. கால் வலியுடன் பஸ் வரும் திசையிலேயே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எதிர்பாராத ஒன்று கண்ணில் பட்டதும் திக்கென்றது.

மானேஜர் ராமலிங்கத்தின் கார் எதிரே வந்து கொண்டிருந்தது.

அனிதா சட்டெனப் பார்வையை வேறு பக்கமாய்த் திருப்பிக் கொண்டாள். அடுத்த

உ
ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ காயத்ரி டிரஸ்ட்

45, லெக்ஷ்மி நகர், குரோம்பேட்டை
சென்னை - 600 044.

சமர்ப்பணம்

★ பூத உடலை மயானத்துக்கு எடுத்துச் செல்லும் வண்டி ''பரமபத ரதம்'' பொது மக்களின் உபயோகத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

★ குரோம்பேட்டை லெக்ஷ்மிபுரம் மற்றும் அருகில் வசிக்கும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ரூ.30,000/- செலவில், நிரந்தர காங்கிரீட் கட்டிடமாக சுடுகாடு ஒன்று கட்டப்பட்டு பொதுமக்களின் உபயோகத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

★ குரோம்பேட்டை லெக்ஷ்மிபுரத்தில் இரண்டு கிரவுண்ட் நிலம் வாங்கப் பட்டு, முறைப்படி 12 நாட்கள் கர்மாக்கள் செய்யும் ''ஸ்ரீ காயத்ரி ஞான வாபி'' நவீன வசதிகளுடன் ரூ. 4 லட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டு பொது மக்களின் உபயோகத்துக்காக, கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. (ஸ்ரீ காயத்ரி ஞானவாபி தொலைபேசி எண்: 405884)


★ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி 16-வது நாள் கர்மா செய்யும் கட்டிடம் கட்டுவதற்காக, அருகில் ஒரு கிரவுண்ட் ரூ. 47,000/- செலவில் வாங்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சத்காரியங்கள்யாவும் ஆஸ்திகப் பெருமக்கள், தனவந்தர்கள் மனமுவந்து அளித்த நன்கொடையின் மூலம் செய்து முடிக்கப் பட்டது. இச்சந்தர்ப்பத்தில் எங்கள் மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகின்றோம்.

உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்

விபரம்	மதிப்பு
1. ஸ்ரீ காயத்ரி ஞானவாபியில் ஸ்ராத்த கட்டிடம்/ ப்ரவசன மண்டபம்	ரூ. 1.50 லட்சம்
2. 16-வது நாள் கர்மாக்கள் செய்வதற்கு சகலவசதி களுடன் கூடிய கட்டிடம்.	ரூ. 1.50 லட்சம்

மேற்படி சத்காரியங்கள் இனிதே முடிவுற, இயன்ற அளவு நன்கொடை அளிக்குமாறு யாவரையும் பணிவன்புடன் வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு, வருமான வரிப்பிரிவு 80-Gப்படி விலக்கு உண்டு என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



இப்படிக்கு,

G. இராகவன்,
MANAGING TRUSTEE

திமிடம் ஹாரன் சப்தம் தொடர்ச்சியாய் இரண்டு மூன்று முறை கேட்டது. என்ன செய்வதென்று புரியாமல் மெதுவாய்ப் பார்வையைத் திருப்பினாள்.

எதிரே கார் நின்றிருந்தது. காரை, தானே ஓட்டி வந்த மானேஜர் கண்ணாடியைக் கீழே இறக்கிச் சைகை காட்டினார்.

''கமான். இன்னைக்கெல்லாம் காத்துக்கிட்டிருந்தாலும் கூட உனக்கு பஸ் வராது. கடந்த ரெண்டு மணி நேரமா பஸ் ஸ்ட்ரைக். ம்! கெட் இன்.''

கதவைத் திறந்து விட்டார். அனிதாவுக்கு அவரது முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. எனினும் நேரிடையாக அவரை அலட்சியப்படுத்த விருப்பமின்றி முன் சீட்டில் ஏறி உட்கார்ந்தாள். காரை எடுத்ததும் அவர் சாலையைப் பார்த்துக் கொண்டே பேசினார்.

''நான் கம்பெனிலதாம்மா உனக்கு பாஸ். ரோட்ல சாதாரண மனுஷன்.''

அவள் எதையும் காதில் வாங்காதது போல சீரியஸாய்க் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். நாளை ராஜினாமா கடிதம் கொடுக்கப் போகிறோம்! இந்த மனிதனிடம் வேறென்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

ராமலிங்கமே மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.

''நீ என் மேல கோபமா இருக்கேன்னு நினைக்கிறேன். யு ஸீ... வாழ்க்கையில நாம சில விஷயங்களை அவசியம் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. நான் கம்பெனிக்கு முதல் முதலா வந்தப்போ வேலையில நீ பண்ணின தவறுகளைக் கண்டதும் எனக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு. ஒருத்தர் இந்த அளவுக்குக் கூடவா தவறுகள் செய்ய முடியும்னு ஆச்சரியமா இருந்துச்சு. இதுக்குக் காரணம் இல்லாம இல்லை... நான் என்ன சொல்ல வந்தேன்னா... பெண் என்றால் பேயும் இரங்கும்னு சொல்லுவாங்க. அப்படித்தான் இதுக்கு முன்னால இருந்தவங்கள்லாம் இரக்கத்தைக் காட்டியிருக்காங்க. நீ தவறுகள் செய்தப்பல்லாம் கண்டிச்சுக் கேட்காம உன் மனசு நோகக் கூடாதுங்கிறதுக்காகவே மயிலிறகுல வருடினா மாதிரி மெத்தனமாச் சொல்லியிருக்காங்க. அதனால நீயும் அதை சீரியஸா எடுத்துக்கலை. எப்பவும் போலவே தவறுகள் செஞ்சிக்கிட்டு வந்திருக்கே. ஒரு வகையில சொல்லப் போனா ஒரு பெண்ணோட முன்னேற்றத்துக்கு அவளுடைய செக்ஸே குறுக்கீடா வந்திடுது. ஆனா நான் இதை அனுமதிக்க மாட்டேன். ஆணோ, பெண்ணோ யாரா இருந்தாலும் உண்மையின் அடிப்படையிலதான் அவங்க செயல் படணும். அப்பத்தான் வேலையில ஒரு பர்பெக்ஷனை எதிர்பார்க்க முடியும். நான் கோபப்படறேன்னா அது இதுக்குத்தாம்மா. என் கோபத்துல ஒரு அர்த்தம் இருக்கு. ஒரு நோக்கம் இருக்கு. நாளைக்கே ஒருவேளை உனக்குப் பதவி உயர்வு கிடைச்சுப் படிப்படியா என்னுடைய பதவிக்கும் நீ வரலாம். அப்ப நீ ஒரு சிறந்த பாஸா இருக்கணும் இல்லையா? ஒருத்தருக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது பெரிசில்லம்மா. ஒவ்வொரு பதவியிலேயும் எத்தனை பேரைத் திருத்தினோம், எத்தனை பேரைத் திறமைசாலி ஆக்கினோம்ங்கிறதுதான் முக்கியம்!'' என்று நிறுத்தியவர் சடாரெனக் காரின் வேகத்தைக் குறைத்தார்.

''ஐ'ஆம் ஸாரி. ஏதோ பேச்சு வேகத்துல உன்னைக் கேட்க மறந்துட்டேன். நீ எந்த வழியிலேம்மா போகணும்?''

''நீங்க காட்ற வழியிலேயே போறேன் சார்.''

மானேஜர் நிமிர்ந்து பார்த்த போது அவள் முகத்தில் நம்பிக்கை பூத்திருந்தது!

படித்த புத்தகங்களுள் பாதித்த விஷயம் என்ன?

படிப்பு என்பது, வெறும் பாடப் புத்தகங்கள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. அதனால், பாடப் புத்தகங்களுக்கு அப்பாலும் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக ஏராளமான புத்தகங்களைப் படிக்கிறோம். அப்படிப் படித்தாலும், படிக்கிற எல்லாப் புத்தகங்களுமே நம் மனத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஒரு சில புத்தகங்களே நம்முள் பசுமரத்தாணியாகப் பதிகின்றன.

அப்படி உங்கள் மனத்தில் பதிந்த புத்தகங்களில், உங்களை மிகவும் பாதித்த விஷயங்கள் என்ன? ஒரு பக்கக் கட்டுரையாக எழுதியனுப்புங்கள். தலைசிறந்த கட்டுரைக்கு ரூ. 50 பரிசு!

பிரசுரமாகும் மற்றவற்றுக்கு ஆறுதல் பரிசு. இப்போட்டியில் மிக அதிகமான முதல்பரிசுபெறும்மாணவருக்குப்பொன் விழா மேடையில் ரூ. 2,500/- சிறப்புப் பரிசு!

முடிவு தேதி: 30.3.91.

'படித்ததில் பாதித்தது' என்று உறையின் மீது குறிப்பிட்டுக் கல்லூரி முகவரியோடு எழுதியனுப்புங்கள் (இப்போட்டிக்கான கருத்து யோசனை: பி. இராஜகோபாலன், மன்னார்குடி)

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

50

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

டாக்டர் பதில்கள்:

O கே. ராமசுப்பிரமணியன், கோவா:

o ஸ்பாண்டிலோசிஸ் என்றால் என்ன? இது எலும்பு சம்பந்தப்பட்ட நோயா? அதிக நேரம் நின்று வேலை பார்ப்பதால் இது அதிகரிக்குமா?

OO டாக்டர் சிதெ. அழகப்பன், சென்னை — 18:

மூட்டு (ஜாயின்ட்)க்கு மேல் உள்ள முறுக்கு எலும்பு தேய்ந்து போய், முதுகு எலும்பிலோ, கழுத்து எலும்பிலோ வலி ஏற்படும் போது ஸ்பான்டிலோசிஸ் என்கிறார்கள். இது எலும்பும் அதோடு சேர்ந்திருக்கும் மூட்டையும் சார்ந்த நோய். பெரும்பாலும், வயதாவதால் ஏற்படக் கூடிய நோய் இது. சில சமயம், மேற்படி எலும்பு ஏற்கெனவே அடிபட்டு இருந்தாலோ, அல்லது நோய் ஏதேனும் ஏற்பட்டு, குணமான பிறகு, அத்தகைய முறுக்கு எலும்பு பாதிக்கப்பட்டிருந்தாலோ இது போன்ற தேய்மானம் சிறிய வயதிலும் ஏற்பட வாய்ப்பு உண்டு. இடுப்பு எலும்பிலிருக்கும் தேய்மானத்தால், அதிக நேரம் நின்று வேலை பார்க்கும் போது, இது அதிகரிக்க வாய்ப்பு உண்டு.



அருள் வந்து ஆடுவது ஏன்?

● சுப்புலட்சுமி சம்பத்குமார், இராசிபுரம்:

● குழந்தைக்குத் தடுப்பூசி போட்டால் காய்ச்சல் வருவது ஏன்? அவ்வாறு காய்ச்சல் வருவது நல்லதா?

●● டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா, சென்னை — 28:

● தடுப்பு ஊசி என்று நாம் கூறுவது, பாக்டீரியா கிருமிகளைக் கொன்று, அவற்றிலுள்ள 'டாக்ஸாய்டு' எனப்படும் விஷத்தைப் பிரித்து எடுத்த பிறகு, அதையே குழந்தைகளுக்கு உகந்த, ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் செலுத்துவதுதான். இதனால், நுண்கிருமிகள் தாக்கும் போது, அதை எதிர்க்கும் சக்தி (ஆன்ட்டிபாடீஸ்) ஏற்கெனவே குழந்தைகளின் உடலில் தோன்றி விடுகிறது. இந்த எதிர்ப்புச் சக்தி உடலில் உள்ளதால், போலியோ, டிடானஸ், கக்குவான், தொண்டை அடைப்பான், காசநோய், டைபாய்டு போன்ற நோய்கள் குழந்தையின் உடலைத் தாக்காமல் பாதுகாக்கிறது. டாக்ஸாய்டு உடலில் செலுத்தப்படும் போது, அது உடலில் ஏற்கெனவே இல்லாத புரதச் சத்து ஆனதால், லேசான காய்ச்சல் வருகிறது. இப்படிக் காய்ச்சல் வருவது, தடுப்புச் சக்தி உண்டாகி விட்டது என்பதன் அறிகுறியே என்பதால் பயப்படத் தேவையில்லை.

● எஸ். தியாகு, கோடிக்கரை:

● சிலருக்குச் 'சாமி ஆடுது' (அருள் வந்து ஆடுவது) என்கிறார்களே? மருத்துவத்தில் அதற்குக் காரணம் ஏதாவது உண்டா?

● 'ஆட்டோ ஹிப்னாசிஸ்' அல்லது 'ட்ரான்ஸ்' எனப்படும் ஒருவித மனநிலை உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த 'சாமி ஆடல்' உண்டாகும். மிகுந்த ஈடுபாட்டுடன், ஒரு குறிப்பிட்ட பொருள் மீது கவனத்தை ஒருமுகப்படுத்திச் செலுத்துவதால் (கான்சன்ட்ரேஷன்) ஏற்படும் நிலையைத்தான் ட்ரான்ஸ் என்கிறோம். தனக்கே அதிகம் பக்தி, தன்னுடன் கடவுள் பேசுகிறார் என்று தன்னைத்தானே நம்ப வைத்துக் கொள்ளும் நிலையைத்தான் ஆட்டோ ஹிப்னாசிஸ் என்று சொல்லுகிறோம். பரீட்சை நன்றாக எழுதா விட்டாலும், 'நான் பிரமாதமாக எழுதியும் என்னை ஃபெயிலாக்கி விட்டார்கள்' என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்வதும் கூட இம்மாதிரியான மனநிலையை அடிப்படையாகக் கொண்டதுதான்!

தொகுப்பு: **எஸ். வி. என்.**



உருவம்

பெரியவர்கள் இல்லாத இளசுகள் மட்டுமே நிறைந்த கார் சகிதக் குடும்பம். வழக்கில் அந்தப் படா பங்களாவை ஜெயிக்கிறது. தோற்ற எதிரி, பெரிதாய்ச் சூனியம் வைத்து விடுகிறான். அது மோகனைப் பிடித்துக் கொண்டு, பல்லவியைத் தவிர, சொந்தக் குடும்பம் மொத்தத்தையும் இரண்டு மணி நேரத்தில் தீர்த்துக் கட்டுகிறது.

அருவம் தேர்ந்தெடுக்கிற உருவமான மோகனைப் பார்த்து, அனுதாபம்தான் பட வேண்டியிருக்கிறது. எத்தனை வெள்ளி விழாப் படங்கள்? ரசிக ரசிகைகள்? மனசில் வைத்துக் கொள்ளாமல் இத்தனை அருவருப்பாய்த் தன்னைச் சிதைத்துக் கொண்டு, நடிக்க எப்படி முடிந்தது? பாராட்டுவதா? வருத்தப்படுவதா?

பில்லி சூனியச் சக்கரவர்த்தி பங்காருமுனி கையசைத்தால் காற்று வீசுகிறது. சகலமும் நடுங்குகிறது. அப்படிப் பட்டவரை, நாளைக்கு அந்த விட்டுல ஒரு சாவு விழலைன்னா.... என அந்த வேஷ்டிக்காரப் பங்காளி மிரட்டுவது போன்ற அபத்தங்களுக்குப் பட்டியலே போடலாம்: அத்தனை ஆபத்தான சந்தர்ப்பங்களிலும் குடும்ப உறுப்பினர்கள் நிம்மதியாகத் தூங்குவது; சாவகாசமாக நாவல்கள் படித்துக் கொண்டிருப்பது; சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு யோசிக்கக் கூட முயலாத இன்ஸ்பெக்டர்; சூனிய பொம்மையை அப்படிக் கையாளும் மலையாள மாந்திரீகர், அத்தனை பெரிய விட்டில் லாந்தர் விளக்கு... என இன்னும் பட்டியல் நீளும்.

காப்பாற்ற வரும் ஜோல்னா சாமி (பெயரைக் கேட்டால்,பக்தி வருவதற்குப் பதில் சிரிப்புத்தான் வருகிறது.) யானைக் கால் உதை போல பொசுக்! இவர் பூஜை நடத்தி முடிவதற்குள் அநியாயமாய் அத்தனை அழிவுகளும் நடந்து முடிந்து... இவரால் கிடைக்கும் ஒரே பலன்: நமக்குக் கந்தசஷ்டிக் கவசம் மனப்பாடம் ஆகிவிடுவதுதான்.


இசை, நம்பவே முடியவில்லை — இளையராஜா. இவர் இசையென்றால் திகிலிலும் ஒரு நளினம் இருக்குமே. எங்கே? ஏன்?

சென்ஸாருக்குத் தப்பித்த ஒரு மகா ஆபாசக் காட்சியும் உண்டு.

வெகுசில ஆறுதல்களில் ஒருவர் பல்லவி. படத்தில் பார்த்து ரசிக்கும் படியான தோற்றம், சுமாரான நடிப்பு என்றால் இவரிடம்தான். அந்தத் துள்ளல், ரோட்டில் உடலைப் பார்த்து விட்டுத் திரும்பினால் காணாமல் போயிருக்கும் கார் அதிர்ச்சி, ஒட்டுமொத்தக் குடும்பமே ஆம்புலன்ஸில் ஏற்றப்படும் போது வெடிக்கும் அழுகையும் மகா இயற்கை. மற்றவர் காமிராக்கார வேலு பிரபாகரன். ஒரே நடையில் வீடு மொத்தமும் சுற்றிவரும் இவரின் படப் பிடிப்பு படத்தின் அம்சம்.

எக்ஸார்ஸிஸ்ட் போன்ற பல்வேறு ஆங்கிலப் படங்களைத் தொகுத்து இப்படத்தை எடுத்திருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பயம் ஏற்றாமல், கதவுக்குப் பின்னால் நின்று திடீரென்று தென்பட்டு மிரட்டும் 'பே!' ரகத் திகில் தான், இதில். எனவே, துவக்கத்தில் இருக்கும் பயம், போகப் போகச் சாதாரணமாகி, இவ்வளவுதானா என்றாகி விடுகிறது.

— சுந்தர்ஜி



நீங்கள் இறந்தபிறகும் உங்கள் சிலை
அதிகநாட்கள் அப்படியே இருக்கும்.
சிலை செய்வதற்கு நாகார்ஜுனா
சிமிண்டையே உபயோகித்தோம்.
சார்.

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

"போலீஸ் ஸ்டேஷன் போறேன்; கம்பெனி கொடுங்களேன்!"



○○ எங்கள் கடையில் சற்றுக் கடினமாக (மாத முதல் வாரத்தில்) உழைத்த ஒரு சேல்ஸ் கேர்ள், என்னிடம், "அண்ணா! ரொம்பவும் மூச்சு வாங்குது" என்று கூறினாள்.

உடனே நான், "நம்ம கடையில் காசு கொடுக்காமல் வாங்குவது அது ஒன்றுதான். அதனால் நிறைய வாங்கு" என்று கூறியதும் தன்னுடைய சிரம நிலையிலும் சிரித்து விட்டாள்.

— வி. ராமச்சந்திரன், கோவை.

○ ○ ○

○○ வங்கிக் கிளைக்கு ஐந்து பெட்ரோமாக்ஸ் லைட் சகிதமாய் ஐந்து பேர் வந்தனர். திகைத்த வங்கி அதி



காரி, "இதை யார் அனுப்பியது?" என வினவ, ஒருவர் பெயர் சொல்லப்பட்டது.

அதிகாரி அவருடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு விவரம் கேட்க, அவர் கூறினார்: "என்னுடைய முடிந்து போன கடன் பத்திரத்தை ஐந்து நாட்களாய்க் கேட்டும் 'கரண்ட் இல்லை' என்ற பதிலே வருகிறது. பெட்ரோமாக்ஸ் போதுமா, இன்னும் அனுப்பவா?" என்று கேட்டார்.

கரண்ட் கட் மற்றும் ஜெனரேட்டர் வசதி இன்மையால் அவதியிலிருந்த வங்கி அதிகாரி மேலும் அவஸ்தையில் நெளிந்தார்!

— எஸ். கணேசன், திருவாரூர்.

○ ○ ○



○○ வளைகுடாப் போர் முடிந்து, சதாம் உசேன் தன் சகாக்களுடன் பேச்சு நடத்தியது டி. வி. யில் கறுப்பு — வெள்ளைப் படமாகக் காட்டப்பட்டது. முந்தைய படங்கள் யாவும் கலரில் இருந்தன. என் கணவர் அடித்த கமெண்ட்:

"சதாமின் சாயம் வெளுத்து விட்டதல்லவா? அதைத்தான் சிம்பாலிக்காகக் காட்டுகிறார்கள்!"

— என். குணவதி, ஈரோடு.

○ ○ ○

○○ நகர்ப் பேருந்து ஒரு நிறுத்தத்தில் புறப்படத் தயார் நிலையில் இருக்கையில், புதிதாகச் சைக்கிள் பழகி வரும் ஒரு சிறுவன் 'பாலன்ஸ்' தவறிப் பேருந்தின் முன் விழுந்து விட்டான்.

ஓட்டுனர் கோபமாக, "சைக்கிள் உயரம் கூட



இல்லை; சைக்கிள் ஓட்ட வந்துட்டான்'' என்றார்.

கீழே விழுந்த சிறுவனோ நிதானமாக எழுந்து தூசி தட்டிவிட்டு, ''நீங்கள் மட்டும் என்ன, பஸ் உயரமா இருக்கீங்க?'' என்றானே பார்க்கலாம்!

— ஜி. ஞானசேகரன், மதுரை — 18.

○ ○ ○

○○ என்னுடன் பணிபுரியும் லலிதா என்ற பெண்மணி ஒருநாள் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் தனியாகச் செல்வதைக் கண்ட மாலை நேரக் கல்லூரி மாணவர்கள் சிலர் அவரிடம் ''எங்கே தனியாப் போறீங்க? துணைக்கு



வரலாமா?'' என்றதும் அவர் உடனே, ''போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போறேன். கம்பெனி கொடுங்களேன்'' என்று சொல்ல, மாணவர்கள் அவரை மஃப்டியிலுள்ள 'உமன் போலீஸ்' என நினைத்து மாயமாய் மறைந்து விட்டனர்!

— தக்கோலம் புகாரி, சென்னை — 13.

○ ○ ○

○○ நண்பர்களுடன் தோல் கண்காட்சிக்குப் போயிருந்தேன். ஒரு 'ஸ்டாலில் ஒரு காலணியின் விலை எழுநூறு ரூபாய் என்று போட்டிருந்தது. அந்தக் காலணியை ஒரு கும்பல் ரசித்துக் கொண்டிருந்தது. விலையைப் பார்த்த என் நண்பன், ''எழுநூறு ரூபாய் கொடுத்து யாராவது அதைக் காலில மாட்டுவாங்களா?'' என்று கூறினான்.

கும்பலில் இருந்த ஒருவர், ஜோக் அடிப்பதாக நினைத்து, ''ஏம்பா, காலில போடாம கையிலயா போட்டுக்குவாங்க?'' என்று கூறிச் சிரித்தார்.



அதைக் கேட்ட என் நண்பன், ''நீங்க காசு போட்டு வாங்கிக் கொடுங்க; நான் தலையிலேயே மாட்டிக்கிறேன்!'' என்று கூற, ஸ்டாலே சிரிப்பில் அதிர்ந்தது!

— வி. ஆர். சம்பத்குமார், சென்னை — 30.

○ ○ ○

○○ நானும் என் நண்பனும் ஹோட்டலுக்குச் சென்றிருந்தோம். சர்வர் உர்ரென்றிருந்தார். நண்பன், ''சூடாக என்ன இருக்கு?'' என்று கேட்க, சர்வர் பட்டென்று ''நெருப்பு இருக்கு'' என்று சொன்னார். நண்பன், ''உடனே ஒரு பிளேட் எடுத்து வாங்க'' என்றான்.

பக்கத்து டேபிளில் இருந்தவர்களெல்லாம் கவனிக்க ஆரம்பித்து விட்டனர். சர்வர் பிளேட்டில் நெருப்புத் துண்டை எடுத்து



வந்து வைத்தார். நண்பன் படு ஸ்டைலாகப் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தவுடன், சர்வரின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

— டி. அன்புராஜ், டால்மியாபுரம்.

நூற்றுக்கு நூறு வருமான வரி விலக்கு - தேசிய சேமிப்பு தரும் தனிச்சலுகை

வருமான வரியில் ஆண்டொன்றுக்கு ரூ.40,000/- வரை வரிவிலக்கு பெறும் வாய்ப்பினை அளிப்பது தேசிய சேமிப்புத் திட்டம் 1987.

1991 மார்ச் 31க்குள் தேசிய சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்து உரிய வருமான வரி விலக்கினைப் பெறத் தவறாதீர்கள்.

உங்கள் முதலீட்டுக்கு 11 சதம் வட்டி கிடைப்பதுடன் உங்கள் முதலீடு கணக்கில் உள்ளவரை நீங்கள் பெறும் வட்டிக்கும் முழு வருமான வரிவிலக்கு உண்டு.

குறைந்தபட்சத் தொகையாக ரூ.100ம் அதற்குமேல் ரூ.100/-ன் பெருக்குத் தொகையும் முதலீடாக ஏற்றுக் கொள்ளப்படும். அதிகபட்சத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.40,000/- ஒரே சமயத்திலும் இதனை முதலீடு செய்யலாம்.

முதலீடு செய்யும் தொகைக்கு சொத்து வரியிலிருந்தும் முழு வரிவிலக்கு கிடைக்கும்.

வருமான வரிவிலக்கு விவரம்


	தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு	பொது சேமநல நிதித் திட்டம்	தேசிய சேமிப்பு திட்டம் 1987
வருமான வரி விலக்குப் பெற முதலீடு செய்ய வேண்டிய தொகை	ரூ.50,000/- (80-வது பிரிவின்படி)	ரூ.50,000/- (80-வது பிரிவின்படி)	ரூ.40,000/- (80-வது பிரிவின்படி)
வட்டிக்குத் தரப் படும் வரிவிலக்கு	80-வது பிரிவின்படி	முழு வரி விலக்கு	கணக்கு நடப்பில் உள்ளவரை முழுவரி விலக்கு
சொத்து வரியில் சலுகை	ரூ.5 லட்சம் வரை வரி இல்லை	முழு வரி விலக்கு	முழு வரி விலக்கு

முதலீட்டின் அதிகபட்ச பயன்

திட்டம்	ஆண்டுகள்	வட்டிவிகிதம்
தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு	6	16.91%
கிஸான் விகாஸ் பத்திரம்	5½	18.18%
இந்திரா விகாஸ் பத்திரம்	5	20%

அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதிகப்பயன் பெறுவீர்!

சேமிப்புக்கு சிறப்புப் பரிசு சென்னையில் HIG மற்றும் MIG அடுக்கு மாடி வீடுகள் (FLATS)



சிறப்பு பரிசு: உயர்வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடிவீடு (HIG)
இரண்டு முதல் பரிசுகள்: நடுத்தர வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடு (MIG)

சிறப்பு பரிசுக் கூப்பன் திட்டம் - I

தேசிய சேமிப்புத் திட்டத்தில் ரூ.5000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கென ஒரு சிறப்புப் பரிசுத்திட்டம் 11.3.91 முதல் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் பரிசுக் கூப்பன்களுக்கான ஒரு வரிசை மட்டுமே இதில் இடம்பெறும்.

ஒவ்வொரு ரூ.5000/- முதலீட்டுக்கும் ஒரு பரிசுக் கூப்பன் பெறலாம்.

329 அரிய பரிசுகள்

ஒரு சிறப்பு பரிசு	:	சென்னை மாநகரில் உயர் வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடு (HIG)
இரண்டு முதல் பரிசுகள்	:	சென்னை மாநகரில் நடுத்தர வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடு (MIG)
ஒரு இரண்டாவது பரிசு	:	மாருதி கார்
ஐந்து 3-வது பரிசுகள்	:	சில்வர் பிளவ்
பத்து 4வது பரிசுகள்	:	வண்ணத் தொலை காட்சிப் பெட்டி
பத்து 5-வது பரிசுகள்	:	165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 6-வது பரிசுகள்	:	7½ லிட்டர் பிரஷர் குக்கர்
200 ஆறுதல் பரிசுகள்	:	குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

பரிசுக் கூப்பன் திட்டம் - II

தேசிய சேமிப்புத் திட்டத்தில் ரூ.500/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கான பரிசுத் திட்டமும் 31.3.91 வரை தொடர்ந்து செயல்படும். மாருதி கார் முதல் 261 கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் சிறப்புச் சலுகைகள்:

தேசிய சேமிப்பில் ரூ.500/- முதலீடு செய்வோருக்கு ரூ.50,000/- வரையிலான விபத்துக் காப்புறுதியினை தமிழக அரசு வழங்குகிறது.

- குறிப்பிட்ட சில திட்டங்களில் ரூ.1000ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு ஒரு சதவீத ஊக்கத் தொகையும் தமிழக அரசு காசோலை மூலம் வழங்கும்.

தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை வழங்கும் இரு பரிசுத் திட்டங்களும் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளும் தமிழ்நாட்டில் தேசிய சேமிப்புத்திட்டத்தில் முதலீடு செய்வோருக்கு மட்டுமே பொருந்தும்.

எல்லா அஞ்சலகங்கள் மூலமாகவும் தேசிய சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

தேசிய சேமிப்புத் திட்டப் பரிசுக் கூப்பன்களையும் விபத்து காப்புறுதி பாலிசியையும் பெறுவதற்கு அணுக வேண்டிய இடம்:

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை,
சென்னை 600 002
தொலைபேசி: 840223/846209

இப்புதுமைத் திட்டம் 31.3.91 வரை மட்டுமே!

DIPR: 653/MS/91: EFFICIENT

தாக்கம்



"டைரக்டர் தங்கரத்னம் தன்னோட அடுத்த படத்தைப் பத்தி நம்ம பத்திரிகைக்குப் பேட்டி தர்றதாச் சொல்லியிருக்காரு. நீங்க போய்ப் பேட்டி எடுத்துட்டு வாங்க."

எடிட்டர் சொன்ன போது டேவிட் தன் காதுகளையே நம்ப முடியாது தவித்தான். ஏனெனில் அவர்கள் பத்திரிகை பெரும்பாலும் அரசியல் மற்றும் சர்வதேசச் செய்திகளைத் தாங்கி வரும் தரமான ஒன்று. காரசாரமான சினிமா விமர்சனமும் வரும். எப்போதாவது ஒரு பக்கச் செய்தியாகத்தான் சினிமாச் செய்தி வெளியிடுவார்கள். அதற்கு யாராவது ஜூனியர் ரிப்போர்ட்டரையே அனுப்புவார்கள்.

டேவிட் சென்ற மாதம்தான் மிக அற்புதமான ஒரு ரிப்போர்ட் மூலம் ஒரு பெரிய ஊழலை வெளிப்படுத்தியிருந்தான். தனது அடுத்த அஸைன்மெண்ட் மேலும் பரபரப்பானதாக இருக்கும் என்று எதிர்பார்த்தவனுக்கு இது பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

சற்றுத் தயங்கியவாறு, "வேற ஏதாவது பொலிடிகல் கவரேஜ்னா இன்ட்ரஸ்டிங்கா இருக்கும் சார்..." என்றான்.

"மிஸ்டர் டேவிட், ஒரு ரிப்போர்ட்டர்னா மொதல்ல எல்லாத்தையும் துருவிப் பாக்குற மைண்ட் இருக்கணும். ஒரு குறிப்பிட்ட மாதிரி விஷயங்களைத்தான் கவர் பண்றதுன்னு ஒங்கள நீங்களே ரெஸ்ட்டிரக்ட் பண்ணிக்கிட்டீங்கன்னா நிச்சயமா வளர மாட்டீங்க. நாம சீப்பான சினிமா கிசுகிசு வெல்லாம்போடமாட்டோம்னு ஒங்களுக்கே தெரியும். ஆனா டைரக்டர் தங்கரத்னம் ஓர் அபூர்வமான கலைஞர்; தமிழ் சினிமால மறுமலர்ச்சி ஏற்படுத்தினவர்னு எல்லாரும் ஒகோன்னு புகழ்றாங்க. அவரப்பத்தி மத்த பத்திரிகைகளெல்லாம் எவ்வளவோ எழுதிட்டாங்க. ஆனா நம்ம பத்திரிகை அவங்க யாரும் சொல்லாத விஷயங்களைத் தரணும். இந்த சேலஞ்சை நீங்க ஏத்துக்கங்க."

அரை மனதாகத் தலையாட்டி விட்டு வெளியே வந்தான்.

தங்கரத்னம் அவன் நினைத்ததை விட இளமையாக இருந்தார். சற்றும் பதற்றமின்றி நிதானமாக இயங்கினார். கேமராமேன் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் ஏதோ மந்திரத்தால் வசியப்பட்டவர்கள் போல அவர் விருப்பப்படி வளைந்தனர். அவர் சற்று ஓய்வாகத் தன் இருக்கையில் அமர்ந்தவுடன் டேவிட் சென்று தன்னை அறிமுகப்படுத்திக்

அருள்

கொண்டான்.

''ஒங்களத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். ஒங்க எடிட்டர் நீங்க வருவீங்கன்னு சொன்னார். ஆனா ஒரு சின்ன ரிக்வஸ்ட்... இன்னைக்கு ஷெட்யூல் கொஞ்சம் பிஸி. தொடர்ச்சியா ஒங்களோட பேச முடியாது. அப்பப்ப கெடக்கிற பிரேக்ல ஒங்க இண்டர்வியூவை முடிச்சுக்கிடணும்.''

''பரவாயில்ல... மொதல் கேள்வி... ஒங்க தொடர்ச்சியான வெற்றிக்கு என்ன காரணம்னு நெனக்கிறீங்க?''

''சினிமாங்கிறது ஒரு முழுமையான பொழுதுபோக்குச் சாதனம். ஆனா அது கொஞ்சம் அறிவுபூர்வமாக இருக்கணும். ரசிகனை மடையனா நெனச்சு; சீப்பான விதத்துல படம் எடுத்தா, ரொம்ப நாளைக்கு பீல்டுல நிக்க முடியாது. அதனாலேதான் ஷூட்டிங் தொடங்கறதுக்கு முன்னால கொறஞ்சது ஆறு மாசத்துக்காவது திரைக்கதையைப் பல்வேறு கோணங்கள்ல யோசிச்சுப் பாத்து, முழு திருப்தி வந்த பிறகுதான் தகுந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஷூட்டிங் தொடங்குவேன். முன்னாலேயே முழுசா பிளான் பண்ணிடறதால ஷூட்டிங் தொடங்கின பிறகு எந்தத் தடங்கலுமில்லாம நடக்கும்.''

''சினிமா முழுமையான பொழுதுபோக்குச் சாதனம்னு சொன்னீங்க. அது பயனுள்ளதா அமைய முடியாதா?''

''பயனுள்ளதாகவும் அமையலாம். ஆனா மொதல் கண்டிஷன். அது டோட்டல் என்டர்டெயின்மெண்ட்டா அமையணும். ஒரு நல்ல மெஸேஜ் இருந்தா அது ஒரு அடிஷனல் அட்ராக்ஷன்... அவ்வளவுதான்.''

கேமராமேன் வந்து அழைக்க தங்கரத்னம் எழுந்தார்.

''வாங்க... இந்த ஷாட்டை முடிச்சுட்டுத் தொடர்ந்து பேசலாம்.''

அவருடன் சென்றான்.

சற்று மங்கலான வெளிச்சத்தில் படுக்கையறைக் காட்சி எடுக்கப்படவிருந்தது. கதாநாயகன் கதாநாயகியைத் தூக்கிச் சுற்றிப் படுக்கையில் போட்டு விட்டு அவளருகில் உட்கார வேண்டும்.

முதல் டேக்கில் அவன் நான்கு முறை சுற்றிவிட, டைரக்டர் அதிருப்தியுற்று, 'மூன்று முறை சுற்றினால் போதும்' என்றார். அவன் மீண்டும் சுற்ற இம்முறையும் திருப்தியடையாத அவர் சற்று நளினத்துடன் சுற்றச் சொன்னார். சுற்றல் மீண்டும் மீண்டும் தொடர, டேவிட்டுக்குத் தலை சுற்றியது! வெறுத்துப் போய் வெளியே வந்து அமர்ந்தான்.

ஒரு மணி நேரத்திற்குப் பின் வெளியே வந்த டைரக்டர், ''என்ன அதுக்குள்ள அசந்துட்டீங்க... ஷூட்டிங் போரடிச்சுருச்சா? நீங்க ஸ்க்ரீன்ல பத்து செகண்ட் பாக்கற ஸீனை எடுக்கச் சாதாரணமா ஒரு நாள் கூட ஆகலாம்!'' என்றார் சிரித்துக் கொண்டே.

''நிஜமாவே நீங்க பொறுமைசாலிதான்... அடுத்த கேள்வி... எந்த இந்தியக் குடும்பத்துல கணவன் மனைவியைத் தூக்கித் தட்டாமாலை சுற்றிப் படுக்கைல போடுவான்? இந்த ஸீன் அபத்தமாத் தோணலையா?''

''சினிமாங்கிறது கனவு வியாபாரம் தான்... நிஜ வாழ்க்கைல அனுபவிக்க முடியாததையெல்லாம் திரைல பார்த்து ரசிகன் திருப்திப்படறான். நீங்க பாத்த ஸீன் ஒரு சின்ன ஃபான்டஸி எலிமெண்ட். இந்த ஃபான்டஸிக்கும் ரியாலிட்டிக்கும் சரியான பேலன்ஸ்ஸை மெயின்ட்டெயின் பண்றது தான் ஒரு பெரிய சவாலா நெனக்கிறேன். ஃபான்டஸி அதிகமாகிட்டா படம் மொத்தமும் அபத்தமாப் போயிடும். ரியாலிட்டி தூக்கலா இருந்தா அவார்டு வேணா கெடைக்கும். ஆனா ரசிகன் ஈஸியா ஒதுக்கிடுவான்.''

''இந்தப் படத்தோட கதையைப் பத்திக் கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''மன்னிக்கணும். ஸ்டோரியை இந்த ஸ்டேஜ்ல சொல்றது நல்லதில்லை. ஆனா கதைக்கரு வேணாச் சொல்றேன். கணவன் மனைவிக்கு இடையில உள்ள நுணுக்கமான ஒரு மனோதத்துவப் பிரச்னையை வச்சுப் பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''இதே போல இன்னொரு படம் பண்ணியிருக்கீங்களே...''

''அதே பிரச்னையை இதிலே வித்தியாசமான இன்னொரு கோணத்துல அப்ரோச் பண்ணப் போறேன்.''

மீண்டும் கேமராமேன் வந்து அழைக்க, டேவிட் விடைபெற்றுக் கொண்டான்.

வேண்டாவெறுப்பாக ஒப்புக் கொண்ட போதும் பேட்டி தனக்கே ஒரு வித்தியாசமான அனுபவமாக அமைந்ததை எண்ணி மகிழ்ந்தபடி நேராக வண்டியை வீட்டுக்குச் செலுத்தினான்.

காலிங்பெல் அடித்த சில விநாடிகளில் மனைவி கதவைத் திறக்க பிரமித்தான். மஞ்சள் பட்டு உடுத்தி முழு அலங்காரத்துடன் அவள் நின்றிருந்தாள். முகத்தில் கோபம் மானாவாரியாகப் பரவியிருந்தது. அப்போதுதான் விஷயம் அவனுக்குப் புரிந்தது. மாலையில் விரைவில் வந்து அவளை பீச்சுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தது நினைவுக்கு வந்தது.

''கோபத்துல கூட எவ்வளவு அழகா இருக்கற நீ...''

'அசடு வழியாதீங்க'' என்றவண்ணம் விருட்டென்று உள்ளே சென்றாள்.

எப்படி இவளைச் சமாதானப்படுத்துவது என்று யோசித்த டேவிட், திடீரெனப் பிரகாசமாகி, சமையலறை சென்று அவளை அலேக்காகத் தூக்கிப் பெட்ரூம் கொண்டு சென்று, மூன்று முறை சுற்றி நளினமாகப் படுக்கையில் இறக்கினான்.

அவள் கோபத்தை மறந்து வெட்கத்துடன் முகத்தை மூடிக் கொண்டாள். அவனுக்குத் தங்கரத்னத்தின் வெற்றியின் ரகசியம் புரிந்தது!

அடுத்த பிரதமராகும் வாய்ப்பு யாருக்கு?

o ஜி. வெங்கடேசன், குத்தாலம்.

? அனுபவம், படிப்பினை — விளக்குக. (அரசியலில்தான்)

! பிரும்மாண்ட போஃபோர்ஸ் ஊழலைக் கண்டுபிடிக்க 'ஒரு சப்-இன்ஸ்பெக்டரே போதும்' என்றார் சந்திரசேகர். அவருடைய ஆட்சியைக் கவிழ்க்க இரண்டு கான்ஸ்டபிள்களே போதுமானவர்களாகி விட்டார்கள்! இதைவிடப் பெரிய அனுபவப் படிப்பினை சந்திரசேகருக்குத் தேவையா என்ன!

o எஸ். ராஜா, அயன்புரம்.

? அரசியல்வாதிகள் சொந்த லாபத்தைக் கருதாமல் எப்போதுதான் மக்களையும் நாட்டையும் நினைப்பார்கள்?

! பதவியெல்லாம் இழந்து, கடைசிக் காலத்தில் வீட்டில் அமர்ந்து, மோட்டுவளையைப் பார்க்க நேரும்போது!

o என். கே. ஈசுவரி, பெங்களூர்.

? 'கருணாநிதியைவிட ஜெயலலிதா சிறந்த முதலமைச்சராக இருப்பார்' என்கிறாரே சுப்பிரமணியம் சுவாமி?

! சு. சுவாமி சொல்லிவிட்டார்ல்லவா? இனி என்ன? ஜெயலலிதாவிடம் நமக்கிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் போய் விடும்!

o ஜி. இந்திரா, திருச்சி.

? அரசியல்வாதிகள் மக்களை முட்டாளாக்கிக் கொண்டிருப்பது எப்போது நிற்கும்?

! ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லா மக்களும் தரமான கல்வி அறிவு பெறும் போது. ஆனால் அப்படி ஏதும் நேர்ந்து விடாதபடி ஆட்சிக்கு வருபவர்கள் ஜாக்கிரதையாகவே செயல்படுகிறார்கள்!

o தெ. க. திலீபன், வத்திராயிருப்பு.

? 'ஓர் அரிஜனை முதல்வராக்கக் கருணாநிதி சம்மதித்தால் தி. மு. க. வுடன் உறவு கொள்வதை பா. ம. கட்சி பரிசீலிக்கும்' என்று ராம்தாஸ் கூறியிருப்பது பற்றி?

! ஆண்டவனே! முதல்வர் பதவி, பிரதமர் பதவி, குடியரசுத் தலைவர் பதவி இவற்றுக்கெல்லாம் கூட இட ஒதுக்கீடா? ஆபத்தான சிந்தனை. தகுதியான ஒருவர் பதவிக்கு வந்து, அவர் ஹரிஜனாகவும் இருந்தால் பெருமைப்படுவது வேறு; ஹரிஜன் என்பதற்காக ஒருவரை முதல்வராக்குவது வேறு.

o கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? சந்திரசேகர் அரசைக் கறிவேப்பிலைக்கு ஒப்பிடலாமா?

! அதிலாவது மணம் உண்டு.

o ஆர்க்காடு எழிலன், திருச்சி.

? கவர்னர் ஆட்சியில் சென்னை எப்படி உள்ளது?

! சட்டம் — ஒழுங்கு அபிவிருத்தி அடைந்திருப்பதாக அவர் சொல்கிறார். சென்னையிலோ, ஒவ்வொரு நாளும் வீடு புகுந்து கொள்ளையடிக்கும் சம்பவங்களும், கல்லூரி மாணவிகளைக் கடத்திக் கொண்டு போகும் நிகழ்ச்சிகளும் நடந்த வண்ணம் இருக்கின்றன.

o ஜெ. சரவணன், மதுரை.

? 'ஹிந்துஸ்தானி இசையைத் தென்னகத்தார் ஏற்றுக் கொள்கிறார்கள்; ஆனால் கர்நாடக இசையை வடநாட்டவர் ரசிக்க மறுக்கிறார்கள்' என்று சந்தானம் கூறியிருப்பது பற்றி?

! ஹிந்துஸ்தானி இசைக்குத் தமிழகத்தில் உள்ள அளவு ரசிகர்கள் வடநாட்டில் கர்நாடக இசைக்கும் இருக்கிறார்கள். தென்னகம் என்ற சொல் விரிவானது. ஆந்திரம், ஒரிஸ்ஸா, கேரளம், கர்நாடகம் முதலியவற்றை உள்ளடக்கியது. அங்கேயெல்லாம் பல பகுதிகளில் ஹிந்துஸ்தானி இசை பிரபலமடையச் சரித்திரக் காரணங்கள் உண்டு.

o டி. ஆர். ரவிச்சந்திரன், பின்னத்தூர்.

? தற்போதைய நிலையில் இந்தியாவுக்கு இடைத்தேர்தல் உகந்ததா?

! மீண்டும் ஓர் இழுபறி மக்கள் சபை உருவாகாமல் இருக்குமானால் இப்போ

• படிப்பினை!





• சொல்லிவிட்டார்!

றைய நிலையை விட, உகந்ததான கால கட்டம் தேர்தலுக்கு வேறில்லை என்றே கூறலாம்!

○ எல். மாறன், மேல்பட்டி.

? டி. வி. யிலும் ரேடியோவிலும் கலைஞர் தேசத் துரோகி என்பது போல் சித்திரித்துப் பிரசாரம் செய்யப்படுவதைக் கவனித்தீரா?

! டி. வி. யும் ரேடியோவும் எப்போதுமே 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்' சாதனங்களே!

○ எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

? ராதிகா (தி. மு. க.) பிரசாரத்துக்கு வருவாரா?

! ஸ்டார் அட்ராக்ஷனை விட்டுவிடும் துணிவு தி. மு. க. வுக்கு வராது. ராதிகா வராவிட்டாலும் வரப்படுவார்.

• ஆபத்தான சிந்தனை!





• பிரசாரத்துக்கு வருவாரா?

○ மேலை. பழ. நாகப்பன்,
சென்னை — 41.

? அ. தி. மு. க. தலைமையகத்தில் நிருபர்கள் நுழையத் தடையாமே?


! அ. தி. மு. க. வில் ஜனநாயக நெறிகளுக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் தரப்படும் மதிப்பு அவ்வளவுதான். இதற்கு ஏற்கெனவே பல நிகழ்ச்சிகள் உதாரணங்களாக இருக்கின்றன. இப்போது மேலும் ஓர் எடுத்துக்காட்டு; அவ்வளவே!

○ எஸ். பாலு, கம்பரசம்பேட்டை.

? சந்திரசேகரை ஒரு புழுவாக மதித்த அத்துணை கட்சிகளும் (தி. மு. க. உள்பட) அவரே தேர்தல் வரை பிரதமராக நீடிக்க வேண்டும் என்று கோருவதிலிருந்தே தெரியவில்லையா, அவர் அடிப்படையில் ஒரு நேர்மையாளர் என்று...?

! அட ஆண்டவனே, சந்திரசேகரே நீடிக்க வேண்டும் என்று இவர்கள் கூறுவது அவர் மீது உள்ள விசேஷப் பற்றுதலால் அல்ல. எங்கே, ராஜீவ் காந்தி பிரதமராகி அரசு இயந்திரத்தைக் கைக்குள் வைத்துக் கொண்டு தேர்தல் நடத்துவாரோ என்ற

• காட்டிலே மழை!





• வடக்கும் தெற்கும்...

அச்சத்தில்தான்! அந்த அளவுக்குத்தான் சந்திரசேகரை ஆதரிக்கிறார்களே அன்றி, அதற்கு அப்பால் அல்ல.

○ எஸ். ஸைபுதீன், காஞ்சிபுரம்.

? அடுத்த பிரதமராகும் வாய்ப்பு இன்றைய சூழ்நிலையில் யாருக்கு?

! தேசிய முன்னணி அரசிடம் மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம்; எதிர்க்கட்சி வோட்டுக்கள் பிரிந்து சிதறப் போவது உறுதியாகி விட்ட நிலை — இரண்டும் சேர்ந்து, 'ராஜீவ் காட்டில் மழை' என்பதையே உணர்த்துகின்றன.

○ இரா ஜ. சண்முகானந்தம்,
செம்பராயநல்லூர்.

? 'இடுக்கண் வருங்கால் நகுக' — இன்று யாருக்குப் பொருந்தும்?

! சமீபத்திய வளைகுடாப் போரின் போது, இஸ்ரேல் ஸ்கட் தாக்குதலுக்கு உள்ளாகியது. ஆயினும் ஈராக் மீது அது பதில் தாக்குதல் நடத்த முடியாதபடி அதன் கைகள் அமெரிக்காவால் கட்டிப் போடப்பட்டன. அப்படியிருந்தும், விஷவாயுக்கான முகமூடிகளைக் கையில் எடுத்துக் கொண்டே நடமாடிய இஸ்ரேலியர், அடிக்கடி ஜோக் அடித்துக் கவலையை மறந்தனர்! உதாரணத்துக்கு இரண்டு:

○○ "அமெரிக்கர்கள் எத்தனை ஸ்கட் ஏவுகணைத் தளங்களைத் தகர்த்தார்கள்?"

"ஈராக்கின் இருநூறு தளங்களில் எழுநூறை நொறுக்கித் தள்ளிவிட்டார்கள்!"

○○ "ஈராக்கின் ஏவுகணைகளால் இஸ்ரேலியர் மரணம் அடையும் வாய்ப்பு எப்படி?"

"அரசு லாட்டரியின் பம்பர் குலுக்கலில் முதல் பரிசு விழும் வாய்ப்பு எப்படியோ, அப்படி!"

• **ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ஆற்காடு எழிலன்,
ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர்,
திருச்சி — 2.

நீங்கள் கேட்டவை — தராசு

சொக்கட்டான்

சுதந்திர பாரதத்தில்
சொக்கட்டானை விட்டுவிட்டு
எப்படி ஹாக்கிக் கட்டைக்கு
மகுடம் சூட்டினார்கள்?

எப்படியோ போகட்டும்
இப்போது நடக்கிறது.
தில்லிப் பெருநகரில்
தினமும் பகடைப்போர்!

சூதும் சுயநலமும்
வாயடியும் ஊழல்களும்
அரசோச்சும் திகழ்நாளில்,
வனவாசம் மட்டும்
ஆண்டுகள் உறுதியின்றி
இஷ்டம்போல் நிகழ்கிறது!

'ஒரு நாடாவது,
ஓர் ஊராவது,
ஒரு கிராமமாவது' என்று
கெஞ்சிய பாண்டவர்கள் —
சந்ததி மாறிப்போய்
'ஒரு மணி நேரமாவது
மந்திரி பதவி' என்று
கெஞ்சுகிற ஜனநாயகம்
கொடிகட்டிப் பறக்கிறது!

'யார் காலைப் பிடித்தேனும்
ஊர் கோலம் போவேன்' எனத்
தன்மானம் தரைபடியும்
தலைவர்கள் வழிகாட்டச்
சொக்கட்டான் மோகத்தில்
தருமத்தைக் கவிழ்த்துவிட
சகுனிகள் ஏராளம்.

தீ வைக்கும் துரோபதையும்
துகிலுரியும் சீதைகளும்
வனவாச இராவணனும்
கல்லாகும் இராமர்களும்
குதிதவறும் அர்ஜுனனும்
குறுக்குவழிக் கிருஷ்ணர்களும்...

புதிய புராணங்கள்
புகழ்சேர்க்கும் அவசரத்தில்
''யாரங்கே 'தேர்ப்பாகன்'?''
எனத்தேடி மனம் அலையும்!

— பாலா. சித்தார்த்தன்



"கல்கி வாசகர்களே உஷார்!"

வட்டமேஜை

○ இராப் போர் நடத்திச் சுகம் கண்ட சதாம் தேச நாட்டின் கோரத் தாக்குதலுக்கு ஈராக்கைச் சிக்க வைத்த கொடுமையைத் தலையங்கம் நன்றாகவே சாடியுள்ளது. அடங்கி ஒடுங்கி விட்ட சதாமின் படையோடு மேலும் மேலும் தாக்குதல் நடத்திய அமெரிக்காவின் பழி தீர்க்கும் செயலையும் கண்டித்து விட்டீர்கள்!

கருமத்தம்பட்டி. அ. இராஜப்பன்.

○ 'இண்டர்நேஷனல் லெவலில் எழுதிய உங்கள் தலையங்கத்தில் கூட 'ராஜீவை' ஒரு பிடி பிடிப்பதற்கு ஒரு சான்ஸ் கிடைத்து விட்டதே!

திருச்சி — 8. பொன். இரவிச்சந்திரன்.

○ தலையங்கத்தில், 'இரு தரப்பிலும் நவீனப் போர்க் கருவிகள் பயன்படுத்தப்பட்டு, அவை நன்கு இயங்குகின்றனவா என்பதை நிர்ணயிக்கும் சோதனைக்களமாக, யுத்த பூமி விளங்கியதுதான் நிகர லாபம்...' என்ற வரிகளைப் படித்ததும், அதற்காக, ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலி கொடுத்து விட்டார்களே என்று மனம் தழுதழுத்தது.

புதுவண்டிப்பாளையம், த. ரவீந்திரன்.

○ பூங்கொத்துக்களை விற்கும் கடைகளைப் பற்றிக் கல்கி இதழில் மலர்ந்துள்ள கட்டுரை ரம்யமானதாக இருந்தது. இத் தொழிலுக்கு மலரும் எதிர்காலம் இருப்பதை, வளர்ந்து வரும் வரவேற்புக் கூறுகிறது. சென்னையைத் தவிர மற்ற தமிழகத்து நகரங்களிலும் இதை அறிமுகப்படுத்துவதற்கு உங்கள் கட்டுரையே ஒரு காரணமாக இருக்கும்.

வேலூர் 4. கே. பி. சாரதி.

○ பூங்கொத்துக்களின் விலை அதிகமாயிருக்குமோ என எண்ணி, இதுபோன்ற கடைகளுக்குள் நுழையப் பயந்த நான், உங்கள் கட்டுரையைப் படித்த பிறகு, இனி யாருக்காவது பரிசு வழங்க வேண்டுமானால் பூங்கொத்துக்களையே வழங்குவது என முடிவு செய்து விட்டேன்!

சென்னை — 91. எல். ஆர். விஜயகுமார்.

○ 'வண்ண மலர்களில் வளமான வியாபாரம்' கவர் ஸ்டோரியைப் படித்து மகிழ்ந்தோம் என்பதை விட தெரியாத ஒரு வியாபாரத்தைத் தெரிந்து கொண்டோம் என்பதே சரி.

தக்கோலம், பி. அ. முஸ்தபா கமால்.

○ கட்சி, ஜாதி, இனம், பதவி எனும் தடைகளைக் கடந்து, ஊருக்கு உண்மையாய் உழைக்கும் கள்ளிகுளத்துக்காரரான மிக்கேலை அடையாளம் காட்டிய கல்கிக்கும் பரிந்துரைத்த வாசக அன்பருக்கும் சபாஷ்.

மாணம்புச்சாவடி, இரா. ஆதிநாராயணன்.

○ அரசியலிலும், பொது வாழ்விலும் மிகச் சிறந்த நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கல்கி மூலமாகத்தான் அறிய முடிகிறது!


திருச்சி — 20, பா. கனிக்குமார்.

○ பாரதிபாலன் எழுதிய 'நடிகன்' கதை உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. சினிமாக் கடலில் எத்தனையோ திறமை உள்ளவர்கள் இப்படித்தான் 'சென்டிமென்ட்' என்னும் மூடத்தனத்தால் மூழ்கிக் காணாமல் போகிறார்கள்.

பட்டுக்கோட்டை, ராம்குமரன்.

○ நடமாடும் ஜவுளிக் கடை வியாபாரிகளும் நாட்டையே வியக்க வைக்கும் அளவுக்குக் கடை வைத்து நடத்த முடியும் என்பதற்கு பர்கூர் வியாபாரிகளே மிகச் சிறந்த உதாரணம்.

மதுரை. ஏ. எஸ். முத்து.



○ ''நாங்கள் பொறுமையோடு பொறுமையையும் முதலீடு செய்திருக்கிறோம்'' என்ற வாசகம் உண்மையிலேயே என்னை மெய் சிலிர்க்க வைத்து விட்டது.

நெய்ப்பாலூர், பி. ஆர். ராஜகோபால்.

○ இசையுயர்ந்தாலும் பாடலின் தரம் உயரவில்லை என்பதை மாணவர்கள் பல்வேறு ஆதாரங்களுடன், ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியிருந்த விதம் அருமை!

வேலாயுதம்பாளையம், எம். குணசேகரன்.

○ 'பரீட்சைக்குப் படிப்பது எப்படி?' கட்டுரை பொருத்தமான நேரத்தில் வெளிவந்திருப்பதால் என் போன்ற அஞ்சல் வழிக் கல்வி பயில்பவர்கள் உட்பட அனைத்து மாணவ, மாணவியரும் தங்களை மனமாரப் பாராட்டுவார்கள்.

திண்டுக்கல், பழ. சேதுராமன்.

○ கல்கி வாசகர்களே உஷார்! பாக்கியம் ராமசாமியின் ஸ்கட் ஏவுகணைத் தொடர், நகைச்சுவை வெடிகளை ஏற்றிக் கொண்டு உங்களை நோக்கி வந்து தொடர்ந்து தாக்குதல் நடத்தவிருக்கிறது. எனவே, அளவுக்கதிகமாகச் சிரித்து வயிற்றுவலி ஏற்படாமலிருக்க அனைவரும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை — 13, தக்கோலம் புகாரி.

○ 'நான் புடிச்ச மாப்பிள்ளை' விமர்சனத்தில் படத்தின் முடிவை அமைத்த விதம் பற்றிய உமது கருத்து, மிகவும் உண்மை!

அயன்புரம், த. சத்திய நாராயணன்.

○ 'நிழற்குடை' சிறுகதையில் வழக்கமான கருத்தையும் சம்பவங்களையுமே குறிப்பிட்டிருந்தாலும் 'கபா' அதைக் கூறிய தன்மையும், நளினமும் சிறப்பாக இருந்தது.

திருச்சி — 2, பி. சித்ரா தேவி.

ஆசிரியர் பக்கம்:

துஷ்டனைக் கண்டால் தோளில் கைபோடு!

நான் பள்ளிக்கூடத்தில் படித்த போது எனக்கு நெருங்கிய நண்பன் ஒருவன் இருந்தான். பள்ளிப் படிப்புக்குப் பிறகு நான் கல்லூரியில் சேர, அவன் ஒரு பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தான். அவனைச் சந்திப்பதற்காகவே அந்தப் பெட்ரோல் பங்கை நாடிச் சென்று என் மோட்டார் சைக்கிளுக்குப் பெட்ரோல் போட்டுக் கொள்வேன். ஒருநாள் அவனைக் காணோம்! விசாரித்ததில், அவன் பங்கில் பணத்தைக் கையாடி விட்டதாகத் தெரிந்தது! கூச்சத்துடன் வீடு திரும்பினேன். மறுநாள் ஒரு போலீஸ்காரர் என் வீட்டு வாசலுக்கு வந்து, "நீங்கள் பணத்தை ஈடு செய்வதானால், உங்கள் நண்பன் மீது வழக்குப் பதிவு செய்யாமல் விட்டு விடுவதாகப் பெட்ரோல் பங்க் காரர் சொல்கிறார்'' என்றார். நான் சங்கடத்துடன் நெளிந்து, "ஸாரி, நான் தலையிட விரும்பவில்லை'' என்றேன். அதன் பிறகு அந்த நண்பனை எங்கேயாவது யதேச்சையாகச் சந்திக்க நேர்ந்தால் கூடத் தலையைத் திருப்பிக் கொண்டு போய் விடுவேன்!

இதுதான் மனித இயல்பு. பொதுவாக ஒரு நபர் மோசமானவர் என்று தெரிய வந்தால் ஒதுங்கி விடவே தோன்றும். குடிகாரன், சூதாடி, திருடன் என்றால், "அவனோடு சேர்ந்து நாமும் கெட்டுப் போய் விடக் கூடாது'' என்ற எச்சரிக்கை உணர்வு மேலோங்கும். "துஷ்டனைக் கண்டால் தூர விலகு'' என்ற பழமொழி ஏற்பட்டதே இதனால்தான்.

ஆனால் இன்றைக்கு நமது அரசியல் தலைவர்கள் துஷ்டனைக் கண்டால் தூர விலகுவதற்குப் பதில் தோள் மேல் கைபோட்டுக் குலாவுகிறார்கள்! சமீபத்திய உதாரணம் ஓம் பிரகாஷ் சௌதாலா. துணைப் பிரதமரின் மகன்; ஹரியானா முதல்வரைப் பின்னணியிலிருந்து ஆட்டி வைப்பவர். சரித்திரப் பிரசித்தி பெற்ற மேஹம் அத்தியாயங்களை எழுதி வி. பி. சிங் வீழ்ச்சிக்குப் பிள்ளையார் சுழி போட்டார். ராஜீவ் காந்தி விட்டெதிரே, ஹரியானா ஸி. ஐ. டிக்களை நிறுத்திச் சந்திரசேகர் ஆட்சி கவிழவும் காரணமானார். ஹரியானா மக்களின் எதிர்ப்பையும் மீறி டிஸ்னிலாண்டு உருவாக்குவதில் குறியாக இருக்கிறார். எல்லாம் போகட்டும் என்றால் அவர் சமீபத்தில் லண்டன் சென்று கஷோகி இல்லத்தில் தங்கியிருந்து அவர் நல்லாசிகளுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு "விடுமுறையை'' ஜாலியாக அனுபவித்துவிட்டு வந்திருக்கிறார்!

கஷோகி எப்படிப்பட்டவர்? 'யாருக்கு விற்கிறோம்? எதற்கு?' என்றெல்லாம் பாராமல், யார் கேட்டாலும் நவீன யுத்த தளவாடங்களை விற்றுக் கமிஷன் அடிப்பவர். அதர்ம யுத்தங்களுக்குத் துணை போகிறவர். பல்வேறு நாட்டு அரசுகளின் பார்வையில் கேவலமானவர். இத்தகைய சந்தேகத்துக்குரிய பேர்வழியுடன்தான் சிநேகம் கொண்டாடுகிறார் சௌதாலா!

இதைவிடப் பெரிய வெட்கக் கேடு, கஷோகி புதுதில்லியில் கலந்து கொண்ட ஒரு விருந்தில், பிரதமர் சந்திரசேகரும் கலந்து கொண்டதாகும். அதுமட்டுமல்ல; "விருந்து என்றால் பலதரப்பட்டவர்களும் வரத்தான் செய்வார்கள். அவர்களுடன் பேசிப் பழகுவதில் என்ன தவறு?'' என்று கேட்கிறார் சந்திரசேகர்!

மேலும் பெரிய அதிர்ச்சி ஒன்றும் உண்டு! அது, ராஜீவ் காந்தி சமீபத்தில் மாஸ்கோவுக்கும் டெஹ்ரானுக்கும் பறந்து செல்ல, கஷோகியின் சொந்த விமானத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதுதான்! பெட்ரோல் கூட கஷோகி உபயமே!

நமது நாட்டில் 'சட்டம்' என்ற சொல்லை விடத் 'தர்மம்' என்ற வார்த்தையே மக்களை அதிகமாக நல்வழிப்படுத்தி வந்திருக்கிறது. நமது இன்றைய தலைவர்களோ, தர்மத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, சட்டத்தை மீறவும் மக்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து கற்றுத் தருகிறார்கள். நாளை, கொலைகாரர்களும், திருடர்களும் நீதிபதிகளுக்கு விருந்து வைத்தாலும் வியப்பதற்கில்லை!

தேர்தல் வருகிறது. எந்தக் கட்சியானாலும் வேட்பாளர்களில் பத்தில் ஐந்து பேராவது குண்டர்களாகவும், கயவர்களாகவும், கறுப்புப் பண ஆசாமிகளாகவும் இருக்கப் போகிறார்கள். நாட்டின் எதிர்காலம் பற்றி நமக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது?

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/-; விமானத் தபால் ரூ. 350/-.

இவ்விழாக்காலத்திலே உங்கள் இல்லத்திற்கு வண்ணம் பூசுவீர்.



உங்கள் இல்லக் கனவை நனவாக்குவீர். ஆனால் உங்கள் இல்லத்திற்கு வண்ணம் பூசும் முன்பு உங்கள் எண்ணத்தில் எண்ணற்ற வினாக்கள் எழலாம். என் வீட்டிற்கு டிஸ்டெம்பர் அல்லது எமல்ஷன் பூச என்ன செலவாகும்? என் வீட்டு ஹாலுக்கு எந்த வண்ணம் சிறப்பாக இருக்கும்? பூச்சு வேலை முடிந்ததும் அதிலுள்ள குறைகளை எப்படி சரிப்படுத்த முடியும்?

ஏஷியன் பெயிண்ட்ஸ் உங்கள் பிரச்சினைகளை நன்கு அறியும். உங்கள் இல்லக்கனவை நனவாக்க உதவிடும் வகையில் ஒரு கைப்புத்தகம் தயாரித்து உள்ளது. ''**உங்கள் இல்லத்திற்கு மிகச் சிறப்பாக வண்ணம் பூச — லட்டுவின் வழிகாட்டி**'' என்ற 16-பக்க கலர் புத்தகம், வண்ணம் பூசுவதில் உள்ள எல்லா விபரங்களைப் பற்றிய நடைமுறைக் குறிப்புகளைக் கொண்டதாகும். அதிலே பட்ஜெட், கலர் தேர்வு, பெயிண்டர் தேர்வு, வண்ணம் பூசும் முறை இன்னும் பல விபரங்கள் அடங்கியுள்ளது.

ஏஷியன் பெயிண்ட்ஸ், உங்கள் இல்லத்திற்கு நீடித்த எழில் வழங்கிட எப்போதும் உங்களோடிருக்கும். எவ்வித பரப்பிற்கும் ஏற்ற வண்ணம், விரிவான ஷேடு அணிவரிசை மற்றும் நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் தேவைகளை நிறைவேற்றிட நாடெங்கிலும் விரிவான டீலர் அமைப்பு முறை எங்களிடம் உள்ளது.

ஆகவேதான் நாடெங்கிலும் இதர பெயிண்டுகளை விட ஏஷியன் பெயிண்ட்ஸை தேர்ந்தெடுக்கும் இல்லங்கள், ஆண்டுக்கு ஆண்டு அதிகம் பெருகுகின்றன.

வாருங்கள் எங்களோடு கொண்டாடுங்கள்.

''**லட்டுவின் வழிகாட்டி**'' இலவச புத்தகம் பெற்றிட இக்கூப்பனை நிறைவு செய்து இம்முகவரிக்கு அனுப்புங்கள்.

பிராடக்ட் மேனேஜர், ஏஷியன் பெயிண்ட்ஸ்
தபால் பெட்டி எண்: 11701, பம்பாய்-400 021.

எங்களோடு கொண்டாடுங்கள்
ஏஷியன் பெயிண்ட்ஸ்

பெயர் ______________________

முகவரி ______________________

____

பின் ☐☐☐ ☐☐☐

வருமானம் ☐ 1500-2500 ☐ 2501-3500 ☐ 3501-5000 ☐ 5001 +

KAL1

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka